# டாக்டர் அல்லி

(நாடகம்)

மு. வரதராசன்

டி க. கணபதி

# டாக்டர் அல்லி

(நாடகம்)

1269 — 223

கதை :

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

நாடக அமைப்பு :

டி. கே. கணபதி
நாடகப் பொறுப்பாளர், அருணகிரி இசைக்கழகம்,
திருநெல்வேலி.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

விற்பனை உரிமை.

**பாரி நிலையம்**

59, பிராட்வே, சென்னை - 1

ரூ. 2—0—0

நவம்பர் 1955

உரிமை ஆசிரியர்க்கு

93

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

# அணிந்துரை

பேராசிரியர் திரு. மு. வரதராசனுர் அவர்களின் கருத் தோவியம் அல்லி. இதனை நாவலாகப் பலமுறை படித்திருக் கிறேன். இப்போது நாடகமாகவும் வெளிவந்துள்ளது. இத் திருப்பணியைச் செய்துதந்தவர் திரு. டி. கே. கணபதி அவர்கள்.

நெல்லை அருணகிரி இசைக்கழகத்தார் இந் நாடகத்தை மேடையில் நடித்தனர். அரங்கிலும் 'அல்லி'யைக் காணும் பேறு பெற்றேன்; அகமகிழ்ந்தேன். 'அல்லி' ஓர் நல்ல நாடகம்.

நாவலை நாடகமாக்கிய நண்பர் கணபதி அவர்கள் மேடை நடிப்பிலும் பங்கு கொண்டார். சுப்புரத்தினம் பாத்திரத்தை ஏற்று அற்புதமாக நடித்தார். நடிக்கும் ஆற்றலுடையவர் நாடகத்தை அமைத்திருப்பதால் நாவலின் சாரம் முழுவதும் நாடகத்திலே கிடக்கின்றது.

நெல்லையிலே பார்த்த நாடக அல்லியை இன்று படித் தும் மகிழ்வுற்றேன். நடிக்கப்பெறும் நாடகங்களிற் பல படிப்பதற்குரியனவாக அமைவதில்லை. நடிக்கவும் படிக்க வும் தகுதியுடையதாக நாடகம் அமையுமாயின் அதுவே சிறப்புக்குரியது. அப்போதுதான் நாடகம் இலக்கியமாக வும் வளர இடமுண்டு. நடிக்கவும் படிக்கவும் இலக்கியத் திலே இடம் பெறவும் தகுதி வாய்ந்த நாடகம் 'அல்லி.'

நாடகம் வெறும் அழகுக் கலையன்று; மக்களைச் செயல்படத் தூண்டும் அறிவுக்கலை. நாடகத்தால் நாட்டு மக்களை வாழ்விக்க வேண்டும்; பாழ்படுத்தக் கூடாது. நல்லெண்ணங்களை எழுப்பவே நாடகம் பயன்பெற வேண்டும். ஆகவே, நல்லவர்கள் நாடகம் எழுதவேண்டும்.

அன்பர் கணபதி அவர்கள் பண்புள்ள இளைஞர். ஆசிரியர் வரதராசனார் அவர்களின் அரிய கருத்தோவிய மான அல்லியை அவர் படித்தார். அப் பெருங்கதையின் முழுப்பயனையும் மக்கள் பெறவேண்டுமானால் நாடகமாக்கி நடிக்க வேண்டுமென எண்ணினார்; எண்ணியதைத் திறம் படச் செய்துமுடித்தார். அவரை வாழ்த்துகிறேன்.

அல்லி நாடகம் அனுபவப் பேருண்மைகள் நிறைந்து கிடக்கும் அறிவுக்களஞ்சியம். ஆசிரியர் அறவாழி என்னும் பாத்திரப் படைப்பிலே நமது பேராசிரியர் வரதராசனார் அவர்கள் நின்று அனைவருக்கும் அறிவுரைகள் வழங்கு கின்றார்.—

> இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். வாழ்க்கையில் ஒரு பொழுதுபோக்கு இருக்க வேண்டும். இல்லையானால் இளமை எண்ணங்கள் சும்மா இருக்க முடியாது. நாடி நரம்புகளின் ஆசையைப் பற்றி அலைத்து உடலைக் கெடுத்துவிடும்.......நாள்தோறும் தன் முகத்தையும் தலையையும் ஒழுங்குபடுத்திக்கொள்வது போல், தன் உள்ளத்தை யும் ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். தலைவாரி அமைத்துக் கொள்ளக் கண்ணாடி வேண்டும்; அதுபோல் உள்ளத்தை ஒழுங்குபடுத்த நாட்குறிப்பு எழுதும் வழக்கம் வேண்டும். நாள் தோறும் வாழ்க்கையில் உணர்ந்தவைகளை நாட்குறிப்பில் எழுதி வைக்கவேண்டும். அது வாழ்க்கையில் திருந்துவதற்குச் சிறந்த வழியாகும்.

ஆசிரியர் அறவாழி கூறும் இந்த அறிவுரைகள் நாடகத்திலே வரும் இளைஞன் சோமுவுக்கு மட்டும் கூறுவ தன்று; நாட்டிலே நல்வழி தெரியாமல் நடமாடித் திரியும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்குக் கூறும் நல்லுரை களாகும்.

> கொள்கைகளைப் பற்றிக் கவலை இல்லாத கூட்டத்தார் ஒரு சாதி. உயர்ந்த குறிக்கோளுக்காக அளவான வாழ்க்கை

> நடத்தவேண்டும் என்று நினைக்கிறவர்கள் முற்றிலும் வேருன சாதி. இந்த இரு சாதியாருக்குள்ளும் கலப்பு மணம் கூடாது

என்று ஆசிரியர் அறவாழியின் வாயிலாகப் பேராசிரியர் வரதராசனுர் அவர்கள் கூறுகிருர்.

ஆம்; உண்மைதான். எளிய வாழ்க்கையில் இன்பம் காண விழையும் மெல்லியலாள் அல்லி. உடலின் வளத்தையும் உடையின் வளத்தையும் பார்த்து மகிழ்ந்து பெண்களைத் தேடித்திரிந்த பித்தன் சுப்புரத்தினம். இவ்விருவரும் முற்றிலும் வேறுபட்ட இரு சாதியினர். இந்த இரு சாதியினரையும் கலப்பு மணத்தால் பிணைத்தனர். விளைவு என்ன? அதைத்தான் தமிழுலகுக்கு எடுத்துக்காட்டுகிறது அல்லி நாடகம்.

> போலிப் புத்தகங்களைப் படித்துவிட்டுத் தவருன எண்ணங்களை வளர்த்துக்கொண்டேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னே இந்தப் புத்தகம் கிடைத்திருந்தால் என் வாழ்க்கை கெட்டிருக்காதே!

என்று இறுதியிலே கதறுகிருன் சுப்புரத்தினம்.

சுப்புரத்தினம் இறுதியில் பெற்ற இந்த அறிவை இளைஞருலகம் முதலிலேயே பெறவேண்டும். அட்டைப் படத்தின் கவர்ச்சியிலே மயங்கி நஞ்சை விலைகொடுத்து வாங்கி அறிவை உணர்ச்சிக்கு அடிமையாக்கி உருக்குலைந்து போகாமல் நம் ஆசிரியரை யொத்த அறிஞர்கள் எழுதியுள்ள நல்ல புத்தகங்களைப் படித்துச் சிறந்த குறிக்கோளுடன் வாழ முயல வேண்டும்.

> மனம் எவ்வளவு உயர உயரப் பறந்தாலும் உடம்பு அதை மண்ணுக்கே இழுத்துவரும். உடம்புக்கும் உள்ளத்துக்கும் போராட்டம் நிகழ்வது இயற்கை. உணர்ச்சிகள் சான்ருேர்க்கும் உண்டு; கயவர்க்கும் உண்டு. கயவர் இயற்கைக்கு எளிதில் இரையாகிருர்கள். சான்ருேர் அறிவின் வன்மையால், அறத்தின் நம்பிக்கையால் இயற்கையோடு போராடுகிருர்கள்;

வெல்கிறார்கள்...............நல்லவர்களின் உடம்பு நிற்பது இந்த மண்ணின்மேல் அல்ல ; வானளாவிய ஒழுக்கம் என்னும் மலைச் சிகரத்தின்மீதுதான்.

ஆசிரியர் வரதராசனார் அவர்கள் அறவாழியின் வாயிலாக இவ்வாறு எத்தனையோ பேருண்மைகளை எடுத்துக் கூறி நமக்கு நல்வழி காட்டுகிறார். நாடகத்திலே அல்லி எழுதிய 'எது குற்றம்', எத்தனையோ பேர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப் படுத்தும் மருந்தாக இருந்தது. ஆசிரியர் வரதராசனார் அவர்களின் கருத்திலே நாவலாக மலர்ந்து, அன்பர் கணபதி அவர்களின் கைவண்ணத்தால் நாடகமாக உருவான 'அல்லி' தமிழ்மக்களின் மன நோய்களை அகற்றும் மருந்தாக விளங்கும் என்பதற்கையமில்லை.

பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கட்கும் அன்பர் திரு. கணபதி அவர்கட்கும் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

**டி. கே. சண்முகம்**

மன்மத - ஐப்பசி - உ௩உ

'அவ்வையகம்'
சென்னை - 6

# நாடக உறுப்பினர்கள்

அல்லி — கதைத் தலைவி
சிவக்கொழுந்து — அல்லியின் தந்தை
சோமசுந்தரம் — அல்லியின் அண்ணன்
சுப்புரத்தினம் — ஓர் எஞ்சினீயர் - அல்லியின் கணவர்
அறவாழி — ஓர் ஆசிரியர்
குள்ளன் — வேலையாள்
இன்பவல்லி — அல்லியின் தோழி
பரமேசுவரி — மருத்துவர்(டாக்டர்),அல்லியின்தோழி
சியாமளா — குடும்பமாய் வாழும் பரத்தை
ஆ'பா — வயதான ஓர் அம்மையார்
அத்தை — சுப்புரத்தினத்தின் அத்தை

தரகர், வியாபாரிகள், சுகுமாரன், அவன்மனைவி, டாக்டர், குள்ளனின் நண்பன், தலைமை ஆசிரியர், விஞ்ஞான ஆசிரியர், வேலைக்காரி வள்ளி, துப்பறிவோர் (சி. ஐ. டி.) போலீசு, பழைய புத்தகம் விற்பவன், கார் டிரைவர், மற்றும் சிலர்.

# பண்புகள்

**டாக்டர் - அல்லி :** எளிய வாழ்க்கை-அளவான வாழ்க்கை-வாழ விரும்புபவள்.

**சுப்புரத்தினம் :** ஓர் எஞ்சினீயர் ; அல்லியின் கணவன் ; எப்படியாவது வாழ வேண்டும், ஆடம்பரமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் ஊறியவன்.

**சோமசுந்தரம் :** அல்லியின் தமையன் ; அழிவு நெறியில் சென்றுவிட்ட, அல்லது, செல்ல நினைக்கிற இளைஞர்களுக்கு எச்சரிக்கை தரும் வழிகாட்டியாக விளங்குகிறான்.

**சிவக்கொழுந்து :** அல்லியின் தந்தை ; தம் மக்கள் நல்லபடி வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

**அறவாழி :** ஓர் ஆசிரியர் ; அல்லியின் குடும்பத்தாருக்கு அறிமுகமானவர்; மனித இனத்துக்கே நம்பிக்கை ஒளி ஊட்டும் சான்றோர்.

**இன்பவல்லி :** அல்லியின் தோழி ; மணிமேகலை என்ற ஒருத்தி எப்படி வாழ்ந்திருப்பாள் என்பதை விளக்க வல்லவளாக ஒளிர்கிறாள்.

## காட்சி : 1

**இடம் :** சிவக்கொழுந்து வீடு.

**காலம் :** காலை.

**மாந்தர் :** சிவக்கொழுந்து, ஆயா, சோமசுந்தரம், அல்லி, பரமேசுவரி.

[சிவக்கொழுந்து கடைக்குப் புறப்படும் நேரம். ஏதோ ஆழ்ந்த எண்ணத்தோடு அங்கும் இங்கும் உலாவிக் கொண்டே நிற்கிறார். பக்கத்து வீட்டு ஆயா அங்கு வருகிறாள்.]

**சிவக்கொழுந்து :** (சோர்வாக) வாங்க ஆயா !

**ஆயா :** என்னங்க இன்னும் கடைக்குப் புறப்படலையா ?

**சிவக் :** புறப்பட்டாச்சு. இந்தப் பையன் சோமு நேற்று மாலை வெளியே சென்றவன் இன்னும் வரவில்லை.

**ஆயா :** (திடுக்குற்று) அய்யோ! எங்காவது தேடிப்பார்க்காமல் இப்படி நின்றுகொண்டிருந்தால்...

**சிவக் :** அவன் என்ன சின்ன குழந்தையா ? தேடிப் பார்ப்பதற்கு ! (தொண்டை குழைந்து பேசுகிறார்) ஆயா ! அவன் இப்பொழுது கொஞ்ச நாட்களாகவே ஒரு மாதிரியாக அலைகிறான் ; ஒழுங்கு, தெளிவு, முயற்சி, ஊக்கம் ஒன்றுமில்லை ; அவனுடைய பழக்க வழக்கமும் சரியாக இல்லை. எந்நேரமும்...

**ஆயா :** (கையைக் காட்டி) அதோ ! சோமு வந்துவிட்டானே!

(சோமசுந்தரம் வருகிறான். சிவக்கொழுந்து பேச்சை நிறுத்துகிறார். தந்தையைக் கண்டதும் சோமு திடுக்குற்று நின்று பின் விறுவிறுப்பாக வீட்டினுள்ளே போகிறான்.)

**சிவக் :** சோமு !

சோமு : (பயத்துடன்) என்னப்பா ?
சிவக் : நேற்று இரவு எங்கேயடா போயிருந்தாய் ?
சோமு : (உண்மையை மறைத்து) ஒரு நண்பன் வீட்டிலே படிக்கப் போயிருந்தேன். அங்கேயே படுத்துக்கொண்டேன். (சட்டென்று உள்ளே போகிறான்.)
சிவக் : (கோபமாக) சொல்லிவிட்டுப் போகக் கூடாதா ? (ஆயாவிடம் பேசுகிறார் ; அல்லி மறைவாகப் பின்னே வந்து நின்று அவர்கள் பேசுவதைக் கேட்கிறாள்.) இந்தப் பையன் எப்படிப் பிழைக்கப் போகிறான் என்றே தெரியவில்லை. (அமைதி) ஆயா ! இவனைப்பற்றிக்கூட எனக்குக் கவலையில்லை. ஆனால் அல்லியைப்பற்றித்தான் கவலையாக இருக்கிறது.
ஆயா : என்ன செய்வது? நானும் சொன்னேன்; இவ்வளவு படித்ததே போதும் அம்மா என்றேன். படிப்பை இடையிலே நிறுத்தலாமா என்று அழுகிறாள் ?
சிவக் : ஆயா ! அவளுடைய அம்மா இருந்திருந்தால் அவளைப் பத்தாவது கூடப் படித்திருக்க விட்டிருக்க மாட்டாள். நாம் நினைக்கிறது போல் உலகம் இல்லை. உலகத்தில் படித்த பெண்ணுக்கு மாப்பிள்ளை கிடைப்பது அரிதாக இருக்கிறது !
ஆயா : (பெருமூச்சு விட்டு) நீங்கள் சொல்வதும் சரிதான். விரலுக்குத் தக்க வீக்கம் வேண்டும்.
சிவக் : எவ்வளவோ அனுபவம் இதில் அடங்கியிருக்கிறது. அல்லி டாக்டருக்குப் படிப்பது அளவுக்கு மீறியது தான். (ஏக்கத்துடன்) மிகுதியாகப் படித்த பெண்கள் சிலர் திருமணம் ஆகாமல் காலம் கழிக்க வேண்டிய காட்சி பலவற்றைக் கண்டுதான் அவ்வாறு எண்ணுகிறேன். (எழுந்து) கடைக்கு நேரமாகிவிட்டது. வருகிறேன். (கையில் குடையுடன் வெளியே செல்கிறார்.)
(அல்லி புத்தகங்களுடனும் நாடிக் குழாயுடனும் வெளியே புறபபடுகிறாள்.)

ஆயா : அம்மா அல்லி !

அல்லி : (சென்றவள் திரும்பி) என்ன ஆயா ?

ஆயா : பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிட்டதா ?

அல்லி : இல்லை ஆயா, என்ன வேணும் ?

ஆயா : அம்மா ! (அல்லியின் தோளைத் தொட்டு) உன்னைப் பற்றித்தான் உங்கள் அப்பா எந்நேரமும் கவலைப் படுகிறார் ; அண்ணனைப் பற்றிக்கூட அவ்வளவு கவலை இல்லையாம்.

அல்லி : ஆயா ! இதுதான் பெற்ற தந்தையின் மனமா ? மகனுக்கு ஒரு வகை மனம், மகளுக்கு ஒருவகை மனமா ? ஏன் ஆயா ? நான் நன்றாகப் படிப்பதில்லையா? சொன்னபடி கேட்பதில்லையா ? அண்ணன்தான் படிப்பதும் இல்லை ; சொன்னபடி நடப்பதும் இல்லை.

ஆயா : (சிரித்து) அவனுக்கு என்ன ? எந்த வீட்டிலாவது ஒரு பெண்ணைப் பார்த்துக் கட்டிவிட்டால், அந்த வீட்டில் மகனுக்கு மகனாய் மருமகனைப் பார்த்துக் கொள்வார்கள். ஆனால் உன் கதையைச் சொல்லு.

அல்லி : எனக்கும் அதே கதைதானே ! ஆணுக்கு ஒரு சட்டம், பெண்ணுக்கு ஒரு சட்டமா ?

ஆயா : (பெருமூச்சு விட்டுத் தலையை அசைத்தபடியே) அறியாத வயசு. உனக்கு என்னம்மா தெரியும் ? பெண்ணைப் பெற்று வளர்த்தால் நெருப்பை மடியில் கட்டிக்கொண்டது போல என்பார்கள். உங்களுக் கெல்லாம் வேடிக்கையாகவே இருக்கிறது. பெற்றவ னுக்குத் தானே தெரியும் சுமை !

அல்லி : ஆயா ! பெண்ணாய்ப் பிறந்தால் கட்டாயம் திருமணம் ஆகித் தீரவேண்டுமா ? திருமணம் இல்லாமல் தனிவாழ்க்கை நடத்தித் தொண்டு செய்து விட்டுச் சாகக் கூடாதா ?

ஆயா : அம்மா! பெற்றோருக்கு உள்ள கவலைகளில் இது ஒன்று. பெண்ணுக்கு நல்ல இடம் வாய்க்கவேண்டும். திருமணம் செய்து முடிக்க வேண்டும் என்பது.

அல்லி : நல்ல உலகம்! பிறக்கும்போதே பெண் குழந்தைகளின் கழுத்தில் தாலிக்கயிறு இருந்தால் நன்றாக இருக்குமே!

ஆயா : அல்லி! நீ டாக்டருக்குப் படிப்பது அளவுக்கு மீறிய செயல் என்று அப்பா நினைக்கிறார். விரலுக்குத் தக்க வீக்கம் வேண்டும் அம்மா.

(பரமேசுவரி கையில் புத்தகங்களுடனும் நாடிக் குழாயுடனும் வருகிறாள்.)

அல்லி : கேட்டாயா பரமேசுவரி! விரலுக்குத் தக்க வீக்கம் வேண்டுமாம். ஆயா சொல்லுகிறார். உனக்குத் தெரியுமா?

பரமேசுவரி : உண்மைதானே! கால் வீங்கும் அளவிற்குக் கைவிரல் வீங்கிவிட்டால் என்ன துன்பம்! உகிர்ச் சுற்று வந்து விரல் வீங்கித் துன்பப்படும்போது இந்த உண்மை தெரிகிறதே!

அல்லி : (வியந்து) தமிழ் மொழியில் பழமொழிகளுக்குப் பஞ்சமே இல்லை. எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாக ஒரே மொழி பேசி, ஒரே வகையான ஆட்சியின்கீழ்க் குலையாத அமைதியோடு வாழ்ந்த இனம் தமிழ் இனம். அதனால்தான் அவர்களிடையே அனுபவம் முதிர்ந்த பழமொழிகள் நூற்றுக்கணக்காய் வழங்குகின்றன.

பரமேசு : ஏன் அல்லி! ஆயாவுக்கு உடம்பு நன்றாக இல்லையா? எங்கே நான் பார்க்கட்டும்? (நாடிக் குழாயைக் காதில் மாட்டிக்கொண்டு ஆயா அருகில் செல்கிறாள்.)

ஆயா : (கையைப் பிடித்துத் தடுத்து) என் உடம்பு நன்றாகத் தான் இருக்கிறது. நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். பள்ளிக்கூடத்திற்கு நேரமாச்சு; சீக்கிரம் போய்ச்சேருங்கள்.

(அல்லியும் பரமேசுவரியும் ஆயாவைத் தட்டிக்கொடுத்த படியே நாடிக் குழாயைக் கையில் சுற்றிக்கொண்டு, 'டாடா !' 'சீரியோ !' என்று கூறிக்கொண்டே போகிறார்கள்.)

ஆயா : (ஆயா அவர்களைப் பார்த்தபடியே நின்று) நல்லது...

## காட்சி : 2

**இடம் :** சென்னைப் பெருந்தெரு.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** தரகர், சிவக்கொழுந்து, சுப்புரத்தினம், சியாமளா.

[சிவக்கொழுந்து கையில் மடக்கிய குடையுடன் தலை குனிந்தபடியே வருகிறார். தரகர் எதிரே கையில் விசிறியுடன் வருகிறார். சிவக்கொழுந்தைக் கண்டதும் நிற்கிறார்.]

**தரகர் :** வணக்கம்.

**சிவக் :** (பதிலுக்கு வணங்கி) வாங்க.

**தா :** இப்போ அய்யாவைப் பார்க்கத்தான் கடைக்குப் புறப்பட்டேன்.

**சிவக் :** என்ன செய்தி ?

**தா :** ஒன்றுமில்லை.... (இழுத்தபடியே) நான் சொன்ன இடத்தைப் பற்றி யோசனை செய்தீர்களா என்று...

**சிவக் :** (சிந்தனையோடு) புதிய உறவாக இருக்கிறதே. முன்பின் பழக்கமில்லை. மாப்பிள்ளைக்குப் பெற்றோரும் இல்லை என்கிறீர்...

**தா :** அதனால் என்ன ? ஒரு பி. யி. படித்த எஞ்சினீயர். அரசாங்கத் தொழில், நல்ல வருமானம், குடும்பத்தின் செல்வம், உற்ற வயது, தக்க உடல்கட்டு ! இன்னும் வேறென்ன வேண்டும் ?

**சிவக் :** அதெல்லாம் இருக்கட்டும். முதலில் பையன் ஒழுக்கம் உள்ளவனாக, நல்லகுணம் உள்ளவனாக இருக்கவேண்டும். அவ்வளவுதான்.

**தா :** என்ன இப்படிச் சொல்கிறீர்கள் !

சிவக் : அதுதானே முக்கியம் ? இங்கிருந்து பெண்ணைத் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்ப வேண்டுமானால், பயணத்திற்குத் துணைகிடைப்பார்களா என்று தேடுகிறோம். துணையாக வருகிறவர்கள் நல்லவர்களா என்று ஆராய்ந்து பார்க்கிறோம். ரயில் பயணத்திற்குச்செய்யும் அவ்வளவு முயற்சியுங்கூட வாழ்க்கைப் பயணத்திற்குச் செய்ய வேண்டாமா ?

தா : அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம். பையன் ஆபீசுக்கு நம் வீட்டுப் பக்கமாகத்தான் போவான் வருவான். குனிந்த தலை நிமிர்ந்து பார்க்கமாட்டான். சிகரெட்டுக்கூட குடிக்கமாட்டான்.

சிவக் : அது இருக்கட்டும். உங்களுக்கு நம்ம திட்டமெல்லாம் தெரியுமல்லவா ?

தா : அந்தக் கவலையும் உங்களுக்கு வேண்டாம். நான் சொன்னால் போதும். மறுபேச்சு இருக்காது. (சிறிது இழுத்தபடியே) அதோடு...

சிவக் : என்னங்க ?

தா : மாப்பிள்ளை பெண்ணைப் பார்த்த பிறகுதான் திருமணம் செய்துகொள்ள முடியும் என்று வற்புறுத்துகிறாராம் !

சிவக் : என்ன அய்யா ! நம் குடும்பத்திலேயே இல்லாத பழக்கமாச்சே !

தா : நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே ! பெண்ணைத் தினமும் கல்லூரிக்கு அனுப்பிவைக்கிறீர்கள் !...

சிவக் : அதற்காகச் சொல்லவில்லை. அப்படி ஒரு சடங்கு வேண்டுமா என்றுதான்......

தா : என்னங்க ! காலம் எவ்வளவு முற்போக்கு அடைந்து விட்டது ! சில இடங்களில் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைப் பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்கிறார்கள் ; நாட்டியம் ஆடச் சொல்லிப் பார்க்கிறார்கள்.

இதெல்லாம் பார்க்கும்போது நாம் சிற்றுண்டி விருந்து நடத்துவது மிகச் சிறிய முன்னேற்றம்தான்.

சிவக் : இந்த உலகம் சீர்திருத்தமாக முன்னே சென்றாலும் குறை சொல்கிறது; பழைய கருநாடகமாக இருந்தாலும் பழிக்கிறது; எப்படி இருந்தாலும் ஏதாவது குறை சொல்வது உலகத்தின் இயற்கை.

தர : அதோடு...

சிவக் : இன்னும் என்ன ?

தர : (தலையைச் சொறிந்தபடியே) திருமணத்தன்று மாலையில் ஒரு நல்ல கச்சேரி...

சிவக் : (பரிவுடன்) அதெல்லாம் எதற்கு ?

தர: கச்சேரி கட்டாயம் வேண்டுமென்று மாப்பிள்ளை வற்புறுத்துகிறார். சிவக்கொழுந்து! நான் நல்லதற்குச்சொல்கிறேன். இதைமட்டும் முடித்துவிடுங்கள். என் பொறுப்பு இதோடு தீர்ந்துவிடும். அப்புறம் நீங்கள் ஆச்சு. உங்கள் மாப்பிள்ளை ஆச்சு. நான் தலையிடவே மாட்டேன்.

சிவக் : (சிறிது ஆழ்ந்து யோசனை செய்து) சரி, கச்சேரிக்கு என்ன செலவாகும் ?

தர : (எளிதாகப் பேசுகிறார்) இரண்டாயிரம், இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் ஆகும். அவ்வளவுதான்.

சிவக் : (வியப்புடன்) என்ன ?

தர: நல்ல கச்சேரி என்றால் அவ்வளவு ஆகத்தான் செய்யும்.

சிவக் : (தயக்கத்தோடு) சரி. உங்களிடமே பணத்தைக் கொடுத்துவிடுகிறேன். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிடுங்கள். எப்படியாவது திருமணத்தை நல்லபடியாக முடித்துவிடுங்கள்.

தர : (மகிழ்ச்சி பொங்க) சரி, அதற்கென்ன? அப்போ, நல்ல வேளையிலே பெண் பார்க்க வருகிறோம்.

சிவக் : சரி, நான் வருகிறேன். (வணங்கிப் பிரிகிறார்.)

(சிவக்கொழுந்து போகும் திசைக்கு மறுதிசையிலிருந்து சுப்புரத்தினம் கையில் சிகரெட்டுடன் வருகிறார்.)

தா : வாங்க. இப்போதுதான் அய்யாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

சுப்பு : என்னய்யா ? யாரோடு பேசிக்கொண்டிருந்தீர் ?

தா : அந்த மெடிகல் காலேஜில் வாசிக்கிற பெண்ணி னுடைய தகப்பனாரிடத்தில் பேசிக்கொண்டிருந்தேன். (சிலைக்கொழுந்து போகும் திசையில் கையைக் காட்டுகிறார்.)

சுப்பு : (அத்திசையைப் பார்த்தபடியே) ஓ! அவர்தான் மாமனாரோ ?

தா : ஆமாம்.

சுப்பு : என்ன சொன்னார் ?

தா : எல்லாம் பழம்தான். ஆனால்...இந்தச் சிகரெட்டை...

சுப்பு : என்னய்யா இழுக்கிறீர் ? குடிக்கக்கூடாது என்றாரா ?

தா : இல்லை. நான்தான் மாப்பிள்ளைக்கு அந்தப் பழக்கமெல் லாம் கிடையாது என்று சொன்னேன். பலபொய்யைச் சொல்லி ஒரு விளக்கு ஏற்ற வேண்டும் என்பார்கள்.

சுப்பு : அதுதானே தங்கள் பழக்கமும்கூட. அப்புறம்...

தா : என் பொறுப்புத் தீர்ந்துவிடும்...

சுப்பு : என் சித்தம் உங்கள் பாக்கியம்.

(சியாமளா தெரு வழியே போகிறாள். சுப்பு அவள் போவ தையே பார்த்துநிற்கிறார். சியாமளா சிறிது சென்று, திரும்பி ஒருபார்வை பார்த்துவிட்டுச் செல்கிறாள்.)

தா : அப்போ, பெண்ணைப் பார்க்கப் போக வேண்டியது தான்.

சுப்பு : (திடீரெனப் பார்வை கலைந்து) சரி, பார்க்கலாம். ஊரிலிருந்து என் அத்தை வந்தபின் போகலாம். நான் வரட்டுமா ? (வணங்கியபடியே சியாமளா சென்ற திசையில் அவசரமாகப் போகிறான்.)

தா : திருமணம் ஆகிவிட்டால் எல்லாம் சரியாகப்போகும். அதுவரை முன்னே பின்னே இருக்கத்தான் செய்யும். சரி... (என்று இழுத்தபடியே செல்கிறார்.)

## காட்சி : 3

**இடம் :** சிவக்கொழுந்து வீடு.

**காலம் :** காலை.

**பாத்திரர் :** அல்லி, பரமேசுவரி, ஆயா, சிவக்கொழுந்து, சோமசுந்தரம், சுப்புரத்தினம், தரகர், சுப்புவின் அத்தை.

[அல்லி மேசைமுன் இருந்து ஒரு விடுமுறைக் கடிதம் எழுதுகிறாள். பரமேசுவரி பக்கத்தில் நிற்கிறாள். கடிதத்தை எழுதிமுடித்ததும் ஓர் உறையில் போட்டுப் பரமேசுவரியிடம் கொடுக்கிறாள்.]

அல்லி : பரம்! இந்த விடுமுறைக் கடிதத்தைப் பிரின்சிபாலிடம் சேர்த்துவிடு. இன்றைக்கு ஒருநாள் லீவு கேட்டிருக்கிறேன்.

பரமேசு : (கடிதத்தை உறையிலிருந்து எடுத்துப் பிரித்துப் பார்த்துக் கிண்டலாக) என்னடி, காரணம் வேறு என்னவோ எழுதியிருக்கிறாயே ?

அல்லி : வேறு எப்படி எழுதுவது ?

பரமேசு : உன்னைப் பெண்பார்க்க வருவதாக உண்மையை எழுதினால்...

அல்லி : கல்லூரியில் என்னை எல்லாரும் கேலி செய்யட்டும் என்ற எண்ணமா ?

பரமேசு : அப்படியானால் நான் போய் உண்மையைச் சொல்லிவிடமாட்டேனா.

அல்லி : (வெறுப்புடன்) போதுமடி, கேலி.

பரமேசு : விளையாட்டிற்குப் பேசினால்கூட வெறுப்பா? நான் வருகிறேன்.

(புறப்படுகிறாள். அல்லி பரமேசுவரியின் பின்னே சென்று அவள் கையைப் பிடித்து)

அல்லி : பரம் ! கோபித்துக்கொள்ளாதே. நீ தானே எனக்கு உண்மையான தோழி. உன்னிடம் பேசும் அளவிற்குக்கூட அப்பாவிடம் பேசத் தயங்கு கின்றேன். அண்ணனைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் எவ்வளவோ பேசுகிறேன். ஆனால் என்னைப் பற்றி, என் திருமணத்தைப் பற்றிப் பேசக் கூசுகி றேன். இடையே தரகராகப் பக்கத்து வீட்டு ஆயா வேண்டியிருக்கிறது.

பரமேசு : இதைத்தான் நாணம் என்று சொல்கிறார்கள். நல்ல குணம் என்று புகழ்கிறார்கள். பெண்களுக்கு உரிய சிறந்த பண்பாகப் போற்றுகிறார்கள்.

அல்லி : நாணமும் அடக்கமும் பெண்களுக்கு உரிய சிறந்த பண்பாக இருக்கலாம்; ஆண்களைக் கவரும் அரும் பண்புகளாக அமையலாம். ஆனால் பெண்களின் வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்து உறுதிப்படுத்துவ தற்கு – திருமண ஏற்பாட்டிற்கு – அவைகள் தடைக ளாக இருந்தால் அவைகளால் பயன் என்ன ?

ஆயா : (உள்ளே வந்து) என்னம்மா இது ! வாழ்க்கையைப் பற்றி ஏன் இப்படி நம்பிக்கை இல்லாமல் எண்ண வேண்டும் ? வாழ்க்கை ஏன் ஒரு பூம்பொழிலாக அமையக்கூடாது ? பெற்றோரும் மற்றவர்களும் அன் புக்கு உரிய பெண்ணைக் கடலில்தள்ள முயல்வார்களா?

அல்லி : என் எதிர்கால வாழ்க்கை பூம்பொழிலோ ? அலை கடலோ ? முன்னதாகச் சொல்ல முடியாமல் இருக் கிறதே.

ஆயா : ஏன்'மா ! இப்படி வீணாக எண்ணி எண்ணி அமைதி இழக்கிறாய் ? உன் எதிரில் இன்று மாப்பிள் ளையை உட்காரச் செய்வார்கள்...

பரமேசு : (கிண்டலாக) தலை குனிந்து கால்விரலைப் பார்த்த படியே இருக்கவேண்டும்.

ஆயா : (அல்லியின் அருகில் சென்று மெல்லச் சொல்கிறாள்) வெட்கப்படாதே, நீயும் மாப்பிள்ளையைப் பார்த்துக் கொள். விருந்துமுடிந்ததும் உன் இசையையும்கேட்பார் கள். உனக்கும் மாப்பிள்ளை பிடித்திருந்து நீயும் சம்ம தித்தால்தான் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வார்கள்.

அல்லி : படம் எடுப்பதற்கு உட்காரச் செய்வதுபோல் விருந்து ஏற்பாடும் செயற்கைதானே! இயற்கையான பண்பும் நடையும் அந்த விருந்தில் புலப்பட முடியுமா? புலப்பட்டாலும் அந்தக் கால்மணி நேரத்தில் கண்டு தெளிய முடியுமா ?

பரமேசு : திருடனும் கோயிலுக்குப் போகும் நேரத்தில் பக்தன் போல் போய்வர முடியுமல்லவா ? அப்போது நல்ல பண்புகள் மேலே மிதக்கும்...

அல்லி : ஆனால், அவர் எப்படிப்பட்டவரோ ? என்னை எப்படி நடத்துவாரோ? என் எளிமையும் அடக்கமும் அவருக்கு எப்படித் தோன்றுமோ ?

(சிவக்கொழுந்து நுழைகிறார்.)

சிவக் : என்னம்மா இது! அவர்கள் வருகிற நேரமாச்சு. இப்படி நின்று பேசிக்கொண்டிருந்தால்! (அல்லியிடம்) பரமேசுவரியிடம் இன்று ஒரு நாளைக்குமட்டும் விடுமுறை எழுதிக்கொடுத்தனுப்பு அம்மா.

அல்லி : கொடுத்துவிட்டேன் அப்பா!

ஆயா : (கிண்டலாக) லீவுக்கு என்னம்மா காரணம் எழுதி யிருக்கிறாய் ?

அல்லி : தலைவலி என்று எழுதியிருக்கிறேன்.

சிவக் : போம்மா, போய்த் தலையை ஒழுங்குபடுத்திக்கொள்.

பரமேசு : (அல்லியிடம்) மாப்பிள்ளைக்குப் பிடித்தமான பூவைத் தலையில் வைத்துக்கொள்.

ஆயா : இந்தக் காலத்து மாப்பிள்ளைகளுக்கு வாசனை இல்லாத பூ எதுவாக இருந்தாலும் பிடிக்கும்.

(எல்லாரும் சிரிக்கின்றனர்.)

பரமேசு : அல்லி ! நான் வருகிறேன். (போகிறாள்.)

சிவக் : ஆயா ! போய், காப்பி போட்டாய்விட்டதா என்று கவனியுங்கள். (ஆயா போகிறார்) சோமசுந்தரம் எங்கே ? சோமு ! சோமு !

சோமு : (சோர்ந்து வருகிறான்.) என்னப்பா ?

சிவக் : என்னடா இப்படி இருக்கிறாய் ? உனக்கு இப்பொழுது என்ன கவலை வந்துவிட்டது ? வீட்டிற்கு நாலுபேர் வருகிறார்களே. வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யாமல் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய் ?

(சுப்புரத்தினம், சுப்புவின் அத்தை, தரகர் எல்லோரும் வருகிறார்கள். சிவக்கொழுந்து சிரித்த முகத்தோடு வரவேற்கிறார்.)

சிவக் : வாருங்கள் ! வாருங்கள் ! உட்காருங்கள்.

(உள்ளே போய் வருகிறார். ஆயா வருகிறாள்.)

ஆயா : வாருங்கள்.

தரகர் : (சோமுவைக் காட்டி) ஒரு பையன்தானா ?

சிவக் : ஆமாம்.

தர : (ஆயாவைப் பார்த்து) இந்த அம்மா ?

சிவக் : பக்கத்து வீடு. அல்லிக்குத் துணையாக வந்துபோய் இருப்பார்கள். சோமு! (தனியாக அழைத்து) அல்லியை வரச்சொல்லிவிட்டுக் காப்பி, வெற்றிலை கொண்டுவா.

(சோமு உள்ளே சென்றதும் அல்லி வந்து உட்காருகிறாள். சுப்புரத்தினம் அடிக்கடி பெண்ணைப் பார்க்கிறார். அல்லி ஓரப்பார்வையால் பார்த்தும் பார்க்காததுபோல் நடிக்கிறாள். இருவர் பார்வையும் ஒன்று சேரும்போது அல்லி தலைகவிழ்ந்துகொள்கிறாள்.)

சிவக் : (சுப்புவிடம்) நீங்கள் சென்னைக்கு வந்து பத்து ஆண்டுகள் இருக்குமா ?

சுப்பு : (அல்லியைப பார்த்துக்கொண்டிருந்தவர் திடீரெனப் பார்வை கலைந்து) இருக்கும். கல்லூரிப் படிப்புக்கே

இங்கு வந்துவிட்டேன். உங்களைக்கூட அடிக்கடி பார்த்திருக்கிறேன்.

தா: பட்டணத்து நாகரிகம், பக்கத்துவீட்டார் பெயர் தெரியாது.

சுப்பு: அப்படியில்லை. பழகுவதற்கு வாய்ப்பில்லை.

அத்தை: (அல்லியிடம்) டாக்டருக்குப் படிப்பதாகச் சொன்னார்களே ?

அல்லி: ஆமாம் அம்மா.

(காப்பி வருகிறது. சோமு எல்லாருக்கும் எடுத்துக் கொடுக்கிறார். சாப்பிட்டுக்கொண்டே பேசுகிறார்கள்.)

சிவக்: (சுப்புவின் அத்தையைப் பார்த்து) இந்த அம்மா ?

சுப்பு: என்னுடைய அத்தை, கும்பகோணம்.

(காப்பி குடித்து முடிந்ததும், தாரகர் சுப்புவிடம் வெற்றிலைத் தட்டை நீட்டி)

தா: வெற்றிலை போட்டுக்கொள்ளுங்களேன்.

சுப்பு: பழக்கமில்லை. மன்னிக்கவேண்டும்.

(தாரகர், சிவக்கொழுந்தைப் பார்த்துச் சிரிக்கிறார்.)

சுப்பு: அப்போ, புறப்படலாமா ? (தாரகரை மட்டும் தனியே அழைத்து) இப்படிக் கொஞ்சம் வருகிறீர்களா ? (பெண் பிடித்திருப்பதாகச் சாடையாகச் சொல்லிவிட்டு, சிவக்கொழுந்திடம்) நாங்கள் வருகிறோம். எல்லாம் பிறகு அவரிடம் சொல்லி அனுப்புங்கள்.

(வணங்கி விடைபெற்றுச் செல்கிறார்கள். எல்லோரும் சென்றபின் சிவக்கொழுந்து அல்லியை அழைத்துப் பேசுகிறார்.)

சிவக்: அம்மா அல்லி ! உனக்கு விருப்பம்தானே ?

அல்லி: அப்பா ! (தலை கவிழ்கிறாள்.)

சிவக்: ஏன்'மா ?

அல்லி: அப்பா! இந்தப் படிப்பு முடிந்தபின் திருமண ஏற்பாடு செய்யக்கூடாதா ? பல ஆண்டுகளாக நன்றாகப்

படித்துப் பரிசு பெற்றுவந்த நான் இறுதியாக நடைபெறும் தேர்வுக்குமுன் இப்படித் தடுமாறவேண்டுமா?

சிவக் : இந்தக் காலத்தில் நல்ல மாப்பிள்ளை கிடைப்பது அருமை அம்மா.

அல்லி : அப்பா! இன்னும் இரண்டு வாரத்தில் எம். பி. பி. எஸ். தேர்வு முடிந்துவிடும். அதற்குப் பிறகுதான் திருமணம் வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்த ஆண்டில் ஆஸ்பத்திரியில் அவுஸ் சர்ஜனாகப் பயிற்சி பெறுவதற்கு இணங்க வேண்டும். எந்த ஊரில் வாழ்ந்தாலும் சரி, படித்த படிப்பு வீண் போகாமல் டாக்டராக வீட்டிலே இருந்து தொழில் செய்ய இசைய வேண்டும். அப்படியானால்......(*தலை கவிழ்ந்து நாணத்தோடு உள்ளே செல்கிறாள். தந்தைக்கு மகிழ்ச்சி பொங்குகிறது.*)

## காட்சி : 4

இடம் : பூங்கா.

காலம் : மாலை.

மாந்தர் : அறவாழி, சோமு.

[அறவாழி ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு கட்டுரை ஒன்றைத் திருத்திக்கொண்டிருக்கிறார். சோமு கையில் திருமண அழைப்புடன் வருகிறான்.]

சோமு : ஐயா ! வணக்கம்.

அறவாழி : வா சோமு ! என்ன செய்தி ?

சோமு : என் தங்கைக்குத் திருமணம். (திருமண அழைப்பை ஆசிரியரிடம் கொடுக்கிறான்.)

அற : மிக்க மகிழ்ச்சி. (வாங்கிப் படிக்கிறார்.) சுப்புரத்தினம், பி. யி. (வியப்பு ஏற்படுகிறது.)

சோமு : மாப்பிள்ளை உங்களுக்குத் தெரியுமா ?

அற : கேள்விப்பட்டிருக்கிறேன். (அமைதியாக அழைப்பைப் படித்துவிட்டுப் பையினுள் வைத்துக்கொள்கிறார்.)

சோமு : ஏதாவது புத்தகம் எழுதுகிறீர்களா ?

அற : இதுவா ? "திருமணம்" என்பதைப் பற்றி நண்பர் ஒருவர் கலைச்செல்விக்கு எழுதிய கட்டுரை. படித்துப் பார்த்தேன். சில இடங்களில் திருத்தங்கள் செய்தேன். (சோமுவிடம் கொடுக்கிறார்.)

சோமு : (வாங்கிப் படிக்கிறான்.) 'பெற்றோர்களுக்காக ஒருவன் திருமணம் செய்துகொள்வது பேதைமை. முன் பழக்கம் இல்லாத குடும்பத்தில் யாரோ சொல்லும் சொல்லைக் கேட்டுப் பெண் கொள்வதோ கொடுப்பதோ அஞ்சத்தக்க செயல். பெண்ணும் பிள்ளையும் ஒருவர்க்கொருவர் நிழற்படத்தை அனுப்பிப் பார்க்கச் செய்வதாலும் பயன் இல்லை.' (இரண்டுபக்கம் தள்ளிப் படிக்கிறான்.)

'திருமணத்திற்காகப் பெரிய விருந்து, கச்சேரி முதலியவை வைத்துச் செலவு செய்வது அறியாமை.' (இன்னும் இரண்டு பக்கம் தள்ளிப் படிக்கிறன்.) 'திருமணம் நடந்த பிறகு மணமக்களைத் தனி வீட்டில் புதிய இல்லறம் தொடங்குமாறு செய்வதே அறம்.' (படித்து முடித்த பின்) திருமணத்தைப் பற்றி இவ்வளவு அறிந்தால் போதுமா ?

அற : இவைகள் எல்லாம் முக்கியமே. ஆனாலும் இன்னும் கருத வேண்டியவை, முக்கியமானவை சில உண்டு.

சோமு : என்ன அவை ?

அற : உனக்குத் தெரியுமா ? கழுத்துப் பொருத்தம் பார்க்க வேண்டும் என்று பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பார்ப்பார்களே.

சோமு : தெரியாதே !

அற : அது ஒரு மூடநம்பிக்கை. பெயர்களின் பொருத்தத்தை ஆராய்வது போல.

சோமு : சில வீடுகளில் பெயர் பொருந்திவராவிட்டால், பெண்ணின் பெயரை மாற்றி வைத்து, பிறகு திருமணம் செய்கிறுர்கள் :

அற : ஏன் ? ஆணின் பெயரை மாற்றிவைக்கக் கூடாதா ? (சிரிக்கிறர்.) உண்மையாகப் பார்க்க வேண்டியதை விட்டுவிட்டு வேறு என்னென்னவோ பார்க்கிறுர்கள். ஆணின் உடல் வளத்தையும் பெண்ணின் உடல் வளத்தையும் பார்க்கவேண்டியது கட்டாயம். இவை எல்லாவற்றையும் விட உள்ளத்தின் பொருத்தம் அமைந்து காதல் ஏற்பட்டிருந்தால் எந்தத் தொல்லையும் இல்லை. இந்தக் காலத்தில் காதல் திருமணத்தைக் காண்பது பாலைவனத்தில் நீர் ஊற்றைக் காண்பது போல் அரிதாகிவிட்டது. திருமணம் ஆன பிறகே கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழவேண்டியிருக்கிறது.

சோழ : திருமணம் ஆன பிறகும் சிலர் ஒழுக்கத்தோடு வாழ முடியாமல் கண்டபடி அலேகிருர்களே !

அற : மனத்தின் இயல்பு உனக்குத் தெரியுமே ! கையில் இருப்பதைவிட, கைக்கு எட்டியும் எட்டாமலும் இருப்பதைத்தான் மனம் நாடும். அதனுல் போதும் என்றஅமைதி இல்லாமல் வேட்கை இருந்துகொண்டே இருக்கும்.

சோழ : கணக்குப் போன்ற துறைகளிலும் கலைத்துறை களிலும் வல்லவர்கள், கூர்மையான அறிவு உள்ளவர் கள் ஒழுக்கமாக வாழ முடியாமல் தொல்லேப் படுவது ஏன் ?

அற : வாழ்க்கையில் விழிப்பாக இருக்க வேண்டியவர்கள் அவர்களே. அறிவுக்கூர்மை எவ்வளவு ஆபத்தானது தெரியுமா? மந்த அறிவு உள்ளவர்க்கு நாடி நரம்புகள் நுண் ணுணர்வு இல்லாமல் அப்படியே மந்தமாக இருக்கும். ஆனுல் கூர்மையான அறிவு என்ருல், நுட்பமான உணர்வுடைய நாடி நரம்புகளும், அவை களுக்கு ஏற்ற பால் உணர்ச்சியும் இருக்கும். அப்படிப் பட்டவர்களுக்குச் சிறிது நேரத்தில் உடற்பசி ஏற் படும் ; மீண்டும் மீண்டும் வரும். ஆகையால் அவர்கள் கெடுவதும் எளிதாகும். அவர்களும் மனத்தை அடக்கி ஆளக் கற்றுக்கொள்வார்களானுல் சிறந்தவர்களே !

சோழ : அய்யா ! தங்கள் வேலேயில் குறுக்கிட்டுத் தொல்லே கொடுத்தேன். நான் வருகிறேன். கட்டாயம் தங்கை யின் திருமணத்திற்கு வரவேண்டும்.

அற : வருகிறேன்.

சோழ : வணக்கம். (விடை பெற்றுச் செல்கிருன்.)

# காட்சி : 5

## நிழற் காட்சி

**இடம் :** வெள்ளைத்திரை, சிவக்கொழுந்து வீடு.

[இசைத்தட்டு மேளம் ஒலிக்கிறது. நிழற்காட்சியில் அல்லியும் சுப்புரத்தினமும் மாலை மாற்றுகின்றனர். இருவரும் சிவக்கொழுந்தின் முன் வணங்குகின்றனர். அவர் மணமக்களை வாழ்த்துகிறார்.]

## காட்சி மாற்றம்

(இரு வியாபாரிகள் அமர்ந்திருக்கிறார்கள். சிவக்கொழுந்து இருவருக்கும் தாம்பூலம் கொடுக்கிறார். வியாபாரிகள் திருமணத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்கள். சிவக்கொழுந்துக்கு அளவற்ற மகிழ்ச்சி.)

வியாபாரி 1 : சிவக்கொழுந்து ! நீ நல்ல புண்ணியம் பண்ணியிருக்கிறாய் அய்யா ! படித்த பெண்கள் சொன்னபடி கேட்க மாட்டார்கள். நாம் ஒரு மாப்பிள்ளை சொன்னால், படித்த பெண் வேறு ஆளைச் சொல்வாள்.

வியா 2 : நாம் ஒத்துக்கொள்ளவில்லையானால் சொல்லாமல் வீட்டை விட்டுக் கிளம்பிவிடுவாள். இப்படித்தான் உலகத்தில் நடக்கிறது.

வியா 1 : ஆனால் உன் மகள் உன் பேச்சைத் தட்டாமல் நடந்து கொண்டது வியப்பாக இருக்கிறது. பெண் பத்தரை மாற்றுத் தங்கம். கொடுத்து வைத்த ஆள் நீ. நல்ல மாப்பிள்ளையும் வாய்த்திருக்கிறார்.

வியா 2 : இன்னும் என்ன குறை? வியாபாரத்தில் நாம் பத்தாயிரம் பதினையாயிரம் சேர்ப்பது பெரிதல்ல. இப்படி மக்களும் மருமக்களும் வாய்ப்பதுதான் புண்ணியம். இதுதான் பெருஞ்செல்வம்.

வியா 1 : இந்தத் திருமணம்தான் கண்ணுக்கு விருந்தான காட்சியாக இருந்தது. மணமகன் மணமகள் என்றால் பார்வைக்குப் பொருத்தமாக இருக்க வேண்டாமா?

வியா 2 : அங்கங்கே திருமணம் நடக்கிறதே, இழவு! பெண் பூதம்போல் குறுக்கே பருத்திருப்பாள். பிள்ளை மூங்கில் போல் நெடுக வளர்ந்திருப்பான். அல்லது பெண்ணைப் பார்த்தால் பனைமரம் நினைவுக்கு வரும். பிள்ளைக்கும் யானைக்கும் அவ்வளவாக வேறுபாடு இருக்காது.

வியா 1 : ஏனய்யா வளர்க்கிறீர்கள்? ஓர் இடத்தில் அழகு இருந்தால் மற்றோர் இடத்தில் அது இருக்காது.

வியா 2 : இரண்டுமே அழகாக இருந்தாலோ பிள்ளை பட்டதாரியாக இருப்பான், பெண் எழுத்து வாசனை அறியாதவளாக இருப்பாள்.

வியா 1 : வயது, வடிவு, அழகு, அறிவு எல்லாம் பொருந்தி அமைந்ததை இங்கேதான் கண்டேன்.

வியா 2 : சரி, நாங்கள் வரட்டுமா?

இருவரும் : (எழுந்து) வருகிறோம். வணக்கம்.

சிவக் : இன்றைக்குப் பெண்ணையும் பிள்ளையையும் புது வீட்டிற்கு அனுப்பி வைக்கப் போகிறேன்.

வியா 2 : அப்படியா? வீடு எங்கே?

சிவக் : அடையாற்றில்.

வியாபாரிகள் இருவரும் : நல்ல நேரத்தில் அனுப்பிவை நல்ல படியாக வாழட்டும்.

(இருவரும் விடைபெற்றுச் செல்கின்றனர். பின் அல்லியும் ஆயாவும் வருகிறார்கள்.)

சிவக் : அல்லி!

அல்லி : அப்பா ! (தந்தையின் அருகில் செல்கிறாள்.)

சிவக் : அம்மா ! அங்கே சென்ற பிறகு சமையல் வேலை கொஞ்சம் கற்றுக்கொள். எல்லாம் சமையல்காரியை நம்பி விட்டுவிட்டால் சரியாக நடக்காது. நீயும் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும்.

அல்லி : அப்படியே ஆகட்டும் அப்பா.

சிவக் : அம்மா ! உன் திருமணமும் நல்ல படியாக முடிந்தது. அண்ணனும் இப்போது முன்னைவிட நல்லவனாக, ஒழுங்கு உள்ளவனாக மாறிவருகிறான். எப்படியாவது நீங்கள் இருவரும் நல்லபடி வாழ வேண்டும். (கண்களில் நீர் மல்க) இருக்கிற குறை நாளிலும் நீங்கள் மகிழ்ச்சியாக வாழ்வதைப் பார்த்து விட்டுச் சாகவேண்டும்.

ஆயா : அல்லி ! அப்பாவின் கவலை தீர்ந்தது. இனிமேல் உன் குடும்பம் அங்கே இருக்கிறது. கணவருடைய மனம் தெரிந்து நடந்துகொள். அப்பாவின் பெயரைக் காப்பாற்று. அவர் எப்போது நினைத்தாலும் மகளைப் பற்றி மகிழ்ச்சியாக நினைக்கவேண்டும். அந்தப் பிள்ளையும் மிக நல்ல பிள்ளையாகத் தெரிகிறது.

அல்லி : அப்படியே ஆகட்டும் ஆயா ! (கெஞ்சுதலாக) அப்பா !

சிவக் : என்னம்மா ?

அல்லி : அப்பா, நான் பொதுவாக ஒன்றும் கேட்பதில்லை. கல்லூரியில் சம்பளம் கட்டப் பணம் கேட்டிருக்கிறேன். புத்தகம் வாங்கப் பணம் கேட்டிருக்கிறேன். பட்டுப்புடைவை வேண்டும், நகை வேண்டும் என்று வாய் திறந்து கேட்ட நாள் இல்லை.

சிவக் : (சிரித்து) உனக்கு ஏதாவது பட்டுப் புடைவைகள் வேண்டுமா ? வாங்கித் தருகிறேன். இதற்காக ஏன் தயங்கித் தயங்கிப் பேசுகிறாய் ?

அல்லி : அங்கங்கே தாய் தகப்பன்மாரைத் தொந்தரவு செய்து பிழிந்தெடுத்து ஆடம்பர வாழ்க்கை நடத்துகிறார்கள். தாய் இல்லாத மகளாக வளர்ந்த என்னை எவ்வளவோ செல்லமாக வளர்த்தீர்கள். ஆனாலும் இதுவரை நான் தங்கள் மனம் வருந்தும்படியாக நடக்கவில்லை.

சிவக் : (புன்னகையுடன்) உனக்கு வேண்டியதைக் கேள் அம்மா.

(சோமு வருகிறான். பேச்சைக் கேட்டுத் திகைத்து நிற்கிறான்.)

அல்லி : (தயக்கத்தோடு) அப்பா, அவருக்கு ஒரு வீடாவது அல்லது ஒரு காராவது வாங்கித் தரும்படியாகச் சொல்கிறார்.

சிவக் : (திடுக்குற்று) அம்மா! (பரிவுடன்) என் நிலைமை உனக்குத் தெரியாதா? அண்ணன் இருக்கிறான், படிக்கவைக்க வேண்டும். திருமணம் செய்யவேண்டும். குடும்பத்தில் முன்னோர் வைத்துவிட்டுப் போன சொத்து ஒன்றும் இல்லையே.

அல்லி : எனக்குத் தெரியாதா அப்பா? நான் சொல்லவில்லை. நான் கேட்கவில்லை. அவர் சொல்லச் சொன்னார். நானே எப்படி முடியாது என்று சொல்வது? நீங்கள் சொல்லிவிடுங்கள் அப்பா.

ஆயா : (அல்லியின் பக்கத்தில் சென்று) அப்பாவைத் தொல்லையில் வைக்காதே அம்மா. நீயே உன் கணவரிடம் சொல்லிவிடு. எப்போதும் விரலுக்குத் தக்க வீக்கம் தான் இருக்கணும்.

சிவக்: உனக்குத் தெரியுமே அம்மா! இப்போது கார்வாங்கிக் கொடுக்க என்றால் முடியுமா? திருமணத்திற்கும் கச்சேரிக்கும் எவ்வளவு செலவானது, தெரியாதா?

அல்லி : (தெளிவுடன்) இதற்காக நீங்கள் கவலைப்படவேண் டாம் அப்பா. பிறகு பார்க்கலாம் என்று சொன்ன தாகச் சொல்லிவிடுகிறேன்.

சிவக் : இன்னும் ஆறுமாதம் பொறுத்துக்கொள்ளச் சொல்லம்மா.

அல்லி : அப்போதும் உங்களுக்குக் கவலை வேண்டாம். நீங்கள் போட்ட நகையில் பாதி எடுத்துக்கொண்டு கார் வாங்கிக்கொடுத்தால் போதும்.

சிவக் : செலவு ஆனால் ஆகட்டும் அம்மா. கார் வாங்கிக் கொடுப்பதற்கும் நகைக்கும் தொடர்பு வேண்டாம். போட்ட நகைகளைக் கழற்றிக் கொடுத்துவிட்டவள் என்று உன்னைப் பழிப்பதற்கு இடம் தரக்கூடாது. (கார் வந்து நிற்கும் ஓசை கேட்கிறது. சிவக்கொழுந்து பேச்சை நிறுத்திக் கொள்கிறார். சுப்புரத்தினம் வரு கிறார்.)

சுப்பு : மாமா, இன்று காலை ஏற்பாடு செய்திருந்த அந்த நண்பருடைய கார் இன்னும் வரவில்லை. நல்ல வேளை தவறிவிடக் கூடாதே என்று ஒரு வாடகைக் கார் கொண்டு வந்தேன். (காரை நினைவுபடுத்தும் முறையில் அல்லியைச் சாடையாகப் பார்த்துக்கொள்கிறார்.) அதுதான் கொஞ்சம் நேரமாகிவிட்டது. (கடிகாரத்தைப் பார்த்து) சீக்கிரம் புறப்படு அல்லி, நேரமாச்சு.

சிவக் : மாப்பிள்ளைக்குப் பலகாரம் எடுத்துவை அம்மா.

சுப்பு : அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்.

ஆயா : சும்மா சாப்பிடுங்கள்.

சுப்பு : இல்லை ஆயா. புதுவீட்டில் தேநீர் விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். நண்பர்கள் காத்திருப்பார்கள். (சோமு வருகிறான். சோமுவிடம்) பெட்டி படுக்கை யெல்லாம் காருக்குப் போய்விட்டதா ?

சோமு : ஆமாம் அத்தான் !

குப்பு : மாமா (வணங்கி) நாங்கள் வருகிறோம்.

(சிவக்கொழுந்து விடை கொடுக்கிறார்.)

அல்லி : அப்பா ! (வணங்குதல்).

சிவக் : மகிழ்ச்சியாய்ப் போய் வா அம்மா. (கண்களைத் துடைத்துக்கொள்கிறார்.)

அல்லி : (சோமுவிடம் கலக்கத்துடன்) வருகிறேன் அண்ணா ! உடம்பை நன்றாகப்பார்த்துக்கொள். ஆயா ! வருகிறேன்.

ஆயா : போய் வா அம்மா. நானும் இன்னும் இரண்டு வாரத்தில் ஊருக்குப் போவேன்.

(எல்லோரும் பின்னே சென்று வழியனுப்புகின்றனர்.)

## காட்சி : 6

**இடம் :** பூங்கா.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** அறவாழி, சோமு.

[அறவாழி ஒரு சிறிய பெஞ்சியிலிருந்து செய்தித்தாள் படித்துக்கொண்டிருக்கிறார். சோமு சோர்வோடு வருகிறான்.]

**சோமு :** வணக்கம் அய்யா !

**அற :** வா சோமு, இப்படி உட்காரு. உன் தங்கையின் திருமணத்திற்கு வரமுடியாமல் போய்விட்டது.

**சோமு :** அதனால் என்ன ?

**அற :** (செய்தித் தாளை மடித்துக் கீழே வைத்துவிட்டு) சோமு! நெடுநாளாக நீ மெலிந்து போவதைப் பற்றி எண்ணி வந்தேன். உன்னைக் கேட்கவேண்டும் என்ற எண்ணம் உண்டு. நல்ல இளமைப் பருவம், கொழு கொழு என்று இருக்கவேண்டும். நீ இளைத்துப் போவதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டும்.

**சோமு :** ஒன்றுமில்லை அய்யா. (தலை கவிழ்ந்துகொள்கிறான்.)

**அற :** சோமு ! உன் உடம்பு ஷெல்லியின் உடம்பு போன்றது. அறிவு கூர்மையாக விளங்கக் கூடிய உடம்பு இது. ஆனால் நீ படிப்பில் அவ்வளவு ஆர்வம் கொள்ளவில்லையே ? நாளுக்கு நாள்...

**சோமு :** (தலைநிமிர்ந்து) எனக்கு வாழ்க்கையில் ஊக்கம் இல்லை. எதிலும் நம்பிக்கை இல்லை.

**அற :** அப்பா சோமசுந்தரம் ! இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். வாழ்க்கையில் ஒரு பொழுதுபோக்கு இருக்கவேண்டும். இல்லை

யானல் இளமை எண்ணங்கள் சும்மா இருக்க முடியாது. நாடி நரம்புகளின் ஆசையைப் பற்றி அலைத்து உடலைக் கெடுத்துவிடும்.

சோமு : உண்மைதான் அய்யா ! என் வாழ்க்கையில் பொழுதுபோக்கு ஒன்றை ஒழுங்காக அமைத்துக் கொள்ளவில்லை. நல்லதோ, கெட்டதோ, கட்சி வெறியோ, அரசியல் ஆர்வமோ, சமயவெறியோ எனக்கு ஏற்படவில்லை.

அற : சோமசுந்தரம் ! நாள்தோறும் தன் முகத்தையும் தலையையும் ஒழுங்குபடுத்திக்கொள்வதுபோல், தன் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்திக்கொள்ளவேண்டும். தலைவாரி அமைத்துக்கொள்ளக் கண்ணுடி வேண்டும்; அதுபோல் உள்ளத்தை ஒழுங்குபடுத்த நாட்குறிப்பு எழுதும் வழக்கம் வேண்டும். நாள்தோறும் வாழ்க்கையில் உணர்ந்தவைகளை நாட்குறிப்பில்எழுதிவைக்க வேண்டும். அது வாழ்க்கையில் திருந்துவதற்குச் சிறந்த வழியாகும்.

சோமு : (வெறுப்புடன்) எதற்கும் காலம் வேண்டும். பசி இருந்தால் அல்லாமல் அறிவும் தேடமுடியாது. அந்த அறிவுப்பசி இப்போதுதான் எனக்கு ஏற்பட்டுள்ளது. (குரலில் குழைவு) அதுவும் உடம்பைப் பாழாக்கிக் கொண்டு, இனி எப்படி வாழ்வது என்ற கவலையை வளர்த்துக்கொண்ட பிறகுதான் ! என்ன செய்வேன் ?

அற : செய்த குற்றங்களைத் திரும்பச் செய்யாதிருந்தால் போதும். வழிபாட்டில் நம்பிக்கை இருந்தால், சிறந்த பெரியார் ஒருவரின் உருவத்தை நினைத்து அவருடைய தூய பண்புகளை எண்ணி, உன் குறைகளையும் எண்ணு. திருந்துவாய்.

சோமு : (தெளிவுடன்) அய்யா! கடவுள் வழிபாடு, தியானம் என்று கடவுளின் பெயரைச் சொல்லிப் பலவாறு அவரைப் புகழ்ந்துகொண்டிருப்பதால் பயன் உண்டா ?

அற : அதனுல் மட்டும் பயன் இல்லை. கடவுளின் நெறியாகிய அறநெறியில் நின்றது எவ்வளவு, நிற்காதது எவ்வளவு, செய்த செயல்களிலும் எண்ணிய எண்ணங்களிலும் நல்லவை எவ்வளவு, தீயவை எவ்வளவு என்று ஆராய்ந்து முறையிட்டால்தான் பயன் உண்டு. உனக்கு அறிவுப்பசி இப்போதுதானே ஏற்பட்டுள்ளது!

சோழ : (ஆர்வத்தோடு) பசியில் பெரிய பசி, ஆற்றல் மிக்க பசி?

அற : உனக்கு வேண்டாம் என்று தடுக்கப்பட்டதை எப்படியாவது அறியவேண்டும், அடையவேண்டும் என்ற பசியே.

சோழ : தியாகத்தில் பெரிய தியாகம்?

அற : அப்படிப்பட்டதை அறியாமலே அடையாமலே செத்துப்போவோம் என்று அமைதி அடைதலே. கள்ளின் போதை, காரிகையின் இன்பம் இவை எப்படி இருக்கும் என்று அறிய, அடைய, ஆவல் பிறக்கும். இவற்றை அறியாமல் அடையாமல் வாழ்வோம் என்று அமையும் மனம் எவ்வளவோ பெரிய தியாகம் செய்யும் மனமாகும்; அதுவே வாழ்க்கையில் பெரிய வெற்றி. தெருவில் போகிறவள் யார் என்று பார்த்து அறியும் படியாக மனம் தூண்டும். அவள் யாராக இருந்தால் என்ன? அந்த அளவிற்கு அறியாமை இருக்கட்டும் என்று பார்வையைத் திருப்பிக்கொள்கிருன் ஒருவன். அவன் செய்ததும் தியாகமே. (செய்தித்தாளை எடுத்துக் கொண்டு) சரி, மாலை வேளைகளில் ஓய்வாக இருந்தால் இந்தப் பக்கம் வா. நான் ஒரு வேலையாகப் போக வேண்டும்.

சோழ : (வணங்கி) சரி அய்யா! (ஆசிரியர் சென்றபின்) ஆசிரியர் அறவாழி எவ்வளவு சிறந்த அறிஞர்! எவ்வளவு தூய சிந்தனையாளர் என்பது அவரிடம் மாணவனுக

இருந்து படித்தபோது தெரியவில்லை. என் நன்மையை அக்கறையோடு நாடுகிறவர் அவரைவிட வேறு யார் இருக்கிறார்கள்? அவரிடம் உண்மையைச் சொல்லத் தயங்கினேனே! (அமைதி) சிலந்தியின் வலையில் ஈ அகப்பட்டுக் கொள்வதுபோல், எப்படியோ அவள் வலையில் நான் அகப்பட்டுக்கொண்டேன். அவள் என் கேட்டிற்குக் கடைக்காலிட்டாள். நான் பயனற்ற சக்கையான பிறகு கைவிடப்பட்டேன். (தன் இருகைகளையும் தூக்கிப்பார்த்துவிட்டு) உடல் வலிமை குறைவதை மட்டும் ஆசிரியர் கண்டு வருந்துகிறார். நினைவாற்றல் எவ்வளவு குறைந்துவருகிறது! ஏதாவது ஒன்றைப் பற்றி விடாமல் சிந்திக்க முடியவில்லை. எண்ணத்தில் திட்பமில்லை, ஆழம் இல்லை. அவர் மறைமுகமாக அவ்வளவு அறிவுரை கூறியும் என் மனம் திருந்தவில்லை. அவரிடம் மருந்து கேட்பதற்கு முன் நான் நோயாளி என்பதை அவரிடம் சொல்ல வேண்டுமே. ஆம்! சொல்லவேண்டும். அவரைப் போல் உண்மையான அன்புடையவரிடத்தில் சொல் லாமல் மறைப்பதே குற்றம்தான். (கதறிக்கொண்டே செல்கிறான்.)

## காட்சி : 7

இடம் : சுப்புரத்தினம் வீடு.

காலம் : மாலை.

பாத்திரங்கள் : சுப்புரத்தினம், அல்லி, குள்ளன், சிறுவன்.

[சுப்புரத்தினம் ஆபீசிலிருந்து வருகிறார்.]

சுப்பு : அல்லி ! அல்லி !

அல்லி : (சிரித்தபடியே வருகிறாள்.) இதோ.

சுப்பு : (திகைப்புடன் பார்க்கிறார்.)

அல்லி : என்ன பார்க்கிறீர்கள் ?

சுப்பு : (வெறுப்புடன்) இது என்ன அல்லி ! பட்டிக்காடு போல் தேய்ந்த நூல்சேலையைச் சுற்றிக்கொண்டு திரிகிறாயே. உன்னிடம் பட்டுச்சேலை போதுமானவை இல்லையென்றால் என்னிடம் சொல்லக்கூடாதா ? சரி, நாளைக்குச் சம்பளம் வருகிறது, நினைவுபடுத்து. கடைக்குப்போய் நல்ல சேலையாக இரண்டு எடுத்து வரலாம். அல்லி! சீக்கிரம் காப்பி கொண்டுவா. (அல்லி உள்ளே செல்கிறாள். குள்ளனைக் கூப்பிட்டுப் பையிலிருந்து ஐந்து ரூபாய் எடுத்துக்கொடுத்து) டேய் குள்ளா ! போய் ஒரு டின் சிகரெட் வாங்கிவா. அம்மாவிடம் வேறு ஏதாவது வேண்டுமா என்று கேட்டுக்கொண்டு போ. (அல்லி காப்பி கொண்டுவந்து கொடுக்கிறாள். அவள்கையில் கரி இருப்பதைக் கண்ட சுப்பு அருவருப்புடன்) அல்லி ! சே ! என்ன அது கையிலே கரி ! அழுக்கு ! அய்யய்ய !

அல்லி : காப்பி போட்டுக்கொண்டிருந்தேன். எப்படியோ பட்டுவிட்டது.

சுப்பு : (காப்பி குடித்தபடியே பேசுகிறார்.) சமையல்காரியும் வேலைக்காரனும் இருக்கும்போது நீ ஏன் அந்த வேலைக்குப் போனாய் ?

அல்லி : எல்லாம் சமையல்காரியை நம்பி விட்டுவிட்டால் சரியாக நடக்காது, நீயும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அப்பா சொல்லியிருக்கிறார்.

சுப்பு : அதற்காக இப்படிக் கையிலும் முகத்திலும் கரியைப் பூசிக்கொள்வதா? சரியானபடி மேற்பார்வை செய்துகொள் என்று சொல்லி இருப்பார்கள். எஞ்சினீயர் மனைவி என்றால் மதிப்பு இருக்கவேண்டும். மேலும், நீயும் ஒரு டாக்டர். கொஞ்சம் நாகரிகமாக இருக்கவேண்டும் ; நீயும் பார்க்கிறாயே, இந்த ஊரில் வேறு எந்த லேடி டாக்டராவது சமையல் வேலை பார்க்கிறாளா ? சரி சரி, சீக்கிரம் சோப்புப் போட்டுக் கையைக் கழுவிவிட்டு வா.

(காப்பி குடித்த குவளையை அல்லியின் கையில் கொடுக்கிறார். அல்லி உள்ளே போகிறாள். சுப்பு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் குடிக்கிறார். மோசமான வெளி அட்டைப்படம் உள்ள ஒரு புத்தகத்தை விரித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார். அல்லி புகையைத் துடைத்துக்கொண்டே வருகிறாள்.)

அல்லி : உங்களிடம் ஒன்று கேட்க வேண்டுமென்றிருந்தேன் !

சுப்பு : என்ன அவ்வளவு சிக்கனமாக ஒன்று கேட்க நினைத்தாய் ! நூறு கேளு. சரமாரியாகப் பதில் சொல்லித் தள்ளுகிறேன்.

அல்லி : இல்லை....(தயங்கியபடியே) என்னைப் பெண்பார்க்க வந்திருந்தபோது வெற்றிலைகூடப் பழக்கமில்லை என்றீர்களே ! ஆனால் இப்பொழுது—(அவர் கையில் உள்ள சிகரெட்டைக் காட்டுகிறாள்.)

சுப்பு : (சிரித்து) வெற்றிலைதானே பழக்கம் இல்லை என்றேன். சிகரெட் பழக்கம் இல்லை என்று நான் சொல்லவில்லையே!

அல்லி : (கணவர் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தைப் பார்த்து விட்டு) நல்ல புத்தகங்கள் வாங்கிப் படித்து அவைகளைப் பற்றிக் கலந்து பேசவேண்டும்.

சுப்பு : என் சொந்தக்காரன் ஒருவன் அறவாழி என்று இருக்கிறான். அவன் எந்நேரமும் புத்தகம் படித்துப் படித்து என்ன ஆனான் தெரியுமா? நானும் புத்தகம் படித்தால் அப்படித்தான் ஆக வேண்டும்.

அல்லி : அவர் என்ன ஆனார்?

சுப்பு : (வெறுப்புடன்) என்ன ஆனார்! பெண்டாட்டியை வைத்துக்கொண்டு வாழத்தெரியாதவன் ஆனான். நானும் அப்படி ஆவது உனக்கு விருப்பம்தானா? (கேட்டுவிட்டுச் சிரிக்கிறார்.)

அல்லி : நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே?

சுப்பு : எந்நேரமும் எதையாவது படித்துக்கொண்டிருப்பான். மனைவியையும் அப்படிப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்தினான். மனைவி என்ற அன்பே இல்லாமல் கண்டபடி பேசுவானாம். அது தப்பு, இது தப்பு, அது சொத்தை, இது சொள்ளை என்று செல்லரித்துக்கொண்டிருந்தானும். அவள் வேறு யாருமில்லை, என்னுடைய அத்தையின் பெண்தான். நல்ல நாகரிகமானபெண். நாலுபேரோடு பழகுவதில், குடும்பம் நடத்துவதில், எல்லாம் கெட்டிக்காரி. அந்த மடையனுக்குக் கொடுத்தார்கள். பி. ஏ., எல். டி. படித்தவன் என்று கொடுத்தார்கள். கடைசியில் அவனோடு வாழமுடியாமல் அவளும் செத்தாள்.

அல்லி : எல். டி. படித்தவர் என்றால், ஆசிரியர் வேலையில் இருப்பார். அந்தத் தொழிலுக்கு எப்போதும் படித்துக்கொண்டிருந்தால்தான் முடியும்.

சுப்பு : நல்ல காலமாக நான் ஆசிரியர் வேலைக்குப் போக வில்லை. எண்பது ரூபாய்ச் சம்பளத்திற்கு ஏங்கி நிற்க வில்லை. திறமை இருக்கிறவன்,பிழைக்கத் தெரிந்தவன் எவன் ஆசிரியர்தொழிலுக்குப் போவான்? என் தொழில் தெரியுமா? இண்டர்மீடியட்டில் என்னவோ சில பாடப் புத்தகங்களை உருப்போட்டு முடித்துவிட் டேன். அதோடு சரி. இனிமேல் எனக்கு ஏன் அந்தத் தொல்லை? படித்ததை மறந்துபோய் ஒரு நூற்றுண்டு ஆகிவிட்டது.

அல்லி : அவர் புத்தகத்தால் கெட்டிருக்கமாட்டார். ஏதா வது மூளைக்கோளாறு இருக்கலாம்.

சுப்பு : புத்தகங்களால்தான் மூளைக்கோளாறு வந்தது! வேறு என்ன?

அல்லி: அப்படியானல், இயற்கையாக நல்லவர். பைத்தியம் ஏற்பட்டுக் கெட்டுவிட்டார் என்று சொல்லுங்கள்.

சுப்பு : பைத்தியமாவது மண்ணுங்கட்டியாவது? கிறுக்கு, வம்பு, மடத்தனம்.

அல்லி : அவர் படித்த புத்தகங்கள் எப்படிப்பட்டவை களோ?

சுப்பு: என்ன புத்தகமோ? மட்டமோ உயர்வோ? எதைத் தான் ஏன் திரும்பத் திரும்பப் படிக்கவேண்டும்? என் னைக் கேட்டால் நான் சொல்வேன் : சாப்பாட்டுக்குச் சமையல் அறை, தொழிலுக்கு ஆபீஸ், அப்படித்தான் படிப்புக்குப் பள்ளிக்கூடம். அப்புறம் படிப்பதெல் லாம் பைத்தியக்காரத்தனம்தான்.

அல்லி : அவர் இங்கே எப்போதாவது வந்திருக்கிருரா? நான் பார்த்திருக்கிறேனு?

சுப்பு : (கோபத்தோடு) அந்த மடையனு? என் வீட்டுக்கா? இங்கே கால்வைக்க முடியுமா அவன்? என் திருமணத் திற்கே அவனுக்கு அழைப்பு அனுப்பவில்லையே! சரி

சரி. இனியும் அந்தப் பைத்தியக்காரனைப் பற்றிப் பேசாதே. (சிகரெட்டைக் கீழே வீசியெறிகிறார்.)

(ஒரு பையன் மண்டையில் இரத்தக் காயத்துடன் கதறிக் கொண்டு வருகிறான்.)

பையன் : (தலையில் கை வைத்தபடியே வருகிறான்.) அய்யோ அம்மா !

அல்லி : என்னப்பா ?

பையன் : சைக்கிலிலிருந்து கீழே விழுந்துவிட்டேன்.

சுப்பு : சீக்கிரம் கட்டியனுப்பு அல்லி. ஏன்'பா சைக்கி ளுக்கு ஏதாவது ஆபத்து உண்டா ?

பையன் : முன் சக்கரம் வளைந்து போச்சு'ங்க.

சுப்பு : அதையும் இங்கே கொண்டுவரக் கூடாதா ? நான் எஞ்சினீயராச்சே! இரண்டு வேலையும் ஒரே இடத்தில் முடிந்து போகுமே. (சிரிக்கிறார்) சரி உள்ளே போ.

## காட்சி : 8

இடம் : பூங்கா.

காலம் : மாலை.

மாந்தர் : சோமு, அறவாழி.

[அறவாழி எதையோ எண்ணிக்கொண்டு அமைதியாக இருக்கிறார். சோமு வந்ததும் 'இரு' என்று சைகை காட்டுகிறார். சோமு உட்கார்ந்த பின் சிறிது கழித்துப் பேசுகிறார். சோமு பேச்சின் இடையிடையே புகைத்து இருமிக்கொண்டே இருக்கிறான்.]

அறவாழி : என்ன சோமு ! ஏதாவது பேசவேண்டுமா ?

சோமு: அய்யா! (பேச வாயெடுத்துப் பின் அடக்கிக்கொள்கிறான்.)

அற : சும்மா சொல்லு அப்பா.

சோமு : (வருத்தத்துடன்) அய்யா ! நீங்கள் அன்றைக்குச் சொன்ன கெட்டவழக்கம்தான் என் உடம்பைக் கெடுத்துவிட்டதுங்க.

அற : அதுதானே. விட்டுத்தள்ளு. நாளையே உடம்பை இரும்பாக்கிக்கொள்ளலாம்.

சோமு : அதற்கு முன்னும் ஒருத்தியின் வலையில் அகப் பட்டுக் கெட்டுவிட்டேன்.

அற : சரி. இப்போது ஒன்றும் இல்லையே ? பிறகு ஏன் கவலைப்படுகிறாய் ?

சோமு : (தயக்கத்துடன்) நண்பர்களின் பேச்சு வேறு திக்கை நோக்கி இழுத்துச் சென்றுவிட்டது. அதனால் தான் நாடி நரம்புகளின் இச்சைக்கு இரையானேன்.

அற : (சிறிது அமைதி) அப்பா சோமு ! ஆடம்பரமாக வாழும் ஆண்களையும் நம்பிப் பழகாதே ; பெண்களை

யும் நம்பிப் பழகாதே. அவர்களுடைய வாழ்வுக்கு உன்னைக் கருவியாக்கிக்கொண்டு பாழாக்கிவிடுவார்கள். தேவையானது கிடைக்கும்போது ஈயும் எறும்பும் நம்மைக் கேளாமலே வந்து மொய்க்கின்றன. அதுபோல் இன்பம் உள்ளபோது யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக்கொள்வார்கள். இன்பத்திற்குத் துணையாக வல்லவரை நம்பாதே! துன்பத்திற்குத் துணையாக வல்லவரைத் தேடு. உறவானாலும் நட்பானாலும் காதலானாலும் இப்படித்தான் தேட வேண்டும்.

சோழ : (வெறுப்புடன்) இன்பத்திற்குத் துணையாக வல்லவர்களை நான் நாடினேன். நான் பயனற்ற சக்கையான பிறகு கைவிடப்பட்டேன்.

அற : (தோளில் கைவைத்து) உடம்பு கெட்டுவிட்டது என்று நீ கவலைப்படாதே. நீ அப்படிக் கெடுதியின் எல்லையை அடையவில்லை.

சோழ : வெளியுலகப் போராட்டம் ஒன்றிலும் ஈடுபடவழியில்லை. குடும்பத்தில் செல்லப்பிள்ளை, உயர்ந்த பெரியோர்களின் வாழ்க்கைகளைப் படித்திருந்தாலாவது சில குறிக்கோள்கள் ஏற்பட்டிருக்கும். அதுவும் இல்லை.

அற : (தலையசைத்து) உண்மைதான். உன்னைப் போல் இருபது இருபத்தைந்து வயது இளைஞர்கள் நாடி நரம்புகளின் இச்சைக்கு இரையாகாமல் இருக்கவேண்டுமானால் ஒரு குறிக்கோள் ஒரு வெறி இருந்து வெளியுலகம் அவர்களைக் கவர வேண்டும். இவற்றுள் ஒன்றிலும் பற்றாத இளைஞனாக இருந்தால், பேசாமல் பெற்றோரே பார்த்துத் திருமணம் செய்துவிடவேண்டும்.

சோழ : திருமணத்திற்கு உரிய வயது ஆகவில்லை என்று தந்தை எண்ணியிருக்கிறார். உடலைப் பொறுத்த வரையில் அது உண்மைதான்; வயது ஆகவில்லை. ஆனால் உள்ளம் மூத்துவிட்டது. குறிக்கோள், வெறி

முதலியவை ஒன்றும் இல்லாத காரணத்தால், இலையும் பூவும் பிறவும் செழிக்காத மரத்தில் காய்த்த காய் போல் விரைவில் வெம்பிவிட்டேன். (கலங்குகிருன்.)

அற : அப்படி ஒன்றும் இல்லை. நீர்வளம் இல்லாத கரும்பு போல் வற்றி மெலிந்து இருக்கிருய். ஆசைகளை அடக்கி இனிக் காத்துக்கொண்டால் நல்ல உடல் வந்து விடும்.

சோமு : (நாணத்தோடு) அய்யா ! ஆசைகளை அடக்குவதால் உடல் கெடும் என்று சொல்கிருர்களே !

அற : (சிரித்து) இந்தக் காலத்தில் இப்படி நம்பி நம்பித் தான் பலர் வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டார்கள். அறிஞர்கள் சிலர் ஒழுக்கமாக வாழ முடியாமல் கெடுவதற்கு இந்தக் கொள்கையே காரணமாக இருக்கிறது. ஒன்று எண்ணிப்பார். ஆசைகளை அடக்காமல் மனம் போன போக்கில் நுகர்ந்து வாழ்கிறவர்களுக்கு உடல் கெடாமல் இருக்கிறதா என்று எண்ணிப்பார். அது போதும். உண்மை தானே விளங்கும். (அமைதி) ஆசைகளை வளர்த்துக்கொண்டு நுகர்வதற்கு வழி இல்லாமல் வருந்துகிறவர்களுக்குத்தான் உடம்பு கெடும். ஆசைகளை அடக்கத் தெரிந்தவர்களுக்கோ குறைக்கத் தெரிந்தவர்களுக்கோ உடம்பு ஒருகாலும் கெடாது.

(சோமு அதிகமாகப் புகைந்து இருமி மார்புவலி தாங்காமல் கதறுகிருன்.)

சோமு : (நெஞ்சில் கைவைத்து) அம்மா ! அம்மா !

அற : சோமு ! என்ன ? என்னப்பா சோமு ?

சோமு : மார்பு வலி தாங்க முடியவில்லையே !

அற : (சோமுவைத் தொட்டவுடன்) காய்ச்சல் வேறு அடிக்கிறதே! காய்ச்சலுடன் இங்கு ஏன் வந்தாய்? சரி, வா. சீக்கிரம் ஒரு வண்டியில் வீட்டுக்குப் போய்விடலாம்.

(சோமுவைக் கைத் தாங்கலாகக் கூட்டிச் செல்கிருர்.)

## காட்சி : 9

இடம் : சுப்புரத்தினம் வீடு.

காலம் : மாலை.

மாந்தர் : சுப்புரத்தினம், அல்லி, சுகுமாரன், சுகுமாரனின் மனைவி, குள்ளன், அத்தை.

சுப்பு : (நுழைவு) அல்லி ! அல்லி !!

அல்லி : இதோ வருகிறேன். (உள்ளே இருந்து வருகிறாள்).

சுப்பு : அல்லி ! இப்போது என் நண்பர் சுகுமாரனும் அவர் மனைவியும் வருவார்கள். சீக்கிரம் சிற்றுண்டி தயார் பண்ணச் சொல்லு. (அல்லி உள்ளே சென்றுவருகிறாள். அதற்குள் சுப்புரத்தினம் கையில் இதழ் வண்ணத்தை—லிப்ஸ் டிக்கை—எடுத்து வைத்துக்கொண்டு அல்லி வந்ததும்) அல்லி! அவர்கள் வருவதற்குமுன் இதைப் போட்டுக்கொள்.

அல்லி : என்ன அது?

சுப்பு : நீதான் சொல்லேன். (அல்லியின் கையில் கொடுக்கிறார்.)

அல்லி : (கையில் வாங்கிப் பார்த்துவிட்டு) இது தெரியாதா 'லிப்ஸ்டிக்.' இதெல்லாம் எதற்கு ?

சுப்பு : எதற்கா? (சிரித்து) உதட்டில் பூசிக் கொள்வதற்கு. (லிப்ஸ்டிக்கைக் கையில் வாங்கி) சரி, இப்படி வா. நானே போட்டுவிடுகிறேன்.

அல்லி : அத்தான் ! நம் நாட்டுத் தட்பவெட்ப நிலைக்கு உதட்டில் சாயம் பூசிக்கொள்வது அவ்வளவு உகந்தது அல்ல.

சுப்பு: (கோபத்தோடு லிப்ஸ்டிக்கைக் கீழே எறிந்துவிட்டு) சுத்தக் கருநாடகமாக இருக்கிறாயே ? (சுகுமாரன், சுகுமாரன் மனைவி இருவரும் வருகிறார்கள். சுப்பு கோபத்தை மறைத்துச் சிரித்த முகத்தோடு விருந்தினரை வரவேற்கிறார். அல்லியும் வரவேற்கிறாள்.)

சுப்பு : வாங்க ! மிஸ்டர் சுகுமார் !

[வந்தவள் நேராகச் சுப்புவின் பக்கத்தில் சென்று கை குலுக்கிவிட்டு, அல்லியுடனும் கைகுலுக்குகிறாள். சுகுமாரன் சுப்புவிடம் கைகுலுக்கிவிட்டு அல்லியிடம் கைகுலுக்கச் செல்கிறான். அல்லி பதிலுக்கு வணக்கம் செய்கிறாள். அவன் ஏமாற்றத்தைச் சமாளித்துக் கொள்கிறான். வந்தவள், சுப்புவின் பக்கத்தில் உட்கார்ந்து சளசளவென்று மணிப்பிரவாள நடையில் சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கிறாள். அல்லி, வந்தவன்பக்கத்தில் உட்காராமல் வேறொரு பக்கத்தில் சென்று உட்காருகிறாள். இதைக் கவனித்த சுப்பு கோபத்துடன் அல்லியைப் பார்த்துவிட்டுத் திரும்புகிறார். குள்ளன் காப்பி கொண்டுவந்து வைக்கிறான். எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டே பேசுகிறார்கள்.]

சுகுமார் : ஆபீசிலிருந்து இப்போதுதான் வந்தீர்களா ?

சுப்பு : ஆமாம்.

சுகுமார் : நீங்கள் ஏன் ஒரு கார் வைத்துக்கொள்ளக் கூடாது, மிஸ்டர் சுப்பு ? உங்களுக்கும் பயன்படும். (அல்லியைக் காட்டி) டாக்டருக்கும் உபயோகமாக இருக்கும்.

சுப்பு : இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் வாங்கலாம் என்றிருக்கிறேன்.

சுகுமார் : (அல்லியிடம்) இப்போது பெரிய ஆஸ்பத்திரியில் அவுஸ் சர்ஜனாக இருக்கிறீர்களா ?

அல்லி : ஆமாம்.

சுகுமார் : பயிற்சி முடிந்ததும் தனியாகத் தொழில் செய்யப் போகிறீர்களா ?

அல்லி : இன்னும் அதைப் பற்றி முடிவு செய்யவில்லை.

(வந்தவள் முதலில் சிகரெட் பெட்டியை எடுத்து சுப்புவிற்கும் சுகுமாரனுக்கும் கொடுத்துவிட்டு அல்லியிடம் நீட்டுகிறாள்.)

அல்லி : (தடுத்து) மன்னிக்க வேண்டும்.
வந்தவள் : டாக்டரல்லவா முன்னே வழி காட்டவேண்டும்.
அல்லி : எனக்குப் பழக்கம் இல்லை. மன்னிக்கவேண்டும்.
(அல்லி தடுப்பது சுப்புவுக்குப் பிடிக்கவில்லை. வந்தவள், தானும் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துப் பிடிக்கிறாள். சிறிது நேரத்தில் எல்லோரும் புறப்படுகின்றனர். வந்தவள் போகும் திசையையே சுப்பு பார்த்து நிற்கிறார். அல்லி பின்னே வந்து பேசுகிறாள்.)
அல்லி : அத்தான்!
சுப்பு : (திடீரெனப் பார்வை கலைந்து) சுத்த அநாகரிகமாக இருக்கிறாயே! அவர்பக்கத்தில் உட்கார்ந்து தொலைப்பதில் என்ன குற்றம்? (சிறிது கோபமாக நடந்து) அது தான் போகட்டும், ஒருநாள் ஒரு வேளை ஒரு சிகரெட் பிடித்துப் போட்டுவிட்டிருந்தால் என்ன செய்யும்? குடியா முழுகிப் போகும்? இதைக்கூடவா நான் சொல்லவேண்டும்?
அல்லி : (தணிந்த குரலில்) நீங்கள் ஏதாவது கோபித்துக் கொள்ளக் கூடாது என்று தடுத்துவிட்டேன்.
சுப்பு : (கோபம் மறைகிறது. சிரித்து) இதற்காக நான் ஏன் கோபித்துக்கொள்ளப் போகிறேன்? சரி, நீ படம் பார்க்க வருகிறாயா?
அல்லி : என்ன படம்?
சுப்பு : (வெறுப்புடன்) என்ன படமோ அதைப் பற்றி நமக்கு என்ன கவலை? நான் யாரையும் கேட்க வில்லையே! சும்மா பொழுது போக்கிவிட்டு வரலாம், வா. (அல்லி உள்ளே சென்று வருகிறாள். குள்ளன் வருகிறான்.) குள்ளா! வீட்டைப் பார்த்துக்கொள்.
(இருவரும் போகிறார்கள்.)
குள்ளன் : அட கடவுளே! இது தான் நாகரிகமா? (சுப்புவைப் போல் நடித்து) "சுத்த அநாகரிகமாக இருக்கிறாயே! அவர் பக்கத்தில் உட்கார்ந்து தொலைப்பதில்

என்ன குற்றம்? அதுதான் போகட்டும். ஒருநாள் ஒரு வேளை ஒரு சிகரெட் பிடித்துப் போட்டுவிட்டிருந் தால் என்ன செய்யும்? குடியா முழுகிப் போகும்?" என்கிறார் அய்யா. இதுதான் நாகரிகமா? (கேலியாக) நமக்கு வேண்டாம் அய்யா இந்த நாகரிகம். வெள்ளைக் காரன் போகிற போக்கில் கொண்டு வந்த நாகரிகத் தில் கொஞ்சத்தை இப்படிப் போட்டுவிட்டுப் போய் விட்டான். அதை அய்யாவைப் போன்ற ஆட்கள் ஆளுக்குக் கொஞ்சமாகப் பொறுக்கிக்கொண்டார்கள்.

(சுப்புவின் அத்தை இரண்டு குழந்தைகளுடன் வருகிறாள்.)

அத்தை : ஏன்'பா, சுப்புரத்தினம் வீடு இதுதானே?

துள் : ஆமாம். நீங்க யாருங்க?

அத் : நான் சுப்புவின் அத்தை.

துள் : இதுவரை நான் உங்களைப் பார்த்ததே இல்லையே!

அத் : சுப்புவின் கலியாணத்துக்கு ஒருமுறை வந்திருக் கிறேன்...

துள் : இப்போ ஒருமுறை வந்திருக்கிறீங்க. அப்போ நான் இந்த வீட்டுக்கு வேலைக்கே வர'லை அம்மா.

அத் : எனக்குக் கும்பகோணம், சுப்பு வேறு யாருமில்லை; என் அண்ணன்மகன்தான். ஆமாம், சுப்பு எங்கே? அல்லி எங்கே?

துள் : இரண்டு பேரும் சினிமாவுக்குப் போயிருக்கிறார்கள்.

அத் : அப்படியா? இந்தப் பெட்டி இங்கேயே இருக்கட் டும். எந்தப் படத்துக்குப் போயிருக்கிறார்கள்?

துள் : ஏன்'மா, நீங்களும் சினிமா பார்க்கப் போகிறீர் களா?

அத் : அவர்கள் வருகிற வரையில் இங்கே தனியாகத் தானே இருக்கப் போகிறேன்.

துள் : அம்மா! அய்யா எந்தப் படத்துக்குப் போயிருக்கிறார் களோ தெரியாது. காப்பி குடிக்கிற மாதிரி சினிமா வுக்குப் போவதும் ஒரு கடமையாக வைத்திருக்கிறார்

அய்யா. நல்ல படம் கெட்ட படம் என்று அவர் விரும்புவதும் கிடையாது, வெறுப்பதும் கிடையாது. திடீரெனப் படம் முடிவதற்குள் வந்தாலும் வந்து விடுவார்.

அத் : நீ பெரிய வாயாடியாக இருப்பாய் போலிருக்குதே !

தூள் : அப்படியும் இந்த வீட்டில் ஒன்று இருக்கிறது அம்மா.

அத் : என்னப்பா அது ?

தூள் : அதோ, அந்த நாய் !

(உள்ளே நாய் குரைக்கும் சப்தம் கேட்கிறது.)

## காட்சி : 10

**இடம் :** சிவக்கொழுந்து வீடு.

**காலம் :** இரவு.

**மாந்தர் :** சிவக்கொழுந்து, அறவாழி, சோமசுந்தரம்.

[மகனை எதிர்பார்த்தபடியே அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருக்கிறார்.]

சிவக் : (தனிமொழி) சோமுவின் போக்கில் நேர்ந்துள்ள மாறுதல் வியப்பாகவே இருக்கிறது. முன்னெல்லாம் ஒருநாளும் நேரத்தோடு அவன் வீட்டிற்கு வந்ததில்லை ; அப்படிப்பட்டவன் இப்பொழுது மிக ஒழுங்காக நேரம் தவறாமல் வருகிறான். கல்லூரி நேரம் தவிர மாலையில் வெளியே உலாவப்போகும் காலம் தவிர, மற்றப் பொழுதெல்லாம் வீட்டிலேயே யிருந்து கடமையைச் செய்கிறான். "நண்பரின் வீட்டுக்குப்போய் படிக்கப்போகிறேன்" என்று சொல்லிவிட்டு எங்காவது பொழுது போக்கி வந்தவன், இப்போது நண்பர்கள் இந்த வீடு தேடி வந்தாலும் விரைவிலே பேசி முடித்து அனுப்பிவிடுகிறான். (மேசைப்பக்கம் சென்று மேசையைப் பார்த்து) முன்பெல்லாம் கண்டபடி புத்தகத்தைப் பரப்பி வைத்தவன் இப்பொழுது மேசையையும் எவ்வளவு ஒழுங்காக வைத்திருக்கிறான். (மேசையின்மேல் கிடந்த நாட்குறிப்பை எடுத்துப்பார்த்து,) இது என்ன நாட்குறிப்பு ? ஆம். அவனே எழுதியிருக்கிறான். (சிரித்து) பிறருடைய நாட்குறிப்பைத் தெரியாமல் எடுத்துப் பார்ப்பதும் தவறு அல்லவா? (மனத்தைத் தேற்றிச் சிறிது பொறுத்து)

என்ன தான் எழுதி இருக்கிறான் என்று பார்ப்போமே. (படிக்கிறார்.)

சோமு—தூரல் : "நாள்தோறும் வாழ்க்கையில் உணர்ந்தவைகளை நாட்குறிப்பில் எழுதி வைக்கவேண்டும். அது வாழ்க்கையில் திருந்துவதற்குச் சிறந்த வழியாகும்" என்றார் ஆசிரியர் அறவாழி. இது எவ்வளவு பெரிய உண்மை!

சிவக் : (மகிழ்ச்சி பொங்க) அன்று கெட்டவன் என்று நினைத்தது என் மனம். இன்று நல்லவன் என்று போற்றி மகிழ்கிறது. தீய வழியில் சென்ற மகன் திருந்தி நல்ல வழிக்கு மாறினால் பெற்ற தந்தையின் மனம் மகிழாதா? இனிமேல் எனக்கு என்ன குறை? அல்லியின் திருமணமும் அருமையாக முடிந்தது. மகனும் இனி நல்லபடியாக வாழ்வான். நானும் கவலை இல்லாமல் சாவேன். (நாட்குறிப்பை மீண்டும் படிக்கிறார்.)

சோமு—தூரல் : "தெருவில் போகிறவள் யாரென்று பார்த்து அறியும்படியாக மனம் தூண்டும். அவள் யாராக இருந்தால் என்ன? அந்த அளவிற்கு அறியாமை இருக்கட்டும் என்று முகத்தைத் திருப்பிக்கொள்கிறான் ஒருவன். அவன் செய்ததும் தியாகமே."

சிவக் : தெளிந்த ஞானிபோல் எழுதியிருக்கிறானே? (மீண்டும் படிக்கிறார்.)

சோமு—தூரல் : "இரக்கம் இல்லாதவர்களை – பிறர் துன்பத்தைக் கண்டு கண்ணீர் கலங்காதவர்களை – எளிய வாழ்க்கையை விரும்பாதவர்களை நம்பாதே. திருமணம் செய்துகொள்ளும் காலத்திலும் இப்படிப்பட்ட மனமுள்ள பெண்ணை நாடாதே!"

சிவக் : (தனக்குள் சிரித்து) தனக்கு எப்படிப்பட்ட பெண் வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான். யார் அந்த ஆசிரியர் அறவாழி?

(யாரோ வரும் சத்தம் கேட்டுத் திரும்புகிறார். சோமுவை ஆசிரியர் அறவாழி கைத்தாங்கலாகக் கூட்டிக்கொண்டு வருகிறார்.)

சிவக் : (பதற்றத்துடன்) என்ன சோமு...என்னப்பா? ஏன்?

அற : ஒன்றுமில்லை. பதறாதீர்கள். பூங்காவில் என்னோடு பேசிக்கொண்டிருந்த பொழுது கொஞ்சம் அதிகமாக இருமினான். அதனால் கொஞ்சம் மார்புவலி ஏற்பட்டது.

சிவக் : (சோமுவுடன்) உடம்புக்கு நன்றாக இல்லாதபோது ஏனப்பா வெளியே போகிறாய்?

சோமு : (சோர்வுடன்) எனக்கு ஒன்றுமில்லையப்பா. சிறிது ஓய்வெடுத்துக்கொண்டால் சரியாகிவிடும். (ஆசிரியரிடம்) வணக்கம் அய்யா! மிக்க நன்றி! (உள்ளே செல்கிறான்.)

அற : அய்யா! உடனே டாக்டரிடத்தில் காண்பிக்க வேண்டும். சில நாட்களாகவே மாலை நேரத்தில் காய்ச்சல் வேறு அடிக்கிறது. அவன் யாரிடமும் சொன்னதாகத் தெரியவில்லை.

சிவக் : அய்யோ! எனக்குத் தெரியாதே. இரவில் நெடு நேரம் படிக்கிறான். எப்போதும் புத்தகமும் கையுமாக இருக்கிறான். அதனால் சூட்டினால் இருமுகிறான் என்று எண்ணினேன். ஆனால் நோய்வந்து அவனைத் துன்புறுத்துவது அறியாமல் போனேன். அய்யோ நான் என்ன செய்வேன்?

அற : நாளையே டாக்டரிடத்தில் காண்பியுங்கள். சரியாகி விடும்.

சிவக் : வீட்டிலேயே டாக்டர் இருந்தும், அவனை நோய்க்கு ஆளாக்கிவிட்டோமே!

அற : டாக்டர்கள் நோய்க்கு விலக்கானவர்களா?

சிவக் : இவ்வளவு நேரமாக உங்களை யாரென்று தெரிந்து கொள்ள வில்லையே!

அற : சோமு என்னிடம் உயர்நிலைப் பள்ளியில் படித்த மாணவன். என் பெயர் அறவாழி.

சிவக் : ஆ! நீங்கள் தானு! நின்றுகொண்டிருக்கிறீர்களே! உட்காருங்கள்.

அற : நான் போக வேண்டியதுதான். நாளை வந்து பார்க்கிறேன். (விடைபெற்றுச் செல்கிருர்.)

சிவக் : இவ்வளவு சிறந்த அறிஞரின் துணை கிடைத்திருந்தும் இவன் வாழ்க்கை பாழாயிற்றே! அய்யோ சோமு! (உள்ளே செல்கிருர்.)

## காட்சி : 11

**இடம் :** சுப்புரத்தினம் வீடு.

**காலம் :** காலை.

**மாந்தர் :** சுப்புரத்தினம், அல்லி, அத்தை, நோயாளிப் பையன், சிவக்கொழுந்து.

*[சுப்பு நாற்காலியில் சாய்ந்து செய்தித்தாள் படித்துக் கொண்டிருக்கிறார். அல்லி பக்கத்தில் ஒரு நாற்காலியில் வந்து உட்கார்ந்திருக்கிறார்.]*

அல்லி : நேற்றுப் பார்த்த "வாழ்க்கை"ப் படத்தில் நம்பி திக்கற்றுப்போன அந்தப் பெண் காதலனை வேண்டி முறையிடும் காட்சி எவ்வளவு உருக்கமான பகுதி! அவள் என்ன திறமையாக நடிக்கிறாள்! அவளுடைய உணர்ச்சி மிகுந்த முறையீட்டையும் புலம்பலையும் கேட்டு எனக்குக் கண்ணீர் வந்து விட்டது.

சுப்பு : (வெறுப்புடன்) சரிதான்.

அல்லி : (சிறிது வாட்டத்துடன்) பெண்ணின் மனம் பெண்ணுக்குத்தானே தெரியும்?

சுப்பு : வேறு எந்தப் பெண்ணாவது அழுதாளா? நீ பார்த்தாயா?

அல்லி : ஏன்? பெஞ்சியிலிருந்த எத்தனையோ பெண்கள் கண்களைத் துடைத்துக்கொண்டிருந்தார்களே!

சுப்பு : ஆமா, அந்த ஏழைப் பெண்களின் அநாகரிகக் கூட்டத்தில் இருப்பதற்குத்தான் நீ தகுதியானவள். உனக்கும் எட்டணா டிக்கட் வாங்கிக் கொடுத்து அங்கே அனுப்பியிருக்க வேண்டும். உன் பக்கத்தில் உட்காருவதற்கே எனக்கு வெட்கமாக இருக்கிறது.

அத்தை : (நுழைவு) ஏன்'பா சுப்பு ! ஏன் வாடகை வீட்டில் குடியிருக்கிறீர்கள் ? சமையல்காரியைக் கேட்டேன். இது வாடகை வீடு என்று சொன்னாளே ! மாமனார் வாங்கிக்கொடுத்த வீட்டிலேயே போய்க் குடியிருப்பது தானே !

(அல்லியைக் கடைக்கண்ணால் பார்த்தபடியே பேசுகிறாள். அல்லி இவர்கள் பேச்சைக் கேட்டுக் கலக்கமும் வருத்தமும் அடைகிறாள்.)

சுப்பு : வீடா ! (பெருமூச்சுவிட்டு) அதெல்லாம் ஒன்றும் கிடையாது அத்தை. ஏன் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறாய் ? எல்லோரும் சேர்ந்து என்னை ஏமாற்றி விட்டார்கள்.

அத்தை : (மூக்கில் விரலைவைத்தபடியே) அப்படியா போச்சு உன் கதை ! சரி, கார் என்ன ஆச்சு ? பட்டணத்தில் சுப்பு கார் வைத்திருப்பான். இரண்டு நாள் தங்கிப் பட்டணம் எல்லாம் சுற்றிப் பார்க்கலாம் என்று வந்தேனே !

சுப்பு : (அல்லியைப் பார்த்துக்கொண்டே அத்தையிடம்) ஒருத்தன் கார் வாங்கிக்கொடுப்பதைப் பார்த்து நான் எஞ்சினியராகவில்லை அத்தை ! என்னவோ சொன்ன சொல்லைக் காப்பாற்றக் கூடியவர் என்று பார்த்தேன். ஆறுமாதம் என்று சொன்னார்கள் எட்டு ஒன்பது மாதமும் ஆச்சு...(அல்லியைப் பார்க்கிறார்.)

அத்: நான் அப்போதே சொன்னேன். நீதான் கேட்கவில்லை. என்னுடைய மைத்துனர்பெண்ணைக் கட்டியிருந்தால், பெண்ணைக் காரில் வைத்து அப்படியே அனுப்புவதாகச் சொன்னார்.

சுப்பு : ஏன் அத்தை, என்னை ஒரு பெண் காதலித்ததாகச் சொன்னேனே நினைவிருக்கிறதா ? நான் மட்டும் சரியென்று ஒரு சொல் சொல்லியிருந்தால் போதும்.

அப்படியே ஒரு லட்சம் ரூபாய்ச் சொத்துக் கிடைத்திருக்கும். கடைசியாக...

அத் : (அல்லியைப் பார்த்துக்கொண்டே) நான் ஏன் வாயைத் திறக்கவேண்டும்? சொன்னால் நான் பொல்லாதவளாகப் போகவேண்டும்.

சுப்பு : என்னுடைய கெட்டகாலம் அத்தை என்னுடைய கெட்டகாலம். அந்தத் தரகரின் பேச்சைக் கேட்டு ஒரு பிச்சைக்கார வீட்டில் போய்க் கட்டினேன்.

(அல்லி இதைக் கேட்டு மிகவும் வருத்தமடைகிறாள். அந்த நேரத்தில் வயிற்றைப் பிடித்தபடியே கதறிக் கொண்டு ஒரு பையன் வருகிறான்.)

வந் : அய்யோ! அம்மா வயிற்றுவலி தாங்க முடியலையே! (கதறுகிறான்.)

அல்லி : உள்ளே வா. பார்க்கிறேன். (உள்ளே செல்கிறான்.)

சுப்பு : பார்த்தீர்களா அத்தை. இப்படித்தான் காலையில் எழுந்தவுடன் காய்ச்சல், கண்வலி, வயிற்றுவலி, வாந்தி என்று நோயாளிக் கூட்டம் வந்துவிடும். எழுந்ததும் அவர்கள் முகத்தில்தான் விழிக்கவேண்டும். அப்பப்பா ஒரே தொல்லையாய்ப் போச்சு.

அத் : நான் அப்போதே சொன்னேன். இந்த டாக்டருக்குப் படித்த பெண் வேண்டாம் என்றேன். நீ கேட்டாயா?

சுப்பு : நானும் ஒரு எஞ்சினியர், அவளும் ஒரு டாக்டர் என்றால் கொஞ்சம் மதிப்பாக இருக்குமே என்று எண்ணினேன். சுத்தப் பட்டிக்காடாக இருக்கிறது. நாகரிகம் கிடையாது. நாலுபேரோடு பழகத் தெரியாது.

அத் : ஏன்'பா சுப்பு! (சுப்புவின் காதினுள் ஏதோ பேசுகிறாள். அல்லி வெளியே வந்ததும் பேச்சை நிறுத்திக்கொள்கிறாள். வந்த நோயாளி கையில் மருந்துடன் முனங்கியபடியே வெளியே செல்கிறான்.)

சுப்பு : (அல்லியிடம் கோபமாக) எல்லாம் காலையில் குளிப்பதற்குமுன் வந்து போய்விடட்டும். குளித்த பிறகு நோயாளிகளைத் தொடுவதும், நோய் பார்ப்பதும், மருந்து கொடுப்பதும் வைத்துக்கொள்ளாதே !

அல்லி : நேரம் தவறி வந்தால் நாளைக்கு வா என்று எப்படிச் சொல்வது ?

சுப்பு : உதவி தேவையுள்ளவர்கள் வருவார்கள்.

அல்லி : அதுவரையில் நோய் துன்புறுத்தாமல் சும்மா இருக்குமா ?

சுப்பு : ஷட் அப். நான்சென்ஸ். எதிர்த்தா பேசுகிறாய் ?

(கையை ஓங்கிக்கொண்டு அல்லியின் பக்கத்தில் செல்கிறார்.)

அத் : (சுப்புவின் கையைப் பிடித்துத் தடுத்து) சும்மா இரு'ப்பா.

சுப்பு : நீ சும்மா இரு அத்தை !

அத் : சரிதான்'பா ! (அல்லியிடம்) நீ உள்ளே போ'ம்மா. வா சுப்பு. கார் வந்துவிட்டது. போகலாம்.

(சுப்பு அல்லியைக் கோபத்தோடு பார்த்து முறைத்தபடியே செல்கிறார். அத்தை கரவு உள்ளத்தோடு சிரித்துக் கொண்டே செல்கிறாள்.)

அல்லி : என் எதிரிலேயே இப்படி நடிக்கிறவள், அண்ணன்மகனோடு பட்டணம் சுற்றிப் பார்க்கும் போது என்னென்ன கோள் மூட்டிக் கலகம் செய்யப் போகிறாளோ !

துள்ளன் : (அங்கே வந்து) அம்மா ! இந்த விருந்தாளி இன்னும் எத்தனை நாள் அம்மா இருப்பாள் ?

அல்லி : ஏன் துள்ளா ?

துள் : என் பெண்டாட்டி கிட்டே கூட இந்தத் தொல்லை பட்டிருக்கமாட்டேன் அம்மா. "இது ஏன் அவ்வளவு? அது ஏன் இவ்வளவு ? எல்லாம் உங்கள் பெரியதனமாக நடக்கிறதோ? டாக்டர் அம்மா இங்கே வந்து எட்டிப் பார்ப்பதும் இல்லையோ? தாய்வயிற்றிலிருந்து

பிறக்கும்போதே டாக்டராகப் பிறந்துவிட்டாளோ?" என்று கண்டபடி பேசுகிருள் அம்மா !

அல்லி : பொறு அப்பா. இன்று ஊர் சுற்றிப்பார்த்து விட்டுப் போய்விடுவாள். நீ ஒன்றும் பேசாதே.

ஆள் : நான் ஒன்றும் பேசாமல் இருந்தாலும் இந்த அம்மாவின் வாய் சும்மா இருக்க மாட்டேன் என்கிறதே !

அல்லி : என்ன சொன்னலும் கேட்டுக்கொள். எனக்காகப் பொறுத்துக்கொள். அவரும் இப்போது பத்துப் பதினைந்து நாட்களாக முன்போல் இல்லை. அடிக்கடி கோபம் வருகிறது. எந்தப் பேச்சை எடுத்தாலும் உடனே என் மனம் புண்பட வேண்டும் என்று ஏதாவது சொல்கிருர்.

ஆள் : அம்மா ! அப்பா வருகிருர்கள்.

(சிவக்கொழுந்து வருகிருர். அல்லி பேச்சை நிறுத்தித் தன் கலக்கத்தைத் தந்தைக்குத் தெரியாதபடி மறைத்துக் கொள்கிருள்.)

அல்லி : வாருங்கள் அப்பா. உட்காருங்கள்.

சிவக் : ஏன்'மா, ஒரு மாதிரியாக இருக்கிருய் ?

அல்லி : ஒன்றும் இல்லை அப்பா.

சிவக் : உடம்பு நன்றுக இல்லையா ?

அல்லி : அப்பா ! (தயங்கி) கார் வாங்கிக்கொடுக்காததைப் பற்றி ஒரு குறையாகச் சொல்கிருர். (கலங்குகிருள்.)

சிவக் : ஏன்'மா, நிலைமையை எனக்கு முன்னமே சொல்லியிருக்கக் கூடாதா ? ஆகிற செலவோடு ஆகட்டும் என்று கார் வாங்கிக் கொடுத்திருப்பேனே. எப்படியாவது நீ கணவரோடு நல்லபடி வாழவேண்டும். நாளைக்கே பத்தாயிரம் ரூபாய்க்குச் செக் அனுப்புகிறேன். அவரையே ஒரு நல்ல காராகப் பார்த்து வாங்கிக்கொள்ளச் சொல். (சிறிது கழித்து) அம்மா ! அண்ணனுக்குப் பத்துப் பதினைந்து நாட்களாக

உடம்பு நன்றாக இல்லை. இரவில் சில வேளைகளில் நாள்தோறும் காய்ச்சல் வருகிறது. வர வர மெலிந்து கொண்டே போகிறான். இருமலும் இருக்கிறது.

அல்லி : அப்பா ! (கலங்குகிறாள்.)

சிவக் : ஏன்'மா கலங்குகிறாய்? நாளைக்கு வந்து அண்ணனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு போய்ப் பார். எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார். நான் வருகிறேன்'மா. (சென்றவர் திரும்பி வந்து) கணவருடைய மனம் கோணாமல் நடந்துகொள் அம்மா.

(கலங்கிய கண்களுடன் வெளியே செல்கிறார்.)

## காட்சி : 12

இடம் : சென்னை நெடுந்தெரு.

காலம் : காலை.

மாந்தர் : குள்ளன், அவன் நண்பன்.

[குள்ளனும், அவன் நண்பனும் எதிரே வந்து சேர்கின்றனர்.]

நண்பன் : என்னப்பா குள்ளா! எங்கே இவ்வளவு தொலைவு வந்தாய் ?

குள் : நுங்கம்பாக்கத்திலே ஒருவேலையாக வந்தேன்.

நண் : எப்படி இருக்கிறாய் ? என்ன செய்தி ?

குள் : ஆண்டவன் புண்ணியத்தால் எங்கோ எப்படியோ பிழைத்துக்கொண் டிருக்கிறேன் 'பா. என்ன பிழைப்போ அண்ணே ! எனக்கு ஒரு நல்ல இடம் பார்த்துச் சொல்லேன்.

நண் : ஏன்'பா ?

குள் : ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண் டாட்டம் என்று சொல்வார்கள். இங்கே, வீடு இரண்டு பட்டால் வேலைக்காரருக்குத் திண்டாட்டம் என்று ஆகிவிட்டது.

நண் : என்னப்பா ! உங்கள் அய்யா எஞ்சினியர், அம்மா டாக்டர். அங்கே என்னப்பா தொல்லை ?

குள் : அந்த அம்மா தங்கமான குணம். ஏழை எளியது களிடத்தில் அன்பு உண்டு. பாரு, ஒரு நாள் வேலைக் காரனுக்கும் வேலைக்காரிக்கும் சம்பளத்தில் ஒவ்வொரு ரூபாய் சேர்த்துக் கொடுக்கலாம் என்று அம்மா சொன்னதற்கு, அய்யாவுக்குக் கோபம் வந்துவிட்டது. 'இந்தப் பெரியதனம் எல்லாம் வேண்டாம். இவர் களுக்கு விருப்பம் இல்லையானால் நின்றுவிட்டும்.

இதைவிடக் குறைந்த சம்பளத்திற்கு வேறு ஆள் கொண்டு வர என்ருல் முடியும் என்கிருர்.

நண் : இதுக்காகத்தான் வேறு இடம் பார்க்கிருயா?

தள் : இதுக்காக இல்லே அண்ணே. அய்யாவுக்கும் அம்மாவுக்கும் கொஞ்ச நாளாக ஒரே போராட்டமாக இருக்குது.

நண் : ஏன்'பா ?

தள் : அந்த அம்மாவை ஆஸ்பத்திரிக்குப் போய் வேலே செய்யாமல் இவருக்கே உரிய பொம்மையாக இருக்க வேண்டும் என்கிருர் அய்யா. அம்மாவோ தான் படித்த படிப்பு வீண்போகாமல் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று சொல்கிருர்.

நண் : இதற்குத்தாளு போராட்டம்? அம்மா சொல்கிறது நியாயம்தானே தம்பி.

தள் : அது உனக்குத் தெரியுது. பி. இ. படித்த அய்யா வுக்குத் தெரிய'ணுமே! அய்யாவின் போக்கே ஒரு மாதிரியாகத்தான் இருக்குது. கடற்கரைக்கு அடிக்கடி போகிருரே தவிர, கடலின் அழகையும் அருமையையும் இவர் கண்ட நாளே இல்லே. பெண்கள் பலர் இருக்கும் பக்கமாகப் போகிருர். சினிமாவுக்குப் போளுலும் இவருடைய கண் பார்வை இப்படித்தான் அலேகிறது.

நண் : தம்பி! தலேகுனிந்து மற்றப் பெண்களின் காலேயே பார்க்க வேண்டும் என்று சொன்னுல் இந்தக் காலத்தில் செல்லாது.

தள் : ஆனுல், வேறு வேலே இல்லாமல் ஒரே பித்தாய் மயங்கிப் பார்ப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லே.

நண் : குப்பைகளே நாடித் திரியும் கோழியை எத்தனே நாள் கூட்டில் வைத்துக் காக்கமுடியும்?

தள் : மாமனுர் வீட்டிலேயிருந்து கார் வாங்கிக் கொடுக்கச் சொல்லி அந்த அம்மாவைத் தொல்லேப்படுத்திளுர்.

நண் : கார் வாங்கிக் கொடுத்தார்களா ?

துள் : பாவம். அந்தப் பெரியவர், மகள் எப்படியாவது கணவரோடு நல்லபடி வாழ வேண்டுமே என்று எண்ணிப் பத்தாயிர ரூபாய்க்குச் செக் அனுப்பியிருக்கிறார். அதை எடுத்துக்கொண்டு உடனே கார் வாங்கப் புறப்பட்டுப் போய்விட்டார்.

நண் : கொடுத்து வைத்த மாதிரி கேட்கிறார்களே! அதைச் சொல்லு. ஒருவேளை பெரியவர் முந்தின பிறப்பிலே வாங்கியிருப்பார். அந்தக் கடனைத் தீர்க்கிறார். வேறு என்னத்தைச் சொல்ல?

துள் : பாவம் அந்த ஆளுக்கும் துன்பத்துக்குமேல் துன்பம்! ஒரே மகன் இருக்கிறார். அவருக்குக் காய்ச்சலும் இருமலுமாக இருக்கிறதாக நேற்று அம்மாவிடத்திலே வந்து சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார். ஒரு வேளை டி. பி.யாக இருக்குமோ என்று டாக்டர் அம்மா சந்தேகப்படுகிறார்!

நண் : (பதற்றமுடன்) என்ன அது?

துள் : என்ன அண்ணே! இப்படிப் பயப்படுகிறாய்.

நண் : டி. பி. என்ற பெயரைக் கேட்டாலே எமன் வந்து விட்டான் என்ற குரலைக் கேட்டதுபோல் ஆகிறது இந்தக் காலத்தில்.

துள் : பாவம், டாக்டர் அம்மா அண்ணனை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறார். சரி, நான் வரட்டுமா? வீட்டிலே ஒருத்தரும் இல்லை. நேரம் ஆச்சு.

(இருவரும் பிரிகிறார்கள்.)

## காட்சி : 13

**இடம் :** ஆஸ்பத்திரி.

**காலம் :** காலை.

**மாந்தர் :** சிவக்கொழுந்து, அல்லி, சோமசுந்தரம், டாக்டர், இன்பவல்லி.

[சோமுவை உட்காரவைத்து டாக்டர் நோயை ஆய்கிறார்.]

**டாக்டர் :** (சிவக்கொழுந்துவிடம்) எவ்வளவு நாட்களாக இப்படி உடம்பு மெலிந்துவருகிறது ?

**சிவக் :** ஒருமாத காலமாக.

**டாக்டர் :** மாலையில் நாள்தோறும் காய்ச்சல் வருகிறதா ?

**சிவக் :** பத்துப் பதினைந்து நாட்களாக......

**டாக்டர் :** இருமல் ?

**சிவக் :** ஒருவாரமாகக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது.

**டாக்டர் :** மார்புவலி இருக்கிறதா ?

**சிவக் :** நேற்றுப் பூங்காவிற்குப் போயிருந்தபோது கொஞ்சம் அதிகமாக இருமினானும், அதனால் கொஞ்சம் மார்புவலி ஏற்பட்டிருக்கிறது. ஒருவர் உதவியோடு வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

**டாக்டர் :** டாக்டர் அல்லி ! எக்ஸ்ரே எடுத்துப் பார்க்க வேண்டும்.

அல்லி : பாருங்கள் டாக்டர்.

(டாக்டர் சோமுவைக் கூட்டிக்கொண்டு உள்ளே போகிறார். இன்பவல்லி வேறொரு பக்கமாக வருகிறாள்.)

அல்லி : (வியப்புடன்) இன்பவல்லி !

வல்லி : (அல்லியின் கைகளைப் பிடித்து) அல்லி !

அல்லி : (சிவக்கொழுந்து திகைத்தாற்போல் நிற்கிறார். அவரிடம்) அப்பா ! இன்பவல்லி தெரியவில்லையா ? என்னோடு படித்துவந்தாளே ! நினைவில்லையா ?

சிவக் : (கூர்மையாகப் பார்த்துவிட்டு) பார்த்தாயா ? மறந்து விட்டேன் அம்மா. உன்னை அடிக்கடி வந்து கல்லூரிக்கு அழைத்துச் செல்வாளே இன்பவல்லி ; எவ்வளவு மாறிவிட்டாள் !

அல்லி : இன்பவல்லி ! நீ எங்கே வந்தாய் ?

வல்லி : (வருத்தத்துடன்) என் கணவருக்கு இருமல்.

அல்லி : என்ன ? இருமலா ?

வல்லி : ஆமாம் அம்மா. (கண்களைத் துடைத்துக்கொள்கிறாள்.)

சிவக் : வருத்தப்படாதே அம்மா ! குணமாகிவிடும்.

வல்லி : (கண்கலக்கத்துடன்)அந்த நம்பிக்கையால்தான் கையிலிருந்த காசையெல்லாம் செலவழித்தபின் கழுத்திலும் கையிலும் உள்ள பொன்னையும் விற்றுக் கணவரின் உயிரைக் காப்பாற்றப் பாடுபடுகிறேன்.

சிவக் : எந்த ஊரில் இருக்கிறாய் அம்மா ?

வல்லி : பெங்களூரில் இருக்கிறேன். இங்கே வந்து மூன்று மாதம் ஆகிறது.

அல்லி : வந்தவள் எனக்கு ஒருவார்த்தை சொல்லியனுப்பியிருக்கக் கூடாதா ? வந்து என்னால் ஆன உதவியைச் செய்திருப்பேனே.

சிவக் : அவருக்கு என்ன வேலை'மா ?

வல்லி : வருவாய் குறைந்த தொழில், ஆனால் உயர்ந்த தொண்டுக்கு உரிய தொழில். பள்ளிக்கூட ஆசிரியர், பி. ஏ., எல். டி. ஆசிரியர்.

அல்லி : குழந்தைகள் ?

வல்லி : பிறந்த இரண்டு குழந்தைகளையும் பறிகொடுத்து விட்டு எளிய வாழ்க்கை வாழ்ந்துவந்த எனக்கு இந்தக் கொடிய இடர் நேர்ந்தது. (அமைதி) நீங்கள் எங்கே வந்தீர்கள் ?

அல்லி : அண்ணனுக்குச் சிறிது உடல்நலம் இல்லை.

டாக்டர் : (எக்ஸ்ரே படத்துடன் வருகிறார். இன்பவல்லியைப் பார்த்ததும்) எப்படி இருக்கிறார் அம்மா ?

வல்லி : நேற்றிரவு கொஞ்சம் அயர்ந்து தூங்கினர். காய்ச்சல் பத்து மணிக்கு மேல் இல்லை.

டாக்டர் : சரி, மருந்து வாங்கிக்கொண்டு போங்கள். நான் பிறகு வந்து பார்க்கிறேன்.

வல்லி : அல்லி ! அறைக்கு வந்துவிட்டுப்போ. பத்தாம் நம்பர் அறை.

அல்லி : வருகிறேன் இன்பவல்லி.

டாக்டர் : (இன்பவல்லி சென்றபின் அல்லியிடம்) உங்களுக்குத் தெரிந்தவர்களா டாக்டர் ?

அல்லி : ஆம் டாக்டர். இன்பவல்லியும் நானும் இண்டர் மீடியேட் வரை ஒன்ருகப் படித்தோம். பார்த்து ஆறு ஆண்டுகளுக்குமேல் ஆகிறது. டாக்டர் ! அவள் கணவர் எப்படி இருக்கிருர் ?

டாக்டர் : அவருக்கு இரண்டு நுரையீரல் முனையும் பழுதாகிவிட்டது. ஒன்றும் சொல்வதற்கில்லை.

அல்லி : அண்ணன் எக்ஸ்ரே எப்படி இருக்கிறது டாக்டர்?

டாக்டர் : இதோ ! (படத்தை அல்லியின் கையில்கொடுக்கிருர். அல்லி படத்தை உயர்த்தி வெளிச்சத்தில் பார்க்கிருள்.) இடது பக்கத்து நுரையீரல் முனைமட்டும் சிறிது கெட்டிருக்கிறது. இந்த நோய் சில மாதங்களாகவே இருந்துவருகிறது. கவனிக்கவில்லை.

சிவக் : சோமு ! (கண்கலங்கியபடி உள்ளே செல்கிருர்.)

டாக்டர் : இரவில் சிலவேளைகளில் நாள்தோறும் காய்ச்சல் வந்தபோதே கவனித்திருக்கவேண்டும்.

அல்லி : டாக்டர் ! (கலங்குகிருள்.)

டாக்டர் : என்ன டாக்டர் அல்லி ! நீங்கள் அவுஸ் சர்ஜன், பெரிய ஆஸ்பத்திரியில். நீங்களே இதைக் கேட்டு இப்படிக் கலங்கிவிட்டால், பொதுமக்கள் நிலைமை என்ன ?

அல்லி : டாக்டர் ! (கலக்கத்துடன்) நம்மைத் தாக்காத துன்பம் நமக்கு விளையாட்டாக வேடிக்கையாக இருக்

கிறது. எத்தனையோ பேருடைய துன்பமான முடிவு களைக் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறேன், அப்போ தெல்லாம் நான் கலங்கவில்லை. சிறிதளவு இரக்கப் பட்டிருக்கிறேன். அவ்வளவுதான். காரணம் என்ன? அவர்கள் யார் யாரோ! ஆனால் இந்த நோயாளி அப்படி அல்லவே டாக்டர்! என் அண்ணன், உடன் பிறந்தவன். நான் காணும் கண்ணீர் யாருடையது? என்னை அன்பாக வளர்த்துக் காப்பாற்றிய அருமைத் தந்தையின் கண்ணீர் அல்லவா? நான் எப்படிக் கலங் காமல் இருக்கமுடியும் டாக்டர்?

டாக்டர்: டாக்டர் அல்லி! அப்பா கலக்கத்தோடு உள்ளே சென்றிருக்கிறார்; மிகவும் வருந்திக்கொண்டிருப் பார். பாவம்! முதலில் சென்று அவரைத் தேற்றுங்கள்.

(அல்லியும் டாக்டரும் உள்ளே செல்கின்றனர்.)

## காட்சி : 14

**இடம் :** பூங்கா.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** சுப்புரத்தினம், சியாமளா.

[சுப்புரத்தினம் சியாமளாவை எதிர்பார்த்தபடியே அங்கும் இங்கும் உலவிக்கொண் டிருக்கிறார். சியாமளா வருகிறாள்.]

**சியாமளா :** (வந்ததும் சுப்புவின் கையைக் குலுக்கிவிட்டு) என்னங்க மிஸ்டர் சுப்பு! உங்களை எங்கெல்லாம் தேடுவது ?

**சுப்பு :** ஏன் ? நான் இல்லாத இடம் பார்த்துத் தேடினீர்களா ?

**சியா :** முதலில் இங்கு வந்துவிட்டுத்தான் சென்றேன்.

**சுப்பு :** மன்னிக்க வேண்டும் சியாமளா! நான்தான் வர நேரமாகிவிட்டது. அது என்ன, சியாமளா கையில் புத்தகம் ?

**சியா :** இது ஒரு நல்ல புத்தகம் மிஸ்டர் சுப்பு ; உங்களுக்காக எடுத்துவந்தேன்.

**சியா :** (ஏளனமாகச் சிரித்துவிட்டு) எனக்குப் புத்தகம் படிக்கும் வழக்கமே கிடையாது சியாமளா. படித்ததை மறந்து போய் ஒரு நூற்றாண்டு ஆகிவிட்டது. படிப்புச் சோறு போடுமா ? படித்துத் தொலைத்த பிறகு அந்தத் திக்கையே திரும்பிப்பார்க்கக் கூடாது சியாமளா. இனிமேல் எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழ வேண்டும். அதற்கு நம்மைப் போல் நாகரிகமானவர் நாலுபேரைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**சியா :** மிஸ்டர் சுப்பு! வாழ்க்கையின் குறைகளை உணர்ந்து எண்ணிவருந்தும் கணவன்மனைவிமார்க்கு இது ஒரு

நல்ல மருந்து ; நாகரிகத்தின் உயிர்நாடி எது என்று காட்டும் ஒரு சிறந்த புத்தகம்.

சுப்பு : எங்கே சில நல்ல பகுதிகளைப் படித்துக் காட்டு, பார்ப்போம்.

சியா : (புத்தகத்தைத் திருப்பிப் படிக்கிறாள்.) "கணவனும் மனைவியும், அன்பு அறிவு திறமை எல்லாம் உடைய வர்களாக இருந்தாலும் சிறிது காலத்திற்குப் பிறகு வாழ்க்கை முறிந்து போகும். காரணம் என்ன? குறை மனைவியிடத்தில் இருக்கலாம் ; அல்லது, கணவரிடத் தில் இருக்கலாம்."

சுப்பு : முற்றிலும் உண்மை சியாமளா. என்னைப் பொறுத்தவரையில் குறை மனைவியிடத்தில்தான். இன்னும் படி.

சியா : (மீண்டும் படிக்கிறாள்.) "தன்னுடைய விருப்பம் போல் நடக்க முடியாத மனைவியிடத்தில் கணவன் எத்தனை நாள் அன்பு காட்டமுடியும் ?"

சுப்பு : பலே ! இப்படிக் கொடு சியாமளா. கோடு போட்டு வைக்க வேண்டிய வரிகள். (வாங்கிக் கோடுபோட்டு) உண்மை, உண்மை (என்று சொல்லிக்கொண்டே அவ்வாறு எழுதுகிறார்.)

சியா : (புத்தகத்தை வாங்கி) இன்னும் படிக்கிறேன் கேளுங்கள் : "தன்னுடைய விருப்பம் போல் நடக்க முடியாத கணவனிடத்தில் மனைவி எத்தனை நாள் அன்பு காட்ட முடியும் ?"

சுப்பு : (திகைத்து) புத்தகத்தின் ஆசிரியர் நடுநிலைமை யோடு இருக்கிறார் சியாமளா,

சியா: இந்தப்புத்தகம் உங்களுக்குவேண்டுமா மிஸ்டர்சுப்பு?

சுப்பு : புத்தகத்தின் பெயர் ?

சியா : 'எவர் குற்றம் !'

சுப்பு : 'எவர் குற்றம்' என் கண்களைத் திறந்துவிட்டது சியாமளா. இப்படிப்பட்ட நல்ல புத்தகங்களைப் படிக்

காமல் என் வாழ்நாளை வீணாக்கிவிட்டேன். (சியாமளாவிடமிருந்து புத்தகத்தை வாங்கிக்கொள்கிறான்.) மறந்துவிட்டேன் சியாமளா. ஒரு நல்ல செய்தி.

சியா : என்னங்க ?

சுப்பு : ஒரு புதுக் கார் வாங்கியிருக்கிறேன் சியாமளா.

சியா : என்னங்க இவ்வளவு அவசரப்பட்டு வாங்கிவிட்டீர்கள் ?

சுப்பு : ஏன் சியாமளா ?

சியா : என்னுடைய கார் சும்மாதானே இருக்குது. அதையே நீங்களும் பயன்படுத்திக்கொள்ளலாமே !

சுப்பு : தங்கமான மனசு. நானாக வாங்கவில்லை சியாமளா. என்னுடைய மாமனார் திருமணத்திற்கு ஒரு கார் பரிசாக வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தார். அதை வாங்கிக்கொள்ளும்படி கடந்த ஆறு ஏழு மாதமாக வற்புறுத்தியும் வந்தார். நான்தான் தடுத்து வந்தேன். நேற்று எவ்வளவோ சொல்லியும் கேளாமல் பத்தாயிர ரூபாய்க்குச் செக் கொண்டுவந்து கொடுத்து விட்டுப் போனார்.

சியா : சரிதான். அதை உங்களுக்காக வாங்கிக் கொடுத்திருப்பதாக நினைக்கிறீர்கள். அது தான் இல்லை. மகள் டாக்டர் வேலை பார்க்கிறாள். அவளுக்குக் கார் இருந்தால் நலமாக இருக்குமே என்று...

சுப்பு : சியாமளா ! (வெறுப்புடன்) அவள் ஆஸ்பத்திரியில் வேலை செய்வதே எனக்குப் பிடிக்கவில்லை ; அதையே விட்டுவிட வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அந்த வேலையை விட்டால்தான் அவளுக்குக் காரும் உண்டு ; வாழ்வும் உண்டு.

சியா : கோபப்படாதீர்கள் மிஸ்டர் சுப்பு. வாங்கள் ; என் வீட்டிற்குப் போய்விட்டுப் போகலாம்—

(இருவரும் போகிறார்கள்.)

## காட்சி : 15

**இடம் :** சுப்புரத்தினம் வீடு.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** அல்லி, இன்பவல்லி, குள்ளன்.

[அல்லியும் இன்பவல்லியும் பேசிக்கொண்டு வீட்டினுள்ளிருந்து வருகிறார்கள்.]

வல்லி : உன் வீட்டைக் கண்டுபிடிப்பதற்குள் மிகவும் திணறிவிட்டேன். ஆமாம் ; டாக்டர் அல்லி, எம். பி. பி.எஸ். என்று ஒரு போர்டு போட்டிருக்கலாமே ! ஒன்றும் படிக்காத கற்றுக்குட்டிகள் எல்லாம் எவ்வளவோ விளம்பரம் செய்கிறார்களே !

அல்லி : நல்லதுதான். (சோர்வுடன்) ஆனால் எனக்கு அந்த உரிமை ஏது ?

வல்லி : ஏன்? எத்தனையோ டாக்டர்கள் போட்டிருக்கிறார்களே ?

அல்லி : பலகையும் விளம்பரமும் இல்லாமலே நோயாளிகள் வீடுதேடிவந்து மருந்து வாங்கிக்கொண்டு போகிறார்கள். அவர்கள்மேல் சீறிவிழுகிறார்.

வல்லி : யார் ? உன் கணவரா ?

அல்லி : அவர்களை அனுப்பும் வரையில் என்னையும் வெறுப்போடு பார்க்கிறார். இந்தத்தொழிலையே விட்டுவிட வேண்டும் என்கிறார்.

வல்லி : அப்படியானால் உன் படிப்பால் உலகத்துக்கு என்ன பயன் ?

அல்லி : உனக்குத் தெரியுமே இன்பவல்லி ; நான் இளமை முதல் அடிமைத் தன்மையில் பழக்கம் இல்லாதவள். என்னை உரிமை கொடுத்து வளர்த்தார் அப்பா ; ஆனால் இப்போது பாதி அடிமை வாழ்வுதான்.

வல்லி : என்ன அல்லி ! நீ ஒரு டாக்டர். அவர் ஓர் எஞ்சினியர். இருவரும் படித்தவர்கள், நாகரிகமானவர்கள்; அடிமை வாழ்வு என்றால் விளங்கவில்லையே !

அல்லி : அடிமை என்றால் கைவிலங்கு கால்விலங்கு இட்டால்தான் அடிமையா? என் விருப்பம்போல் உடை உடுத்திக்கொள்ள விடுவதில்லை, என் விருப்பமான தொழிலை - வைத்தியத் தொழிலைச் செய்யவும் விடுவதில்லை. அளவுக்குமேல் உரிமைகொடுப்பவர் போல் முதலில் தோன்றினார். பிறகு பார்த்தால் அடிமையாக நடத்துவதில் வல்லவராக இருக்கிறார்.

வல்லி : எப்படியும் அவர் மனம் அறிந்து நடக்கவேண்டியது தான் உன் கடமை.

அல்லி : அடிமையாக வாழ்வதற்குக் கற்றுக்கொள்வேன். அது என்னால் முடியும். அப்படி இருந்தும் இவரைத் திருத்தமுடியவில்லையே.

வல்லி : இப்படியெல்லாம் பேசாதே.

அல்லி : வேறு யாரிடமும் பேசியது கிடையாது. அன்பான தந்தையிடமும் என் துன்பத்தைக் கூறவில்லை. இன்பவல்லி! நீ உண்மையான தோழி; உன்னிடம் சொல்வதில் தவறில்லை. இவருடைய வாழ்க்கையில் சில தீமைகள் இருக்கும். அது இயற்கை என்று எண்ணிவந்தேன், ஆனால் பல தீமைகளும் இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. நெறியில்லாத பெண்களை நாடி அலைகிறார்.

வல்லி : அய்யோ அல்லி! நீயாவது நல்லபடி வாழ்கிறாய் என்று எண்ணி மகிழ்ந்தேனே!

[டெலிபோன் மணி ஒலிக்கிறது. அல்லி எடுத்துப் பேசுகிறாள்.]

அல்லி : யார் - ஆஸ்பத்திரியா - ஓ! டாக்டரா - நான் தான் டாக்டர் அல்லி பேசுகிறேன் - என்ன செய்தி - இன்பவல்லியா ?

இன்பவல்லி : (பதற்றத்துடன்) என்ன அல்லி ?

அல்லி : (இன்பவல்லியைப் பேசாமல் இருக்கும்படி சைகை செய்துவிட்டு மீண்டும் பேசுகிறாள்.) ஆமாம்; பக்கத்தில் -

தான் இருக்கிறாள் – வரச்சொல்லவா ? – அவள் கணவர் ? – (முகத்தில் பயம் தோன்றுகிறது. அதை மறைத்தபடியே) நலம்தானே – இதோ வரச் சொல்கிறேன்.

இன்பவல்லி : என்ன அல்லி ?

அல்லி : ஒன்றும் ஆபத்து இல்லை. அவருக்குச் சிறிது மயக்கம்...

இன்பவல்லி : அய்யோ அல்லி ! நான் வருகிறேன். (நடுக்கத்துடன் செல்கிறாள்.)

அல்லி : (தனக்குள்) பாவம் ! இன்பவல்லிக்கு இந்தக் கொடிய இடர் நேர வேண்டுமா ? கழுத்திலும் கையிலும் உள்ள பொன்னையும் விற்றுக் கணவரின் உயிரைக் காப்பாற்றப் பாடுபடுகிறாள். ஏமாற்றம் அடைவாளோ என்று எண்ணும்போது என் நெஞ்சமே பகீர் என்கிறதே !

(தள்ளன் 'எவர் குற்றம்' என்ற புத்தகத்துடன் வருகிறான்.)

தள்ளன் : அம்மா இந்தப் புத்தகம் காரில் இருந்தது. அய்யாவின் மேசைமேல் வைக்கட்டுமா ?

அல்லி : என்ன புத்தகம் ? (கையில் வாங்கி) அவர் புத்தகத்தைக் கையால் தொடும் வழக்கமே இல்லாதவராயிற்றே. சரி, போ. நான் வைத்துவிடுகிறேன். (தள்ளன் சென்றபின்) என்ன புத்தகம் ? (திருப்பிப் பார்க்கிறாள்.) 'எவர் குற்றம் ?' (படிக்கிறாள்.)

தூரல் : " எந்தப் பெண்ணாவது எந்த ஆணாவது இருவர்கூடி இன்ப வாழ்க்கை வாழமுடியும் என்று எண்ணுவதைப் போல் மூட நம்பிக்கை வேறு ஒன்றுமில்லை."

அல்லி : ஆம். முற்றிலும் உண்மை. என் வாழ்க்கையே அதற்குச் சான்று. (மீண்டும் சில பக்கங்கள் தள்ளிப் படிக்கிறாள்.)

தூரல் : " தன்னுடைய விருப்பம்போல் நடக்கமுடியாத மனைவியிடத்தில் கணவன் எத்தனை நாள் அன்புகாட்ட முடியும்."

அல்லி : என்ன ! யாரோ கோடுபோட்டு வைத்திருக்கிறுர்களே ! – " உண்மை ; உண்மை " – ஆம் ; இது அவருடைய எழுத்துத்தான். அவரே எழுதியிருக்கிறுர். இப்படிப்பட்ட எண்ணம் இவருக்கு ஏற்பட்டிருக்கிறதா ? இத்தகைய புத்தகத்தைப் படித்து எத்தனை வாழ்க்கை பாழாகும்! காதலைப் பற்றித் தவருன கருத்துக்களைக் கவர்ச்சியான நடையில் வெளிப்படுத்தவும் தமிழ்நாடு முன்வந்துவிட்டதே. (மீண்டும் புத்தகத்தைத் திருப்பி வேருெரு பகுதியைப் படிக்கிறுள்.)

நூல் : " தன்னுடைய விருப்பம்போல் நடக்கமுடியாத கணவரிடத்தில் மனைவி எத்தனை நாள் அன்புகாட்ட முடியும் ?"

அல்லி : (மிகுந்த வெறுப்புடன்) என்னவோ என்று பார்த்தால் கையாலும் தொடத் தகாத அழுகலாக இருக்கிறதே ! புத்தகம் எழுதியவர் சமூகத்திற்கு எவ்வளவு பெரிய தீங்கு செய்கிறுர் ? அகப்பொருள் என்று காதலைக் கலையாக வளர்த்த நாடு இந்த இழிநிலைக்கு வந்ததே. ஆம்; இனி நாள்தோறும் பத்துப் பதினைந்து பேருக்கு மருந்துகொடுத்து அவர்களுடைய நோயை அரை குறையாகத் தீர்க்க முயற்சி செய்வதைப் பார்க்கிலும் இத்தகைய அழிவுவேலை செய்யும் கருத்துக்களைப் பொய்ப்படுத்திஞல் பெரிய தொண்டாக இருக்கும். எப்படியும் இந்த ஆராய்ச்சியைச் செய்தே தீருவேன். புதிய புத்தகத்தை உருவாக்குவேன். இதுபோல் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளி வந்தாலும் சரி, நூருயிரக்கணக்கான குடும்பங்கள் என் கருத்துக்குச் சான்று பகரும். (டெலிபோன் மணி ஒலிக்கிறது–எடுத்துப் பேசுகிறுள்.) ஆமாம்–அல்லிதான்–என்ன ? இன்பவல்லி – இன்பவல்லியின் கணவரா – இறந்து விட்டாரா ? அய்யோ !

## காட்சி: 16

**இடம் :** பூங்கா.

**காலம் :** மாலை.

**பாத்திரர் :** சுப்புரத்தினம், சியாமளா, சுகுமாரன்.

### நிழற்காட்சி

[குதிரைப் பந்தயம்—குதிரைகள் ஓடுகின்றன. மக்களின் ஆரவாரமும் கேட்கிறது. நிழற்காட்சி அமைக்க வழி இல்லையென்றால் குரல் மட்டும் கேட்டல்]

பல குரல்கள் : ஜூபிடர், வீனஸ், அடே கழுத்து நீளுது, மூக்கு நீளுது, அய்யய்யோ அந்த நொண்டிக் குதிரை கீழே விழுந்து விட்டது—

### காட்சி மாற்றம்—பூங்கா.

**சுப்பு :** (கையில் குதிரைப் பந்தயக் குறிப்புடன்) ஓ! ரேஸ் தொடங்கி விட்டதே!

**சியா :** நாமும் அங்கே போவோமே!

**சுப்பு :** வேண்டாம் சியாமளா. அந்தக் கூட்டத்தில் போய் நம்மால் இடிபட முடியாது. மேலும், நாம் பணம் கட்டியிருக்கிற குதிரை முன்னே சென்றால் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் பின்னடைந்தாலோ அல்லது கீழே விழுந்துவிட்டாலோ ஏற்படுகிற அதிர்ச்சியும் வேதனையும் தாங்கவே முடியவில்லை. அப்படித் துன்பப் படுவதைவிட இங்கேயே நிற்போம். சுகுமார் பார்த்து வந்து ஏதாவது ஒரு முடிவைச் சொல்வான். அனுபவிப்போம்.

**சியா :** என்னங்க, நம் குதிரை முதலில் வருமா?

**சுப்பு :** அப்படித்தான் 'கோர்ஸ்' சொல்கிறது. அதை நம்பி, குதிரை பார்வைக்குச் சயரோகம் பிடித்த

மாதிரி இருந்தாலும் அதன் மேலே பணம் கட்டியிருக்கிரும்.

சியா : நாம் இருவரும் ஒரே குதிரைக்குப் பணம் கட்டியிருக்கிரும்.

சுப்பு : அதுதான் நம் ஒற்றுமையைக் காட்டுகிறது.

சுகுமார் : (சோர்வுடன் ஓடிவந்து) என்னங்க! இப்படி வந்து நிற்கிறீர்கள் ?

சுப்பு : என்னப்பா ! என்ன ஆச்சு ?

சுகுமார் : என்ன ஆகும்? ரேஸ் ஆரம்பித்த பிறகு இப்படி வந்து நின்ருல்—?

சுப்பு : ஏன் ? எங்களேயும் குதிரைகளோடு ஓடச் சொல்கிருயா ?

சுகுமார் : நம் குதிரைதான் முதலில் வந்துகொண்டிருந்தது. ஆனுல் திடீரென்று கால் இடறிக் கீழே விழுந்துவிட்டது.

சுப்பு : சரிதான்'பா. உன்னே நம்பி அந்தச் சயரோகக் குதிரைக்குப் பணம் கட்டினேனே. வாங்கின சம்பளமெல்லாம் போச்சு.

சியா : கவலேப்படாதீர்கள் மிஸ்டர் சுப்பு. அடுத்த ' சான்சில் ' பார்த்துக்கொள்ளலாம்.

சுப்பு : அடுத்த 'சான்சுக்கு' இனிமேல் திருடவேண்டியது தான்.

சுகுமார் : சியாமளா இருக்கிறவரை உங்களுக்கு அந்தக் கவலேயே வேண்டாம், வாங்க.

சுப்பு : '(பக்கத்தில் கூப்பிட்டு) ஏ ! என்னப்பா மெதுவாக நீயும் அவளேப் பெயர் சொல்லிக் கூப்பிடத் தொடங்கி விட்டாய். முதலில் உன்னே நீக்கிவைக்க வேண்டியது தான். நான் வருகிறேன்'பா,

சுகுமார் : (அவர்கள் சென்றபின்) நீயா என்னே நீக்கப் போகிறே. பார் முதலில் நான் உன்னேச் சியாமளாவிடமிருந்து பிரித்துவிடுகிறேன். (போகிருன்.)

## காட்சி : 17

**இடம் :** சுப்புரத்தினம் வீடு.

**காலம் :** இரவு.

**மாந்தர் :** அல்லி, குள்ளன், சுப்புரத்தினம்.

### பாட்டு

அல்லி : துன்பம் தீருமா - என் வாழ்வில்
துன்பம் தீருமா — என்
துணைவர் மனமும் மாறுமா
தொல்லை யெல்லாம் தீருமா (துன்பம்)

நாதன் மனமே நாடும் வகையில்
நானென் செய்வனே
போது மென்றன் முயற்சி வீணாய்ப்
போச்சு தென் செய்குவேன்
புகழ்கலைகள் வேண்டு மெனிலோ
போற்றவே கற்றின்பம் அளிப்பேன் (துன்பம்)

உயிர் இல்லா யந்திரம் இயக்கவும்
உற்ற குறைகள் நீக்கி ஆக்கவும்
வல்லவர்தம் மனம் மாற்றி
ஏழைமங்கை துயரம் ஆற்றி
இன்ப மகிழ்வாய் வாழாரோ (துன்பம்)

**குள்ளன் ;** (வெளியே வந்து) அம்மா ! நான் வருகி றேன்'மா. நேரமாச்சு.

**அல்லி :** அய்யா வரவில்லையே !

**குள்ளன் :** அவர் எப்போ வருகிறாரோ !

**அல்லி :** சரி, நீ போ.

**குள்ளன் :** சரி'மா (சென்றவன் தயக்கத்துடன் நின்று) அம்மா போன மாதச் சம்பளம்...அய்யா இன்னும் தரவில்லை அம்மா !

அல்லி : என்ன ! தேதி 10 ஆகிறது. சம்பளமும் வாங்கியிருப்பார் ! ஆனால் கையிலும் பணம் இருப்பதாகத் தெரியவில்லை.

குள்ளன் : சம்பளமெல்லாம் வாங்கின அன்றே தீர்த்து விட்டார் அம்மா.

அல்லி : என்ன ! வேலைக்காரர்க்குச் சம்பளம் கொடுக்கவில்லை ; வீட்டு வாடகை, பால் கடன், தயிர்க்கடன் இன்னும் தீரவில்லை ; அதற்குள்ளாக......

குள்ளன் : ஒரு நொடியிலே வாங்கின சம்பளத்தை யெல்லாம் குதிரைப் பந்தயத்திலே பறக்க விட்டு விட்டாரம்மா.

அல்லி : இந்தக் கொடிய பழக்கம் வேறு ஆரம்பித்து விட்டாரா ?

குள்ளன் : ஆமாம் அம்மா,

அல்லி : (கவலையுடன்) இப்போது அவர் எங்கே என்ன செய்கிறார், எப்படி இருக்கிறார் என்பவற்றைக் கவனிக்கவும் நேரம் இல்லாமற் போய்விட்டது. ஆஸ்பத்திரிக்குப் போய் அண்ணனைப் பார்க்கவும் அப்பாவைத் தேற்றவுமே சரியாக இருக்கிறது. நானும் அப்பாவும் எவ்வளவு கவலைப் படுகிறோம். எங்களுடைய துன்பத்துக்காக இரக்கப்படும் மனம் சிறிதும் இல்லையே அவருக்கு.

குள்ளன் : துன்பத்தைக் கண்டு கசியாத மனம் நல்ல மனமா ? அதை அட்டையின் மனம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆமாம்'மா. நம் ரத்தத்தை உறிஞ்சும் வரையில் உறிஞ்சிவிட்டு, நாம் வருந்தும் போது அதைப் பற்றிக் கவலை இல்லாமல் இருக்க வேறு யாரால் முடியும் ? அட்டையால்தான் முடியும்.

அல்லி : அப்பா வாங்கிக் கொடுத்த கார், தக்க சமயத்தில் அப்பாவுக்கு உதவக் கூடாதாம். நோயாளியாக இருக்

கும் அண்ணனைப் பார்க்கப் போகும் அப்பாவுக்குப் பயன்படக் கூடாதாம்...

துள்ளன் : எவளோ ஒரு வேசிக்கு — குடும்பத்தில் வாழும் வேசிக்குப் பயன்படுகிறது. ஆமாம்'மா. நீங்கள் பஸ்ஸில் போனாலும், ரயிலில் போனாலும், எப்படிப் போனாலும், காருக்கு மட்டும் ஓய்வு கிடையாதம்மா.

அல்லி: அய்யோ, எனக்குப் பயன் படாத அந்தக் கார் என் வாழ்க்கையைப் பாழ்படுத்துவதற்குப் பயன்பட வேண்டுமா?

துள்ளன் : (வெளியே ஆள் வரும் சத்தம் கேட்டுக் குள்ளன் போய்ப் பார்த்து வந்து) அம்மா! அய்யா வந்தாச்சு.

(சுப்பு தடுமாறிக்கொண்டு வருகிறான்)

அல்லி : (பதற்றத்துடன்) என்ன இது?

சுப்பு : சுலோசனா! (அல்லியின் தோளைத் தொடப்போகிறான். அல்லி நிலைமையை அறிந்து வெறுப்புடன் பார்க்கிறாள்.)

சுப்பு: தெரியாமல், தெரியாமல் சொல்லிவிட்டேன் சுகுணா!

அல்லி : (கண் கலங்கி, வெறுப்போடு) கண்ணும் தெரியவில்லை! அவ்வளவு போதையா?

துள்ளன் : (தனிமையில்) அதுதான் அய்யா ஆடுகிற ஆட்டத்திலேயே தெரியுதே, கெட்ட கேட்டுக்கு இது ஒன்றுதான் பாக்கி.

சுப்பு : (அல்லியைப் பார்த்து) சனியன்! நீ ஏன் இங்கே வந்தாய்? உன்னை யார் இந்த இடத்திற்கு வரச் சொன்னார்கள்? (சுற்றி ஒருமுறை பார்த்துவிட்டு) வீட்டுக்கா வந்துவிட்டேன்? சே!

(கோட்டைக் கழற்றி வீசிவிட்டு உள்ளே செல்கிறான். ஒரு காகிதம் கீழே விழுகிறது. அல்லி அதை எடுத்துப் படிக்கிறாள்.)

அல்லி : அன்புள்ள சுலோசனா!

சுப்பு—குரல் : நீ என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டாய். உன்னை, போன வாரத்தில் கடற்கரையில் கண்டேன்

அல்லவா ? அந்த இடத்திற்கு நான் அடுத்தடுத்து வந்து காத்து நின்றேன். என் தவம் நேற்றுத்தான் பலித்தது. ஆனால் என் நண்பன் ஒருவன் அந்நேரத்தில் அங்கே வந்து சேர்ந்தான். அவனோடு பேசிக்கொண்டிருந்த நேரமெல்லாம் என் மனம் உன்னையே நாடிக் கொண்டிருந்தது. அவனும் அதை எப்படியோ தெரிந்துகொண்டான். என்ன சுப்பு, நான் சொல்வது உன் காதில் விழுவதாகத் தெரிய வில்லையே, வீட்டில் டாக்டர் அம்மா வந்து விட்டிருப்பாள் என்று எண்ண மெல்லாம் அங்கே போய் விட்டதோ என்று கேலியும் செய்தான். என் மனம் ஒரு நாளும் அல்லியை நினைத்து இப்படி ஏக்கம் அடைந்ததே யில்லை. ஆனால் நான் அவனை அனுப்பிவிட்டுத் திரும்பி வந்தவுடன் அந்த இடத்தில் உன்னைக் காணவில்லை. அங்கே எதிர்பாராமல் சுகுணா வந்து நின்றுகொண்டிருந்தாள். வீட்டு வழியாகக் கார் போவதா யிருந்தால் வருகிறேன், வழியில் என்னை விட்டுவிட்டுப் போகலாம் என்றாள். அவள் ஜெனரல் ஆஸ்பத்திரியில் நர்ஸ். அவளே வலிய வந்து என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள். வேண்டாம், பின் புறத்தில் போய் உட்காரு என்று சொல்வது எனக்கு நாகரிகமாகத் தெரியவில்லை. ஆகையால் பேசாமல் இருந்து தொலைத்தேன். இது தான் உண்மை. ஆனால் செல்லையாத் துணிக்கடையின் எதிரே கார் நின்றபோது அங்கே உன்னைக் கண்டதும் என் மனம் திடுக்கிட்டது. அந்தச் சுகுணாவை ஏன் என் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டேன் என்று வருந்தினேன். மன்னிக்கவும். நீ நடனக்கலை கற்றுக்கொடுத்தும் பின்பாட்டுப் பாடியும் கலைத் தொண்டு செய்வதாய்க் கூறினாய். நீ தமிழ் நாட்டின் கலையுலகத்தில் தனிச் சிறப்புப் பெறுவதற்காக நான் பாடுபடப் போகிறேன். இதுவே இனிமேல் என்

வாழ்க்கையின் குறிக்கோள். இப்படிக்கு உன்னுடைய அன்பிற்குரிய – சுப்பு.

அல்லி : குறிக்கோளாம், குறிக்கோள் ! இவர் வாழ்க்கையில் குறிக்கோள் என்பது உண்டா? சுகுணு பார்த்தால் ஒன்றும் தெரியாத இளம் பெண்ணுய், ஆஸ்பத்திரியில் தொண்டு செய்கிருள் ! வலிய வந்து என் கணவர் அருகில் இடம் தேடும் அளவிற்குப் பேயாக இருக்கிருளா அவள்? நன்றி கெட்டவள். அன்று அவள் மேல் குற்றம் சாட்டியதற்காக இப்போது என்னை இப்படிப் பழிவாங்கப் பார்க்கிருளா? அவளைப் பழித்துப் பயன் என்ன ? வாழ்க்கையில் பேயாய் அலையும் இவரை அல்லவா நோகவேண்டும்? இப்படிப்பட்டவரைத் திருத்துவது எப்படி ? வாழ்க்கையில் ஏதாவது குறிக்கோள் உடையவராக இருந்தால் அந்தக் குறிக்கோளுக்காக என் வாழ்க்கையைப் பலியிடவும் துணிவேனே ! (டெலிபோன் மணி ஒலிக்கிறது)

அல்லி : யார் அது? ஓ! ஆஸ்பத்திரியிலா? – டாக்டர் அல்லி பேசுகிறேன். என்ன அண்ணு?–இறந்துவிட்டாரு ? (டெலிபோனைக் கீழேவைத்துவிட்டு) அய்யோ அண்ணு !

## காட்சி : 18

**இடம் :** சியாமளா வீடு.

**காலம் :** இரவு.

**பாத்திரங்கள் :** சியாமளா, சுப்புரத்தினம், வள்ளி.

(சுப்புரத்தினம் சியாமளாவைப் புகழ்ந்து பாடுகிறான். பாட்டு முடிகிறது.)

சுப்பு : சியாமளா! உன்னோடு கிடைக்கும் உறவுக்காக நான் இனி இவ்வுலகத்தையே பொருட்படுத்தமாட்டேன்.

சியா : ஏன் இப்படி வீணாகப் பொய் பேசுகிறீர்கள்.

சுப்பு : உண்மைதான் சியாமளா. உன் நடை, உடை, பார்வை, பேச்சு எல்லாவற்றிலும் என் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டேன். உறுதியாகக் கேட்கிறேன், நீ என்னைக் கைவிடமாட்டாயே!

சியா : சுப்பு! நீங்கள் என்னைக் கைவிடமாட்டீர்களே!

சுப்பு : நன்றாகச் சொன்னாய். இனி என்வாழ்க்கை நீ இல்லாமல் முடியாது. என் உடல் பொருள் ஆவி எல்லாம் உனக்கே உரியவை!

சியா : உண்மையாகச் சொல்கிறீர்களா?

சுப்பு : சந்தேகம் கொள்ளக் காரணம் இல்லையே!

சியா : அப்படியானால் நான் சொல்கிறபடி செய்வீர்களா?

சுப்பு : உடனே சொல், நொடிப்பொழுதில் செய்கிறேன்.

சியா : நீங்கள் ஒவ்வொருநாளும் ஆபீசுக்குச் சென்றபின் தனியாக இருந்து தவிக்கிறேன்.

சுப்பு : நீயும் என்னோடு ஆபீசுக்கு வருகிறேன் என்று சொல்கிருயா ?

சியா : அப்படிச் சொல்ல எனக்கு என்ன பைத்தியமா ? சுப்பு ! என்னிடம் இருக்கும் செல்வம் இன்னும் ஏழேழு தலைமுறைக்கும் நமக்குப் போதும். நீங்கள் வேலை பார்த்து ஆகவேண்டும் என்பதே இல்லை.

சுப்பு : என்ன சியாமளா ! என் வேலையை விட்டுவிடச் சொல்கிருயா ? வேண்டாம் சியாமளா. இன்னும் கொஞ்ச நாள் பொறு.

சியா : அப்படியானுல் இப்போது என்னிடம் நம்பிக்கை இல்லையா ?

சுப்பு : இல்லை சியாமளா...

சியா : என்ன, நம்பிக்கை இல்லையா ?

சுப்பு : அய்யய்யோ அதைச் சொல்லவில்லையே, சியாமளா! இருக்கிற நிலைமையில் தாளுக வேலைபோகுமுன் நாளுக அதை விட்டுவிடுவேன். அதற்கு இப்போது என்ன அவசரம் என்றேன்.

சியா : அது எப்படியும் போகட்டும். உங்கள் மாமனுரைப் போய்ப் பார்த்தீர்களா ?

சுப்பு : பார்க்கவில்லை சியாமளா. அன்று அடக்கச் சடங்கிற்குப் போயிருந்தேன். இடுகாட்டிலிருந்து நேராக உன் வீட்டிற்கே வந்துவிட்டேன். அதன்பிறகு அங்கே போகவேயில்லை.

சியா : ஒருமுறை அவரைப் போய்ப் பார்த்தால் அவருக்கும் ஒருவகை ஆறுதலாக இருக்கும். பாவம் ஆசைக்கு ஒரு மகன்...

சுப்பு : அவன் உயிரோடு இருந்து என்ன செய்யப் போகிருன் சியாமளா ! உதவாப் பயல் ! சாக வேண்டியது தானே. வாழ்க்கையில் கண்டபடி அலைந்த அவன் இனிமேல் பிழைத்து என்ன செய்யப்போகிருன் ?

சியா : யாரோ அறவாழியாம், ஆசிரியராம், அவர்தான் அடிக்கடி வந்து ஆறுதல் சொல்லிவிட்டுப் போகிருராம்.

சுப்பு : அறவாழி ! அவன் என் பகையாளி. ஆறுதல் கூறச் செல்கிருனும் மடையன். சிவக்கொழுந்துக்கு இவன் என்ன உறவா ? தவருன எண்ணத்தோடு தகாத செயல் செய்யத் துணிகிருன். விரைவில் அவனுக்கு முடிவு கட்டுகிறேன். அது சரி ! இது உனக்கு எப்படித் தெரியும் ?

சியா : நேற்று இங்கே மிஸ்டர் சுகுமார் வந்திருந்தார். (சுப்புவின் முகம் மாற்றம் அடைகிறது. சமாளித்துக்கொள்கிருர்.) அவர் சொன்ஞர். உங்கள் மனைவிகூட உங்களை வந்து பார்க்கவில்லையாமே !

சுப்பு : இல்லை சியாமளா. அவளுக்கு என்னைப் பற்றி ஏதாவது கவலை இருந்தால்தானே ? நீ எனக்காக எவ்வளவு பாடுபடுகிருய் ! உன் அன்பும் ஆதரவும் போல அணுவளவும் அவளிடம் இல்லையே !

சியா : அப்படியாஞல்...

சுப்பு : போதும் சியாமளா. வேறு ஏதாவது பேசு, சியாமளா !

(சியாமளாவின் பக்கத்தில் சென்று அவள் தோளில் கைகளை வைத்துத் தன் மார்பில் சாய்த்துக்கொள்ளப்போகிருன். வள்ளி வேகமாக உள்ளே வந்து, திடுக்கிட்டுத் திரும்புகிருள். சுப்புவும் சியாமளாவும் விலகிக்கொள்கின்றனர்.)

சுப்பு : வள்ளி ! எங்கே வந்தே ?

வள்ளி : சாப்பாடு தயாராகிவிட்டது. சொல்லிவிட்டுப் போக...

சுப்பு : சியாமளா, இவள் கழுத்தில் பெரிய மணியாக வாங்கிக் கட்டு.

சியா : நவரத்தின மணியா ?
சுப்பு : நாசமாய்ப் போச்சு. வெண்கலமணி. வரும்போது ஓசையோடு வரட்டும். (வள்ளியிடம்) கூப்பிட்டுக் கொண்டுவரக் கூடாதா ! கொஞ்சங்கூட நாகரிகம் தெரியலை. அவள் முகரையும் மூஞ்சியும் ! அழுக்கு மூட்டை மாதிரி ! (எல்லோரும் உள்ளே போகிறார்கள்.)

## காட்சி : 19

**இடம் :** சிவக்கொழுந்து வீடு.

**காலம் :** காலை.

**மாந்தர் :** சிவக்கொழுந்து, அறவாழி, பரமேசுவரி, அல்லி.

[சிவக்கொழுந்து வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கிறார். அறவாழியும், பரமேசுவரியும் ஆறுதல் சொல்லிக்கொண்டிருக்கின்றனர்.]

பரமேசுவரி : அண்ணன் இறந்துபோவான் என்று டாக்டர்கள் யாரும் நினைக்கவேயில்லை !

சிவக் : (மெதுவாகத் தலைநிமிர்ந்து) போய்விட்டான். அமைதியாக உயிரை விட்டுவிட்டான். பக்கத்திலே இருந்து அவன்முகத்தைப் பார்த்தபடியே இருந்தேன். என்னையும் மறந்துவிட்டு அந்த ஆவி அமைதியாகப் பிரிந்துவிட்டது. உதவாத வாடகை வீட்டை விட்டுக் குடியிருப்பவர் பிரிந்து போவதுபோல் அந்த ஆவி அவன்உடம்பை விட்டுப் பிரிந்துவிட்டது. அவன் உயிர் துன்பமில்லாமல் அமைதியாகப் பிரிந்துவிட்டது. ஆனால் அதைப் பார்த்திருந்த என் மனம் பட்ட வேதனை ! அய்யோ சோமு ! அவன் உருப்படியாகக் கூடிய பிள்ளையாக இல்லையே என்று ஒருகாலத்தில் வருந்தினேன். ஆனால் நாளடைவில் அவன் நல்லவனாக மாறியது கண்டு என் மனம் குளிர்ந்தது. அல்லியின் திருமணமும் ஒருவகையாக முடிந்தது. மகனும் இனிமேல் நல்லபடியாக வாழ்வான் என்று எண்ணி மகிழ்ந்தேன் ; அதற்குள் எலும்புருக்கிநோய் அவனுடைய உயிரையே பலிகேட்கும் என்று நினைக்கவில்லையே ! கடவுளே கடவுளே என்று அழுது அழுது முறையிட்டேன். வேண்டிக்கொண்டேன்.

அறவாழி : வாங்கள். சிறிது நேரம் வெளியே சென்று வரலாம். (சிவக்கொழுந்து எழுந்து உள்ளே செல்கிறார். பரமேசுவரியிடம்) அம்மா அவருடைய மனத்தில் அல்லியைப் பற்றிய கவலை வேறு புகுந்திருக்கிறது. அல்லி அடையாற்றுக்குப் போகாமல் பல நாட்களாக இங்கேயே இருப்பதையும், அவள் கணவர் வந்து பார்க்காமல் இருப்பதையும் எண்ணி, அவர் கவலைப் படுகிறார் என்று தெரிகிறது. அவருடைய கவலையை எப்படியாவது போக்க வேண்டும். நீங்கள் அல்லியிடம்...

(அல்லியும் சிவக்கொழுந்தும் வெளியே வருகிறார்கள். அறவாழி பேச்சை நிறுத்திக்கொள்கிறார். சிவக்கொழுந்தும் அறவாழியும் வெளியே சென்றபின்)

பரமேசு : (ஒன்றும் தெரியாதவள் போல் பாவனை செய்து அல்லியிடம்) அல்லி! உன் கணவர் இங்கேதானே இருக்கிறார்?

அல்லி : இல்லை பரமேசுவரி, அடக்கச் சடங்கு முடிந்தபின் அவர் இந்தப் பக்கம் வரவேயில்லை.

பரமேசு : பாவம்! அவரும் இப்போது உன்னோடு இருந்தால் உனக்கும் அப்பாவுக்கும் அதுவே ஒருவகை ஆறுதலாக இருக்கும்.

அல்லி : அதுதான் போகட்டும். நீ ஏன் வரவில்லை என்று அதிகாரத்தோடு கேட்டுவிட்டுப் போவதற்காக ஒரு முறை வரக் கூடாதா?

பரமேசு : நீயாவது அடையாற்றுக்கு ஒரு முறை போய் விட்டு வரக்கூடாதா?

அல்லி : அண்ணன் இறந்த நாள் முதல் நான் அடையாற்றுக்குப் போகவில்லை; போக முடியவில்லை. அப்பாவைத் தனியே திக்கற்ற நிலையில் வீட்டில் விட்டு விட்டுப் போவதற்கு எப்படித்தான் முடியும்?

பரமேசு : (பரிவுடன்) அல்லி! நீ நல்லபடி கணவருடன் வாழவேண்டும் என்பதுதான் அப்பாவுக்கு என்றும் உள்ள எண்ணம். நீ பல நாட்களாக வீட்டில் இருப்பதையும், கணவர் வந்து பார்க்காமல் இருப்பதையும் எண்ணி அவர் கவலைப்படுகிறார் போல் தெரிகிறது. உன்னைப் பற்றிய கவலை வேறு அவர் மனத்தில் புகக் கூடாது.

அல்லி : பரமேசுவரி! உன்னிடம் மறைத்துப் பயன் என்ன? பெற்ற தந்தையின் மனம், எப்படியாவது மகள் கணவரிடம் வாழவேண்டும் என்று விரும்புகிறது. ஆனால் எப்படி அவருடன் வாழ்வது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

பரமேசு : தொடர்ந்து பலநாளும் அப்பாவுடன் வீட்டில் தங்கியிருக்கத் தொடங்கிவிட்டால், 'ஏன்'மா உன் வீட்டுக்குப் போகவில்லையா?' என்று அப்பா உன்னைக் கேட்டால் நீ என்ன மறுமொழி சொல்வாய்?

அல்லி : 'நீங்கள் தனியாக இருக்கிறீர்கள். உங்களுக்கு ஆறுதலாக இன்னும் சில நாள் இருப்பேன்' என்று சொல்வேன்.

பரமேசு : அந்தப் பொய்யும் எத்தனை நாள் சொல்ல முடியும்? அல்லி! நான் சொல்வதைக் கேள். அண்ணனை இழந்த துயரம் ஒன்று போதாதா? உன்னால் வரும் கவலையும் வேண்டுமா? அப்பா இன்னும் பழையபடி மனம் தேறி எழுந்து உட்காரவில்லை. நீயே எண்ணிப்பார். அப்பாவின் கவலையை எப்படியாவது மாற்ற வேண்டும். அதற்காகவாவது நீ அடையாற்றுக்குப் போய்த்தான் ஆகவேண்டும். பிடிவாதம் செய்யாதே.

அல்லி : சரி, பரமேசுவரி.

## காட்சி : 20

**இடம் :** சுப்புரத்தினம் வீடு.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** அல்லி, குள்ளன், சுப்புரத்தினம், சியாமளா.

[அல்லி தன் பெட்டியில் சேலை முதலியவற்றை ஒழுங்கு படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறாள்.]

குள்ளன் : (திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே பேசுகிறான்.) இரண்டு மாதமாக வீட்டுவாடகை கொடுக்கவில்லையே என்று வீட்டுக்காரர் ஆள் அனுப்பிக் கேட்டார் அம்மா.

அல்லி : சமையல்காரிக்கும், உனக்கும் சம்பளம் பாக்கி இருக்கிறதா ?

குள்ளன்: ஆமாம் அம்மா. போன மாதச் சம்பளமே இன்னும் தரவில்லை. நேற்றுக் காலையில் அ. மு. வா. க. ஜவுளிக் கடைக்காரர் பணம் கேட்டு ஆள் அனுப்பியிருந்தார் அம்மா. எண்ணூறு ரூபாய்க்கு அய்யா துணிவாங்கி யிருக்கிறாராம். இது வரையில் பணம் கொஞ்சமும் தரவில்லையாம்.

அல்லி : எண்ணூறு ரூபாய்க்கா ? நான் எவ்வளவு எளிய வாழ்க்கை வாழ்ந்துவந்தேன் ! என்க்காக இவர் எடுத்துக் கொடுத்ததும் இரண்டு பட்டுப் புடவைகள். இரண்டும் சேர்த்து எண்பது ரூபாய் விலை. ஜவுளிக் கடன் எண்ணூறு ரூபாய் ஆனது எப்படியோ ?

குள்ளன் : அம்மா ! அய்யா வந்தாச்சு.

(அல்லியைக் கண்டதும் சுப்புரத்தினம் முதலில் திடுக்கிட்டு நின்று, பின் நாற்காலியில் வந்து உட்காருகிறார்)

அல்லி: (தானே வலியப் பேசுகிறாள்.) அண்ணனின் உடம்பை அடக்கம் செய்துவிட்டுத் திரும்பிய பிறகு அப்பா இது வரையில் யாரிடமும் பேசவில்லை. வருவார் போவார்

என்னென்னவோ சொல்லியும் அப்பா படுத்தது படுத்தபடியே கிடந்தார். நேற்று மாலையில்தான் சிறிது நேரம் வெளியே சென்று வந்தார்கள். (சிறிது கழித்து) அம்மா இருந்தால் எவ்வளவு கதறுவாளோ அவ்வளவும் அப்பாவே கதறிவிட்டார்! (சுப்பு பதில் பேசாது சிகரெட் பிடித்தபடியே இருக்கிறார்.)

அல்லி : பீரோ சாவி எங்கே இருக்குது?

[சுப்பு, சாவியை எடுத்து மேசையின் மீது வீசுகிறார். அல்லி எடுத்துக்கொண்டு உள்ளே செல்கிறாள். உடனே சுப்பு எழுந்து வெளியே செல்கிறார். அல்லி சிறிய நகைப் பெட்டியுடன் பரபரப்பாக உள்ளே வருகிறாள்.]

அல்லி : (குள்ளனிடம்) அவர் எங்கே?

குள்ளன் : எங்கோ எழுந்து போனார்.

அல்லி : என் பீரோவை அவர் எப்போதாவது திறந்து பார்த்தாரா?

குள் : இரண்டு மூன்று நாள் திறந்து பார்த்தார்.

அல்லி : ஏதாவது எடுத்தாரா?

குள் : அதை நான் பார்க்கவில்லை அம்மா. அவர் பீரோவைத் திறந்தவுடன், என்னைச் சிகரெட் வாங்கி வரும்படி அனுப்பிவிடுவார். திரும்பி வரும்போது கூடத்தில் உட்கார்ந்திருப்பார். இப்படியே இரண்டு மூன்று நாள் செய்தார் அம்மா.

அல்லி : என்ன என்னவோ செய்கிறவர் இதைப் பற்றிக் கேட்டாலும் கவலைப்படப் போவதில்லை.

குள் : என்னம்மா?

அல்லி : என் பொன் சங்கிலியையும் வைரத் தோட்டையும் காணவில்லை. என்னைப் பெற்ற தாயின் கழுத்திலும் காதிலும் இருந்த பழைய நகைகளை என்ன வறுமை வந்தாலும் அப்பா விற்கமாட்டாரே! ஒரு சொல் சொல்லாமல் எடுத்துக்கொண்டு போய்விட்டாரே.

(ஒய்யாரமாகச் சியாமளா வருகிறாள். வந்ததும் கைக் கண்ணாடியை எடுத்து உதட்டிற்குச் சாயம் பூசிக்கொள்கிறாள்.)

அல்லி : யாருங்க ?

சியாமளா : மிஸ்டர் சுப்பு, எஞ்சினியர்.

அல்லி : வருவார். இருங்கள். நீங்கள் யாருங்க ?

(அல்லியை உற்றுப்பார்த்துவிட்டுப் பேசாமல் நகருகிறாள்.)

அல்லி : உங்கள் பெயர் சொல்லிவிட்டுப் போனால் வந்ததும் சொல்வேன்.

சியா : இருக்கட்டும். (போகிறாள்.)

தூள் : அம்மா ! நாள்தோறும் வருவார் இந்த அம்மா. அய்யாவின் காரிலே போவார்.

(வந்தவள் தெருவாயிலில் கால் வைத்தபோது அவளுக்கு எதிரே சுப்பு வந்து நின்று சைகையில் பாதியும் மெல்லிய குரலில் பாதியுமாகப் பேசி அனுப்பிவிட்டுத் திருதிருவென்று விழித்தபடியே உள்ளே வருகிறார்.)

அல்லி : இப்படிப்பட்ட வாழ்க்கை நடத்துகிறவர்களுக்குக் குடும்பம் எதற்காக ?

சுப்பு : உனக்கு என்ன தெரிந்து கேட்கிறாய் ?

அல்லி : இன்னும் வேறென்ன தெரிய வேண்டும் ? அன்று சைதாப்பேட்டை வழியில் கார் ஓட்டும் வளையைக் கையில் பிடித்தபடி கண்ணும் மனமும் சுகுணாவின் வசமாய் இருந்த காட்சியைக் கண்டுதான் கேட்கிறேன். 'அன்புள்ள சுலோசனா! நீ என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டாய் ; என் மனம் ஒரு நாளும் அல்லியை நினைத்து இப்படி ஏக்கம் அடைந்ததே யில்லை ' என்று நீங்கள் எழுதிய அந்தக் கடிதத்தைக் கண்டுதான் கேட்கிறேன். இப்பொழுது என் கண் எதிரே சைகையில் பாதியும், மெல்லிய குரலில் பாதியுமாகப் பேசிவிட்டுத் திருடிவிட்டவர்போல் திருதிருவென்று விழித்தபடி வந்தீர்களே, அந்தக் காட்சியைக் கண்டுதான் கேட்கிறேன்.

சுப்பு : அல்லி ! நாவை அடக்கிப் பேசு. நீ வீட்டில் பூச்சி. நெருப்போடு விளையாடாதே. வீணாக அழிந்து போவாய்.

அல்லி : (மீண்டும் பரிவுடன்) போனதெல்லாம் போகட்டும். மன்னித்துவிடுங்கள். இப்பொழுதாவது சொல்லுங் கள். என் அன்னையின் அருமை நினைவோடு நான் வைத்திருந்த நகைகள்......

சுப்பு : எனக்குத் தெரியாது.

அல்லி : அவற்றை எடுத்து அணிந்துகொள்ளவும் அஞ்சி யிருந்தேன்.

சுப்பு : பக்தியோடு காத்துவந்தாய்.

அல்லி : இப்படித் தெரிந்திருந்தால்......

சுப்பு : அப்பாவின் பெட்டியிலேயே வைத்துவிட்டு வந் திருப்பாய் அல்லி! கடைசி முறையாகச் சொல்கிறேன். எம். பி. பி. எஸ். படித்ததே உனக்குத் தகாது. நீ இனிமேல் இந்த வேலையை விட்டுவிடத்தான் வேண்டும். பேசாமல் வீட்டோடு இரு.

அல்லி : என்ன ? நான் வீட்டை விட்டு வெளியே போவதே உங்களுக்குப் பிடிக்கவில்லையா? அப்படிப்போவதால் உங்கள் தவறான நடக்கை எனக்குத் தெரிந்துவிடும் என்ற எண்ணமா ?

சுப்பு : மூடு வாயை. அதிகமாகப் பேசாதே !

அல்லி : வேலையில் இருப்பதால் குடும்பத்திற்கு என்ன இடையூறு ? உங்களால் காரில் கொண்டுவந்து விட முடியவில்லை யென்றால் நீங்கள் வரவேண்டாம். நான் முதலிலேயே ஒரு டிரைவர் வைத்துக்கொள்ளலாம் என்றேன். அதையும் நீங்கள்தானே தடுத்தீர்கள்?

சுப்பு : வீண் பேச்சு வேண்டாம். சொன்னபடி கேட் பதாக இருந்தால் என் வீட்டில் இருக்கலாம். நீ அவுஸ் சர்ஜனாக வேலை செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. அதை விட்டுவிடத்தான் வேண்டும்.

அல்லி : எம். பி. பி. எஸ். படித்துவிட்டு என்றால் சும்மா இருக்க முடியாது. திருமணத்திற்கு முன்னமே இதை யெல்லாம் நீங்கள் ஒப்புக்கொண்டதுதானே ?

சுப்பு : நான்சென்ஸ். எதிர்த்தா பேசுகிறாய்? இந்த எண்ணம் இருக்குமானால் இனி ஒரு வினாடிகூட இந்த வீட்டில் இருக்க முடியாது. வந்த வழியே திரும்பிப் போ.

(அல்லி வெளியே துரத்தப்படுகிறாள்.)

## காட்சி : 21

**இடம் :** வீதி

**காலம் :** மாலை.

**மாந்தர் :** குள்ளன், நண்பன்.

[குள்ளனும் நண்பனும் எதிர் எதிராக வந்து கூடுகின்றனர்.]

குள் : அண்ணே ! உன்னைத்தான் பார்க்க வந்தேன்.

நண் : என்னப்பா செய்தி ?

குள் : இப்போது நான் அடையாற்றிலே இல்லையே, தெரியுமா உனக்கு ?

நண் : இப்போ எங்கப்பா இருக்கிறே ?

குள் : அமைந்தகரை ஆசிரியர் அறவாழி வீட்டிலே.

நண் : நல்ல இடம்தானா ?

குள் : தங்கமான இடம். அவர் தனி ஆள் தான். வேறு யாரும் இல்லை. சமையல் வேலையையும் செய்து வைத்து விட்டு வீட்டையும் பார்த்துக்கொள்கிறேன், அவ்வளவுதான்.

நண் : சரி, இப்போ எங்கே வந்தே ?

குள் : அந்த எஞ்சினியர் அய்யாவைப் பார்க்க வந்தேன். இரண்டு மாதச் சம்பளம், பழைய பாக்கி நிற்குது.

நண் : பழைய பாக்கி நிற்குதா ? ஏன் ஒரு சோபா போட்டு உட்கார வைக்கக்கூடாது ! அது சரி, அதுக்கு இங்கே எங்கே போகிறே ?

குள் : அந்த எஞ்சினியர் அய்யாவைத்தான் பார்க்கப் போகிறேன்.

நண் : என்னப்பா ? அவர் வீட்டுக்கு வரும் சமயம் பார்த்துக் கேட்காமல் இங்கே போயி......

துள் : என்ன அண்ணே! இங்கேபோயி...ன்னு இழுக்கிறே. அந்தக் கதை உனக்குத் தெரியாதா ?

நண் : என்னப்பா கதை ?

துள் : அந்த டாக்டர் அம்மாவையும் அடித்துத் துரத்தி விட்டு இங்கே தானே இருக்கிறுரு.

நண் : அப்படியா செய்தி ?

துள் : அண்ணே ! இந்தச் சியாமளா பெரிய பணக்காரி தானே ?

நண் : ஆமாம் தம்பி. அவள்கணவர் சைனுபசாரில் பெரிய பட்டுத் துணிக்கடை வைத்து வியாபாரம் செய்தவர். அவர் இருந்தபோது தியாகராய நகரிலே நான்கு பங்களாவுடன் நிறையப் பணமும் இருந்தது. திடீரென்று மாரடைப்பாலே இறந்துபோனுர். அப்படித் தான் வெளியிலே பேசிக்கொள்கிருர்கள். உடனே, அந்த அம்மா தியாகராய நகரை விட்டு நுங்கம்பாக் கத்திலே இந்தப் பங்களாவுக்கு வந்துவிட்டாள். கடையையும் இன்னெருத்தருக்கு எட்டுலட்சம் ரூபாய்க்கு விற்றுவிட்டாள். ஊம், கேள்வி கேட்பார் இல்லாமல் அலைகிருள்.

துள் : சீச்சீ, இந்தப் பிழைப்பைவிடத் தெருத் தெருவாகப் பிச்சை எடுத்து வாழலாம். மானம் ஈனம் ஒன்றும் இல்லையா ?

நண் : மானம் இருந்தால் மகராசர் ஆக முடியாது. இரக்கம் இருந்தால் இருப்பதும் போய்விடும். உண்மை இருந்தால் ஒரு காசுக்கும் பயன் இல்லை.

துள் : இவர்களுக்கெல்லாம் நல்ல சாவு இருக்காது.

நண் : நல்ல வாழ்வு இருந்தால் போதுமே. சாவு எப்படி இருந்தால் என்ன ? சரி, அந்த டாக்டர் அம்மாவைப் போய்ப் பார்த்தாயா ?

துள் : போய்ப் பார்த்தேன். தனியே வீட்டிலிருந்து தொழில் செய்வா'ங்க போலத் தெரியுது.

நண் : *அவர்கள்படிப்பு அவர்களைக் காப்பாற்றும்.*

துள் : *ஆனால், பாவம்! அந்தப் பெரியவரை நினைத்தால் பரிதாபமாக இருக்குது.*

நண் : *அவர்மனம் எவ்வளவு துன்பப்படும்! ஒரே மகனை யும் பறிகொடுத்துவிட்டு, மகளையும் இந்த நிலைமையில் பார்ப்பதென்றால்...?*

துள் : *அவர் புண்ணியத்திலேதான் எனக்கு இப்போ பார்க் கிற இடம் கிடைத்தது.*

நண் : *அப்படியா ?*

துள் : *இரண்டுமாதமாக வேலையில்லாமல் சாப்பாட்டுக்குத் திண்டாட்டமாக இருக்குதுன்னு சொன்னேன். அப்போ நம்ம ஆசிரியர்அய்யாவிடத்திலே சொல்லி இந்த வேலைக்கு ஏற்பாடு செய்தாரு.*

நண் : *தம்பி! உன்னிடத்திலே ஒன்று சொல்ல நினைத்தேன். இந்த இஞ்சினியர்அய்யாவைப் பற்றி அவர்களிடத் திலே போய் ஒன்றும் சொல்லாதே. அவங்க மனம் வேறே புண்படும்.*

துள் : *ஊம், நமக்கு ஏன் அந்தத் தொல்லை ? நேரமாச்சு. அந்த வீடு எது அண்ணே !*

நண் : *அதோ அந்தக் கார் நிற்குதே அந்தப் பெரிய வீடுதான்.*

துள் : *சரி, நான் வரட்டுமா ?*

நண் : *சரி.* (இருவரும் பிரிகிறார்கள்.)

## காட்சி : 22

**இடம் :** சிவக்கொழுந்து வீடு.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** அறவாழி, அல்லி, சிவக்கொழுந்து.

[அறவாழி வருகிறார். அல்லி வணங்குகிறாள். அவர் பதில் வணக்கம் செய்கிறார்.]

அறவாழி : அப்பா இருக்கிறாரா அம்மா ?

அல் : சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார். வந்துவிடுவார். உட்காருங்கள்.

அற : (உட்கார்ந்து) அம்மா !

அல் : என்ன அய்யா ?

அற : நீ ஏன்'மா உன் வீட்டுக்குப் போக'லை ?

அல் : இன்னும் இரண்டுவாரம் இங்கே இருந்துவிட்டுப் போகலாம் என்ற எண்ணம்தான்.

அற : அது சரி அல்ல அம்மா ! நான் சொல்கிறேன் கேள். இதனால் உங்களுக்கிடையே கசப்பு வளரக் கூடாது. உன் வீட்டுக்காரர் முன்கோபக்காரர். எனக்குத் தெரியும். எனக்கு உறவுங்கூட....

(அல்லி வியப்புடன் பார்க்கிறாள்.)

அற : ஆமாம் அம்மா ! என் மாமியார் உன் வீட்டுக்காரருக்கு அத்தை.

அல் : உங்கள் குழந்தைகளையும் பார்த்திருக்கிறேன். இப்போதுதான் நினைவுக்கு வந்தது.

அற : நீ கொஞ்சம் விழிப்பாக நடந்துகொள்ளவேண்டும் அம்மா. அவரை நான் கெட்டவர் என்று சொல்லவில்லை. ஆனால் உன் போக்கு வேறு ; அவர் போக்கு

வேறு என்று எண்ணுகிறேன். அதனால் கருத்து வேற்றுமைகள் வரலாம். அவற்றைப் பாராட்ட வேண்டாம் என்று சொல்லிவைக்கிறேன். எனக்கும் அவருக்கும் பேச்சும் பழக்கமும் இப்போது கிடையாது. என்மேல் அவருக்குப் பகையும் இருக்கலாம். ஆனால் எனக்கு ஒரு பகையான எண்ணமும் இல்லை. உள்ளபடி சொல்கிறேன். எவ்வளவோ பொல்லாதவர்களும் ஒருநொடியில் திருந்தி நல்லவர்களாக மாறிவிடுகிறார்கள். அப்படியிருக்கும்போது, கொஞ்சம் புதுப் போக்கான உன் கணவர் நாளைக்கே நம் நாட்டுக்கு ஒத்தபடி நல்ல வழிக்குத் திரும்பமுடியும்.

அல் : உயிர் இல்லாத யந்திரங்களை இயக்கவும் பழுது பார்க்கவும் கற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் தம் மனத்தை இயக்கி ஆளவும் தெரியாமல், கட்டுப்படுத்தவும் தெரியாமல் மனம் ஆட்டிவைக்கிறபடி ஆடுகிறார்.

அற : இதுபோல் கெட்ட எண்ணங்களை நீ எண்ணக் கூடாது அம்மா. அவரோடு இருக்க முடியாமல் நீ வந்துவிட்டதும் எனக்குத் தெரியும்.

அல் : அங்கிருந்துகொண்டு துன்பப்படுவதைவிட, இங்கே அப்பாவுக்குத் துணையாக இருந்தாவது காலத்தைக் கழிக்கலாம் என்று துணிந்து வந்துவிட்டேன்.

அற : அம்மா ! அப்பாவுக்கு இந்த நிலைமை முழுவதும் தெரியாது. தெரிந்தால் மிகவும் கவலைப்படுவார். மகனை இழந்து அவர் படும் துயரம் உனக்குத் தெரியாதா ? நீங்கள் இருவரும் அன்பாக நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஆசையால் சொல்கிறேன். (சிவக்கொழுந்து பின்னே வந்து இவர்கள் பேச்சைக் கவனிக்கிறார்.)

அல் : (கண்ணீர் விட்டு) கணவரை வெறுத்துவிட்டு வர வேண்டும் என்று நான் செல்லவில்லை. வாழ்வதற்கு வேண்டிய வகையில் மனம் மாறியிருக்காதா என்று

அறியும் ஆவலோடுதான் சென்றேன். நான் எவ்வளவோ பொறுமையோடு இருந்து, பேசாதவரோடு வலியப் பேசியும் பார்த்தேன். திரும்பிப்'போ என்று வாயாலும் சொல்லிவிட்டார். (அழுகிறாள்.)

சிவக் : அல்லி! (கதறுகிறார்.)

அல் : அப்பா! நான் சிறுபிள்ளைத் தன்மையோடு நடந்து கொண்டேனா? வாழ்க்கையைப் பற்றிய பொறுப்புணர்ச்சி என்னிடம் இல்லாமற் போய்விட்டதா?

சிவக் : நீயாவது நல்லபடி வாழ்வாய் என்று எண்ணினேன் அம்மா!

அல் : அப்பா! முதலிலிருந்தே வாழ வேண்டும் என்ற ஆசையோடு எவ்வளவோ விட்டுக்கொடுத்துப் பொறுமையோடு நடந்திருக்கிறேன் அப்பா.

சிவக் : எனக்கு இந்தக் குறையும் பாக்கியிருந்ததா?

அல் : அப்பா! நான் அடங்கி நடக்காமல் எதிர்த்துவந்து விட்டேன் என்று எண்ணுகிறீர்களா?

அற : அம்மா! நீ ஒன்றும் தவறு செய்யவில்லை. வருந்தாதே அம்மா. (சிவக்கொழுந்துவிடம்) அய்யா! உள்ளே வாருங்கள். எல்லாம் சொல்கிறேன்.

## காட்சி : 23

**இடம் :** பள்ளிக்கூடத்தில் ஓர் அறை.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** வேலைக்காரன், அறவாழி, பையன், தலைமை ஆசிரியர், விஞ்ஞான ஆசிரியர், சில மாணவர்கள்.

[வேலைக்காரன் ஒரு குவளை மோரைக் கொண்டுவந்து மேசைமேல் வைத்துவிட்டு அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே பதற்றத்துடன் ஒரு பொடியை மோரில் போடுகிறான். அறவாழியும் விஞ்ஞான ஆசிரியரும் வருகிறார்கள். வேலைக்காரன் அறவாழியிடம் சில்லறையைக் கொடுக்கிறான்.]

வேலைக் : (விஞ்ஞான ஆசிரியரிடம்) சார்! உங்களுக்கு ஏதாவது வேண்டுமா?

விஞ்ஞான ஆசிரியர்: வேண்டாம்'பா. தலைமை ஆசிரியர் அறையில் இருக்கிறாரா, வீட்டுக்குப்போய்விட்டாரா என்று பார்த்து வா.

(வேலைக்காரன் போகிறான்; அறவாழி மோரை எடுத்துக் குடிக்கப்போகிறார். ஒரு மாணவன் பதற்றத்துடன் ஓடி வருகிறான்.)

மாணவன் : அய்யா! அய்யா! கொஞ்சம் பொறுங்கள். கேட்டுவிட்டுப் பிறகு குடியுங்கள். (ஆசிரியரின் கையைப் பிடித்துக்கொள்கிறான். அவர் திகைப்புடன் பார்க்கிறார்.) கோபித்துக்கொள்ளக் கூடாது'ங்க. வேலையாள் தங்கவேலு இதில் ஏதோ கலந்துவைத்தான்.

அறவாழி : ஆ!...

வி. ஆ. : உனக்கு எப்படித் தெரியும்?

மாணவன் : நான் மேலே வகுப்புச் சன்னலில் இருந்தபடியே பார்த்தேனுங்க. இப்படியும் அப்படியும் திரும்பித் திரும்பிப்பார்த்தான் ; அதனால் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. வேண்டுமானால் வேறு டீ வாங்கி வருகிறேன். (அறவாழியிடம் கெஞ்சுவது போல் பார்க்கிறான்.)

அற : சரி, எங்கே தங்கவேலைக் கூப்பிடு.

வி. ஆ. : ஹெட்மாஸ்டர் அறைக்குப் போயிருப்பான். சீக்கிரம் கூட்டி வா. (அறவாழியிடம்) சரி சார். அந்த டீயை இப்படிக் கொடுங்க. எங்கள் விஞ்ஞான அறையில் உள்ள எலி உண்மையைச் சொல்லிவிடும். (டீயை எடுத்துக்கொண்டு உள்ளே செல்கிறார்.)

தலைமை ஆசிரியர் : (நுழைவு) ஏன் சார்! பையன் சொல்வது உண்மைதானா? தங்கவேலு வந்தானா? உடனே போலீசுக்குச் சொல்லி அனுப்பவேண்டும்.

அற : அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் வீண் தொல்லை ஏன்? அவனும் ஏழை, அவனுக்கும் எனக்கும் எப்போதும் பகையே கிடையாது. யாரோ தூண்டிச் செய்ததாக இருக்கவேண்டும். கொஞ்சம் பொறுத்து வேலையாளையே கண்டுபிடித்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

வி. ஆ. : (கையில் ஒரு செத்த எலியுடன் வருகிறார்.) சார்! நம் விஞ்ஞான அறையிலே உள்ள ஒரு எலியைப் பிடித்து அதன் வாயில் அந்த டீயைக் கொஞ்சம் புகச் செய்தேன். ஐந்து விநாடிகளில் எலி சுருண்டுவிட்டது.

தலை. ஆ : ஆ!... அட பாவி! என்ன வேலை செய்யத் துணிந்தான்.

(பையன்கள் எல்லோரும் வேலையாள் தங்கவேலுவைப் பிடித்துக்கொண்டு வருகின்றனர்.)

மாணவன் : விளையாடும் இடத்தில் சிமெண்டு மேடைக்குப் பின்புறம் ஒளிந்துகொண்டிருந்தான், சார்.

தலை. ஆ : (மாணவர்களைப் பார்த்து) சரி, நீங்கள் வகுப்பு களுக்குப் போகலாம். (வேலைக்காரனிடம்) டீயில் ஏதா வது போட்டாயா ?

வி. ஆ : (அதட்டலுடன்) டீயில் ஏதாவது விஷத்தைப் போட்டாயா ?

வேலையாள் : விஷமா ? அய்யோ ! அது விஷம் என்பது எனக்குத் தெரியாது. ஏதோ வசிய மருந்து என்று எண்ணினேன். (அறவாழி காலில் விழுந்து) தெரியாமல் செய்துவிட்டேன். கடன் தொல்லையைத் தீர்த்து விடலாம் என்று பண ஆசையால் அவர் சொன்னபடி செய்தேன். என்னை மன்னித்துவிடுங்கள், சார்.

அற : இது யாருடைய ஏற்பாடு ?

வேலைக் : அய்யா !......(தயங்குகிறான்.)

தலை. ஆசி : என்னடா பார்க்கிறாய் ? சொல்லு'டா ?

அற : சும்மா சொல்லப்பா. நான் ஒன்றும் செய்யப் போவதில்லை. போலீசுக்கும் தெரிவிக்கப்போவதில்லை.

(அறவாழியின் காதினுள் ஏதோ சொல்கிறான்.)

அற : நான் எதிர்பார்த்ததே சரி. நீ பயப்படாதே. (தலைமை ஆசிரியரிடம்) சார், இந்த ஒரு முறை இவனை மன்னித்துவிடுங்கள்.

தலை. ஆசி : இவ்வளவு பெரிய குற்றம் செய்தவனை இப்படி அனுப்பிவிடலாமா ?

அற: மன்னித்தால் போதும். வாழ்க்கையில் திருந்துவதற்கு வழியாகும்.

வி. ஆசி : நீங்கள் வெறுங் கோழை, சார். பிழைக்கமாட் டாத ஆள்.

அற : அப்பா ! இனிமேல் இப்படித் தவறு செய்யாதே !

வேலை : என்னையும் மன்னித்துவிட்டீர்களே அய்யா. இனி மேல் இப்படி நடக்கவேமாட்டேன்.

(அறவாழியின் காலில் விழுகிறான்.)

## காட்சி : 24

**இடம் :** சிவக்கொழுந்து வீடு.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** அல்லி, அறவாழி, சிவக்கொழுந்து.

[அல்லி, அறவாழி, சிவக்கொழுந்து மூவரும் இருக்கின்றனர்.)

**அல் :** அவ்வளவு பொல்லாதவனைப் போலீசில் ஒப்படைத்துக் கட்டாயம் தண்டிக்க வேண்டும்.

**அற :** பகையாளியின் கடிதத்தைக் கொண்டுவந்து சேர்த்ததற்காகத் தபால்காரனைத் தண்டிக்கலாமா ?

**சிவக் :** உலகத்தில் இப்படியே கெட்டவர்களை விட்டுவிட்டால் என்ன ஆவது ?

**அற :** இதுவரையில் தவறு செய்தவர்களைப் பிடித்துப் பிடித்து விடாமல் தண்டித்துவந்து என்ன பயன் கண்டோம் ? உடம்பில் உட்கார்ந்து கடித்த கொசுக்களாகப் பார்த்து வேட்டையாடுவதில் வல்லவர்களாக இருக்கிறோம். ஆனால் கொசுக்கள் வளர்வதற்கு இடம் தருகின்ற சாய்க்கடைகளையும் தேக்கங்களையும் ஒழித்துச் சீர்ப்படுத்துவதற்கு அதில் கால்பங்கு முயற்சியும் செய்வதில்லை. ஏழைகள் ஏன் செல்வர்களின் பொல்லாத சூழ்ச்சிகளுக்குக் கருவிகளாக நின்று குற்றம் செய்கிறார்கள் என்று எண்ணிப் பார்த்து அதைத் தடுப்பதில்லை.

**அல் :** அது சரி, அந்த விஷத்தை யார் கொடுத்தனுப்பினார்கள் ? எதற்காக ? அதைச் சொல்லவில்லையே !

**அற :** அதுதான்'மா, நீயும் அப்பாவும் தெரிந்துகொள்ள வேண்டியது ; இனிமேல் விழிப்பாக இருக்கவேண்டும். வேறு யாருமில்லை. சுப்புரத்தினம்தான்.

அல் : என்ன ? (அல்லியின் உள்ளத்தில் பெரிய அதிர்ச்சி.)

அற : இருநூறு ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி, இருபது ரூபாய் முன்னே கொடுத்தாராம். அதற்காக இந்த உதவி செய்தான் வேலைக்காரன்.

அல் : என்ன அப்படிப்பட்ட பொல்லாத பகை ?

அற : சாதாரண மக்களுக்குப் பகை ஏற்படுவதற்கு ஒரு காரணமும் வேண்டுவதில்லை. நாம் அவர்களைப் போல் இல்லாமல் வேறு வகையாக இருந்தாலே போதும். சுப்புரத்தினம் ஆடம்பரமான புதுப் போக்கு உள்ளவர் ; நானோ பழைய அறநெறியில் நம்பிக்கை வைத்து, எளிய வாழ்க்கை வாழ்கிறவன். இவ்வளவு போதாதா பகைக்குக் காரணம் ? அம்மா ! நான் இதை யெல்லாம் சொல்லியிருக்கக் கூடாது ; ஆனால் உனக்கும் அப்பாவுக்கும் தற்காப்பு உணர்ச்சி ஏற்படவேண்டும் என்றுதான் சொல்லவந்தேன். நான் இனிமேல் இங்கே வராமல் இருப்பதே உங்களுக்கும் நல்லது, எனக்கும் நல்லது.

(அல்லி எழுந்து உள்ளே செல்கிறாள். சிவக்கொழுந்து ஆழ்ந்த எண்ணத்தில் பேசாதிருக்கிறார்.)

அற : என்ன ? என்னுடைய முடிவு சரிதானே ?

சிவக் : அதுதான் எனக்குப் பொருத்தமாகத் தெரியவில்லை. உலகத்தில் நல்லவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். கிடைப்பதே அருமையாக இருக்கிறார்கள். அந்தச் சிலபேரும் அஞ்சியும் பிரிந்தும் வாழ்ந்தால், என்ன பயன் ?

அற : உண்மைதான். நல்லவர்கள் ஒதுங்கி வாழக்கூடாது. அஞ்சி வாழக்கூடாது. தலைநிமிர்ந்து திரியவேண்டும். காட்டில் சூரிய ஒளியில் மானும் முயலும் ஆடும்மாடும் அஞ்சாமல் திரியவேண்டும். பாம்பும் புலியும் கரடியும் நரியும் அடங்கி ஒடுங்கி இருண்ட குகைகளில் கிடக்க வேண்டும். அதுதான் இயற்கையின் நல்ல ஆட்சிமுறை.

மக்களின் வாழ்க்கையும் அப்படித்தான் இருக்கவேண்டும். ஆனால் சமூக அமைப்பு எப்படியோ சீர்கெட்டுத் தலைகீழாக இருக்கிறது. அஞ்சாமல் வாழவேண்டியவர்கள் — நல்லவர்கள் — அஞ்சி அடங்கி இருக்கிறார்கள். அஞ்சி அஞ்சிச் சாகவேண்டிய கெட்டவர்கள் தலைநிமிர்ந்து திரிகிறார்கள்.

சிவக் : இந்த நிலைமை மாறாதா? மாறாவிட்டால் அப்புறம் அறம், முறை, நீதி, உண்மை என்பவற்றைப் பேசிப் பயன் என்ன?

அற : மாறும்; மாறும் காலம் வரும். உழைப்பையும் தொண்டையும் மதிக்கும் காலம் வந்தால் நல்ல நிலைமை அமையும். எப்படியோ வந்துசேரும் பணத்தையும் பதவியையுமே மக்கள் மதித்து வழிபடுகிறார்கள். அதனால் அமைப்பும் தலைகீழாக மாறிவிட்டது.

சிவக் : அப்படியானால் இந்தக் காலத்துப் படிப்பு முதலிய எல்லாம் வீண்தானா?

அற : வீண் அல்ல. அவற்றின் நோக்கத்தில் தவறு உள்ளது. பணம் தரும் வகையை நோக்கித்தான் படிப்பையும் மதிக்கிறோம். பட்டம் பெறாத அறிவாளி என்றால் அவ்வளவாக மதிக்கிறோமா? இல்லை. ஏன்? அந்த அறிவு பணம் தராது என்பதாலேயே.

சிவக் : அப்படியும் யாரோ சிலர்தானே இருக்கிறார்கள்? நாமெல்லாம் மதிக்கிறோமா?

அற : நான் உண்மையைச் சொல்கிறேன். அதற்காகக் கோபம் கொள்ளக்கூடாது. நாமும் அப்படித்தான். பி. ஏ. எல். டி. படித்த ஆசிரியர் என்னுடன் இருப்பவர் ஒருவருக்காக நானே வந்து அந்தக் காலத்தில் உங்களிடத்தில் பெண் கேட்டிருந்தால் கொடுத்திருக்க மாட்டீர்கள். பி. இ. என்ற ஒரே பட்டம் பெற்ற பிள்ளைக்கு முன்பின் ஆராய்ந்து நல்லவரா என்று தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும், கொடுக்கத்

துணிந்துவிட்டார்கள். காரணம் என்ன? பி. இ. என்ற ஒரே பட்டம் நாளடைவில் நூற்றுக்கணக்காகப் பணம் கொண்டுவரும் என்று தெரிந்துதான். ஆகை யால் உலகம் பொல்லாதது என்று யார்மேலோ பழியைப் போட்டுவிட்டு ஒதுங்கக் கூடாது.

சிவக் : உண்மைதானுங்க, ஒத்துக்கொள்கிறேன், என்ன செய்வது? அரசாங்கத்திலேயே இந்தக் கொடுமை செய் கிறார்கள். ஆசிரியராக இருந்து உழைத்தால் ஐம்பது அறுபது சம்பளம். அதைவிடக் குறைந்த படிப்போடு இராணுவத்தில் போய்ச் சேர்ந்தால் இருநூறு முந் நூறு தருகிறார்கள். அரசு எவ்வழி, குடிகள் அவ்வழி. என்ன இருந்தாலும் நீங்கள் இங்கே வரக்கூடாது என்று செய்த முடிவு சரியல்ல. என்னுடன் நீங்கள் இல்லாவிட்டால் எனக்கு ஆறுதலே இருக்காது.

அற : காரணம் இல்லாமல் அல்லி ஏன் துன்பத்திற்கு ஆளாக வேண்டும்? (எழுந்து) எதையும் எண்ணிப் பார்க்கலாம். வேறு ஊருக்கே போய்த் தொழில் செய் தாலும் நல்லதே; வருகிறேன். (போகிறார்.)

## காட்சி : 25

**இடம் :** சிவக்கொழுந்து வீடு.

**காலம் :** இரவு.

**மாந்தர் :** சிவக்கொழுந்து, அல்லி, வந்தவன்

[சிவக்கொழுந்து சாய்வு நாற்காலியில் படுத்திருக்கிறார். அல்லி எதையோ எழுதிக்கொண் டிருக்கிறாள்.]

**சிவக் :** என்ன'ம்மா இப்படிக் கண்விழித்து எழுதிக்கொண் டிருக்கிறாய் ?

**அல் :** அப்பா, இதைப் பாருங்கள்.

**சிவக் :** (பார்த்துவிட்டு) இவற்றை ஏன் வேலை கெட்டு எழுதிவைத்தாய் ? தெரிந்த உண்மைகள்தானே !

**அல் :** 'எவர் குற்றம்' என்ற நூலைப் படித்தபோது என் மனம் நொந்தது.

**சிவக் :** ஒழுக்கம் கெட்ட போக்கிரிகள் படிக்கும் நூல்கள் அவை.

**அல் :** அத்தகைய நூல்களால் குடும்பங்களில் பரவும் மனநோயைத் தடுப்பதற்கு நான் மருந்து கண்டுபிடிக்க வேண்டும் என்று முயன்றேன். அதன் பலனாக உருவாகியது இந்தக் கட்டுரை. இதனை விரைவிலே அச்சிட வேண்டும்.

**சிவக் ;** நூலுக்கு என்ன பெயர் வைத்திருக்கிறாய் ?

**அல் :** 'எது குற்றம்.'

**சிவக் :** நல்ல பெயர். 'எவர் குற்றத்'திற்கு எதிர்ப்பாக 'எது குற்றமா?' சரி'மா, நாளை ஆசிரியரைப் பார்த்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். அம்மா ! கடை வியாபாரத்தை நிறுத்திவிடலாம் என்று நினைக்கிறேன்.

**அல் :** ஏன்'பா ?

சிவக் : இனிமேல் நான் சம்பாதித்து என்ன செய்யப் போகிறேன்? உன் அண்ணன் இருந்தான், அவன் படித்துத் தொழிலுக்குப் போகட்டும் என்று அது வரையில் வியாபாரம் செய்ய எண்ணியிருந்தேன். என் எண்ணமெல்லாம் மண் ஆனது, அம்மா! உன்னை உன் தொழிலே காப்பாற்றிவிடும்.

(தொண்டை அடைக்கிறது.)

அல் : ஆசிரியரிடம் சொன்னீர்களா, அப்பா?

சிவக் : சொன்னேன் அம்மா!

அல்: என்னைப் பற்றிக் கவலைவேண்டாம். நாளைக்கே வீட்டில் ஒரு போர்டு போட்டுவிட்டால் வீடே ஆஸ்பத்திரியாகிவிடும். வருவாய்க்கும் குறைவே இருக்காது. (சிவக்கொழுந்து முகத்தைத் துடைப்பது போல் கண்ணீரைத் துடைத்துக்கொள்கிறார்.) அவரும் இப்போது அடையாற்று வீட்டைக் காலிசெய்துவிட்டு நுங்கம்பாக்கத்தில் எவளோ ஒருத்தியுடன் இருக்கிறாராம்.

சிவக் : எப்படியாவது போகட்டும். நீ போய்ப் படுத்துக் கொள்ளம்மா.

(அல்லி உள்ளே சென்றதும் சிவக்கொழுந்து விளக்கை அணைத்துவிட்டு, உறங்கப் போகிறார். யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்கிறது.)

வந்தவன் (குரல்) : அம்மா! அம்மா!

சிவக் : (விளக்கை ஏற்றிக் கதவின் பக்கத்தில் சென்று) யார்?

வந்தவன் (குரல்): நான் தியாகராயநகரிலிருந்து வருகிறேன். டாக்டர் அம்மாவைத் தேடிக்கொண்டுவந்தேன்.

(சிவக்கொழுந்து கதவைத் திறக்கிறார். அல்லியும் வந்து நிற்கிறாள். வெளியே நின்றவன் உள்ளே வருகிறான்.)

சிவக் : என்ன வேலையாக?

வந்தவன் : எங்கள் சித்திக்குப் பொறுக்கமுடியாத மார் நோயும் வாந்தியுமாக இருக்கிறது. கையோடு அழைத்துவரும்படி அனுப்பினாள்.

சிவக் : உங்களுக்கு வீடு எப்படித் தெரியும் ?

வந்தவன் : தெருமட்டும் தெரியும். சித்தி சொல்லி அனுப்பினுள். வீட்டு எண் இங்கே வந்தபிறகே கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

சிவக் : தியாகராயநகரில் எத்தனை டாக்டர்கள் பக்கத்தில் இருக்கிருர்கள். அவர்களைக் கூப்பிடலாமே !

வந்தவன் : சித்தி ஜெனரல்ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருந்தபோது இந்த டாக்டர்அம்மாவிடத்தில் மருந்து சாப்பிட்டுக் குணமானதாம்.

சிவக் : சரி. இருந்தாலும் இந்த டாக்டர் அம்மா இரவில் எங்கும் போய் நோயாளிகளைப் பார்ப்பதில்லை. நாளைப் பகலில் வேண்டுமானுல் பார்க்கலாம்.

வந்தவன் : கார்கொண்டு வந்திருக்கிருேம் ; டாக்சி !

சிவக் : இருந்தாலும் வருவதற்கில்லை அப்பா. வருத்தப்பட வேண்டாம். வேறு டாக்டரைப் பாருங்கள்.

(வந்தவன் போகிருன். சிவக்கொழுந்து கதவை அடைத்து விட்டு வருகிருர்.)

அல் : அப்பா ! பொறுக்கமுடியாத துன்பம்படும்போது போய் உதவாவிட்டால் நோயாளிகளுக்கு டாக்டரிடத்தில் அன்பு வளருமா ? டாக்சி கொண்டுவந்திருப்பதால் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்'பா.

சிவக் : என்ன இருந்தாலும்,யாராக இருந்தாலும்,இரவில் போய்ப் பார்க்கும் வழக்கம்மட்டும் வைத்துக்கொள்ளாதே.

அல் : இந்தத் தொழிலுக்கு அப்படி இருக்கவே முடியாதப்பா,

சிவக் : (பரிவுடன்) அல்லி ! அந்தத் தெரு உனக்குப் பழக்கமா? அந்த ஆளின் சித்தி உனக்கு நினைவிருக்கிறதா? பகலில் பல முறை போய்ப் பழக்கப்பட்ட வீடாக இருந்தால், வேண்டுமானுல் ஆபத்துக்குப் போய் உதவலாம். இந்தக் காலத்தில் பசுவைப் போல் சாதுவான

ஆசிரியருக்கு நஞ்சு கொடுக்கும் கொடுமை இருக்கிறது. யார் கண்டார்கள்? வந்தவன் அவனுடைய ஆளாக இருக்கக்கூடாதா?

அல்: (நடுங்கி) அப்பா!

சிவக்: பதறாதே அம்மா! நாம் இனி இங்கிருந்து போய் விட்டாலும் நல்லது. இன்பவல்லியும் பெங்களூர்க்கு வரச் சொல்லி எழுதிக்கொண் டிருக்கிறாள். அங்கே போய்விடுவதே நல்லது. சரி, நீ போய்ப் படுத்துக் கொள்ளம்மா.

## காட்சி : 26

**இடம் :** வீதி.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** சிவக்கொழுந்து, அறவாழி.

[அறவாழியும், சிவக்கொழுந்தும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.]

**அற :** நீங்கள் நேற்றிரவு அல்லியைத் தடுத்து நிறுத்தியது நல்லது'தான்.

**சிவக் :** வாழ்க்கையில் முதலிலிருந்தே அவருடைய மனமறிந்து நடந்துவந்திருக்கிறாள், இருந்தாலும் என்ன கோபமோ ?

**அற :** இருந்தபோதிலும், அல்லி எளிதில் அடங்க முடியாதவள் என்ற எண்ணம் அவருடைய மனத்தில் இருந்து வந்திருக்கலாம். அவள் எம். பி. பி. எஸ். பட்டமும், டாக்டர் தொழிலும் அந்த எண்ணத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம். அதனால்தான் தொழில் செய்யக் கூடாதென்றும், ஆஸ்பத்திரிக்குப் போகக் கூடாதென்றும் வற்புறுத்திவந் திருக்கிறார்.

**சிவக் :** அது சரி, உங்களிடம் இப்படிப்பட்ட பகைக்குக் காரணம் மாறுபட்ட கொள்கை என்றீர்கள். அது தான் எனக்குப் பொருத்தமாகத் தெரியவில்லை.

**அற :** வேறு காரணமும் உண்டு. அவருடைய அத்தை பெண்ணையே நான் மணந்துகொண்டேன். அவளும் அவரும் ஒரேவயது உள்ளவர்கள் ; இளமைமுதல் பழகி வளர்ந்தவர்கள். திருமணம் ஆனபிறகு ஒருநாள் என் மனைவி தாய்வீட்டில் இருந்தபோது, யாரும் இல்லாததைக் கண்ட சுப்புரத்தினம், நேரே அவளிடம்

போய்த் தன் இச்சைக்கு இணங்குமாறு வற்புறுத்தி ஞராம். அவள் காரியுமிழ்ந்தும் உதைத்தும் அவரை வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிட்டாளாம். இதையும் அவளே என்னிடம் சொன்ஞள். பிறகு நெடுங்காலம் அவர் என் வீட்டிற்கு வரவில்லே. நான் இதைப் பற்றி யாரிடமும் ஒரு சொல்லும் சொன்ன தில்லே. ஆனுல் குற்றமுள்ள மனம் தானே பிரிந்து நின்று பகையை வளர்த்துக்கொண்டது.

**சிவக்** : அவர் இளமையிலிருந்தே இந்தப் போக்கில் நெறி யில்லாமல் வாழ்கிருரே ; இதை யாராவது திருமணத் திற்குமுன் சொல்லியிருக்கக் கூடாதா? புதிய உறவாக இருப்பதால் எவ்வளவு கெட்டவர்களாக இருந்தாலும் தெரியாமல் மறைக்கப்படுகிறதே.

**அற** : அந்தப் பழைய பகையே இப்பொழுது கொழுந்து விட்டு வளர்கிறது. அதற்குக் காரணம், நான் உங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவதுதான். இப்போது என்னேப் பற்றிக் கெட்ட எண்ணங்கள் வளரும்; நான் அல்லியிடம் பழகுவதாகக் கற்பனே செய்து தவருக எண்ணிக்கொண்டு சூழ்ச்சிகள் செய்வார். தீமையை ஒழித்துவிட வேண்டும் அல்லது அளவோடு நடந்து ஒதுங்கிவிட வேண்டும்.

**சிவக்**: உண்மைதான். நானும் கடையை இன்னெருத்தருக்கு முப்பதாயிரம் ரூபாய்க்குக் கொடுப்பதாக இன்று பேசி முடித்திருக்கிறேன். அந்தப் பணம் வந்ததும் எனக்கு இந்த ஊரில் வேலே இல்லே. பழகியவர்கள் பலரை விட்டுப் பிரிந்து போகவேண்டி யிருக்கிறதே என்றுதான் வருத்தமாக இருக்கிறது.

**அற** : நல்லவர்கள் எந்த நாட்டிலும் எந்தஊரிலும் ஒரு சிலர் இருப்பார்கள். அவர்களுடைய உறவு கிடைத் தால் விடக்கூடாது. அவர்கள் நாலேந்து பேர்கள் கிடைத்தாலும் போதும். அந்தச் சிலருடைய சூழலில்

வாழ்ந்து இறந்துபோவதுதான் மகிழ்ச்சி. ஆகையால் பலருடைய பழக்கத்தையும் பரந்த அனுபவத்தையும் நாடிக் காலத்தை வீணாக்க வேண்டாம்.

*(சிவக்கொழுந்து "எது குற்றம்" கையெழுத்துப் பிரதியை அறவாழியிடம் கொடுக்கிறார்.)*

அற : என்ன இது ?

சிவக் : அல்லி எழுதியிருக்கிறாள். அச்சிட வேண்டுமாம்.

அற : (பார்த்துவிட்டு) நன்றாக எழுதியிருக்கிறாள். பெரிய வேலை. பயன் உள்ள தொண்டு. நூலாசிரியர் பெயர் 'டாக்டர் அல்லி' என்று குறித்திருக்கிறாள். அப்படி அல்லாமல் "எழுதியது : ஒரு டாக்டர்" என்று பெயர் இல்லாமல் குறிப்பிட்டால் நல்லது. வாருங்கள். பறம்பு நிலையத்தாரைக் கண்டு ஆவன செய்வோம்.

சிவக் : அச்சிடும் பொறுப்பை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். வரவேண்டிய பணம் கைக்கு வந்ததும் நாங்கள் பெங்களூருக்குப் போய்விடுவோம்.

*(நிழல் காட்சி, பெங்களூர் ரயில் போகிறது.)*

## காட்சி : 27

**இடம் :** பெங்களூர் இன்பவல்லிவீடு.

**காலம் :** காலை.

**மாந்தர் :** இன்பவல்லி, அல்லி, சிவக்கொழுந்து.

[சில பெட்டிகளும், சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. அல்லியும் சிவக்கொழுந்தும் வீட்டைச் சுற்றிப் பார்த்து வருகிறார்கள்]

**இன்பவல்லி :** என்ன அல்லி ! வீடு பிடித்திருக்கிறதா ?

**அல்லி :** பிடித்திருக்கிறது இன்பவல்லி ! அப்பா ! இந்த வீட்டிலேயே ஆஸ்பத்திரியையும் வைத்துக்கொள்ளலாம்.

**சிவக் :** உன் விருப்பம் அம்மா.

**இன்ப :** அல்லி ! ஒரு விளம்பரப் பலகை தொங்கவிட்டால் போதும். இந்த அக்கிப்பேட்டை, பெங்களூரிலேயே மக்கள் கூட்டம் நிறைந்த பகுதி. சென்னையில் இருப்பது போல் இங்கே பெண் டாக்டர்கள் அவ்வளவாக இல்லை. உனக்கும் நல்ல திறமை இருக்கிறது. அதைக் கொண்டு நீ விரைவிலேயே பெயர் பெற்ற டாக்டராக விளங்கலாம்.

**சிவக் :** இன்பவல்லி ! நீயும் ஆசிரியர் வேலைக்கோ, நர்ஸ் வேலைக்கோ படித்தால், ஏதாவது வருவாய்க்கு வழிசெய்து கொள்ளலாமே !

**இன்ப :** அவர் இருந்தபோது, நான்கு பிள்ளைகளுக்குத் தனிப்பாடம் சொல்லிக்கொடுத்து வந்தார். அந்த நான்கு பிள்ளைகளோடு இன்னும் ஆறு பிள்ளைகளுக்குக் காலையிலும் மாலையிலும் பாடம் சொல்லிக்

கொடுக்கிறேன். அதுதான் இப்போது என் பிழைப்புக்கு வருவாய்.

அல்லி : காதில் தோடுமட்டும் இருந்தால்போதும். வேறொன்றும் இல்லாவிட்டாலும் கவலை இல்லை.

இன்ப : இருந்ததுதான். பட்டணத்திலிருந்து வந்ததும் கொஞ்சம் கடன் இருந்தது. அதைத் தீர்ப்பதற்காக விற்றுக் கொடுத்துவிட்டேன். இனிமேல் பொன்னுக்காகப் பணம் செலவழிக்கப் போவதில்லை. அது எந்த வகையிலும் வாழ்வைக் காப்பாற்றுவதில்லை. இருந்த தோடு சாதாரணக் கல் பதித்தது. அதை மாற்றிவிட்டு வைரத்தோடு வாங்கித் தர வேண்டும் என்று எவ்வளவோ பிடிவாதம் செய்து அவரை வருத்தினேன். (அழுகிறாள்.)

சிவக் : என்னம்மா செய்வது? வீணாக வருந்திப் பயன் என்ன ?

இன்ப : (கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) அவரை நினைத்தவுடன் கண்ணீரும் கம்பலையுமாகிறேன். எப்படியாவது நினைக்காமல் தப்பலாம் என்று பார்த்தால் முடியவில்லை. குழந்தைகள் இருந்தால் அவற்றிற்குத் தொண்டு செய்வதிலாவது மனம் ஈடுபடும். இப்போது தனிமையும் ஓய்வும் என்னைத் துயரத்திற்கு இரையாக்குகின்றன.

அல்லி : அப்பா! இன்பவல்லி நமக்கு உதவியாக இங்கேயே இருக்கட்டுமே?

சிவக் : (இன்பவல்லியிடம்) ஆமாம் அம்மா. செலவைப் பற்றிக் கவலை இல்லை.

அல்லி : தனிப்பாடத்தால் கிடைக்கும் வருவாய்க்கு ஏறக்குறைய மாதந்தோறும் கொடுத்துவிடுகிறோம்.

இன்ப : எனக்கு என்று ஒன்றும் கொடுக்கவேண்டாம். ஆனால் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்

பதைத்தான் என்னுல் விட முடியவில்லை. என் கவலைக்கு மருந்தாக இருப்பது அது ஒன்றுதான்.

அல்லி : இன்பவல்லி ! நீ கூறும் காரணத்தை நான் மறுக்க வில்லை. தனிப்பாடம் சொல்லிக்கொடுக்கும் நேரம் தவிர, மற்ற நேரமெல்லாமாவது எனக்கு உதவியாக இரு, போதும்.

இன்ப : உன் விருப்பம். சரி, வாங்கள் சாப்பிட்டுவிட்டுப் பேசலாம்.

(ஒளியில் அல்லது குரலில்)

**ஐந்து ஆண்டுகளுக்குப் பின்**

## காட்சி : 28

**இடம் :** சென்னை வீதி.

**காலம் :** மாலை.

**மாந்தர்** குள்ளன், நண்பன்.

[குள்ளனும் அவன் நண்பனும் எதிர் எதிரே கூடுகின்றனர்.]

நண் : என்னப்பா குள்ளா! ஏது, ஆளையே காணோம்?
குள் : ஏதோ இருக்கிறேன் அண்ணே.
நண் : உன்னைப் பார்ப்பதே அத்தி பூத்தாற் போலிருக்கே!
குள் : அய்யா ஊரிலே இருந்தால் வேலை சரியாக இருக்கும்.
நண் : இப்போ ஊரில் இல்லையா?
குள் : இன்றைக்குத்தான் பெங்களூருக்குப்போயிருக்கிறாரு.
நண் : பெங்களூரில் என்னப்பா?
குள் : அங்கே ஏதோ ஒரு கழகத்திலே தமிழ்த்திருநாள் நடத்துகிறார்களாம். அதிலே அய்யாவுக்குப் பேச்சு போட்டிருக்கிறாங்க. அந்தக் கழகத்துக்கும் போய் விட்டு, நம்ம பழைய டாக்டர் அம்மாவையும், அவங்க அப்பாவையும் பார்த்துவிட்டு வரலாம் என்று போயிருக்கிறாரு. உடல்நலம்கூடச் சரியாக இல்லை. இருந்தாலும் ஒப்புக்கொண்ட நிகழ்ச்சியை மறுக்கக் கூடாதே என்றுதான் போயிருக்கிறாரு.
நண் : அந்த டாக்டர் அம்மா எப்படி இருக்கிறார்கள்?
குள் : அவங்களுக்கு என்ன? பெங்களூரிலேயே பெயர் பெற்ற டாக்டராக இருக்கிறார்களாம். அங்கே போன ஐந்து வருசத்துக்குள்ளே, பெரிய பங்களா, கார் எல்லாம் வாங்கிவிட்டார்களாம். கணவரோடு வாழவில்லையே என்பதைத் தவிர வேறு ஒரு குறையும் இல்லை.

நண் : அந்த மனிதனை நினைத்தாலே வயிறு பற்றி எரிகிற தப்பா. கடந்த ஐந்து வருசமாக இந்தக் கழுதை வீட்டிலேதானே கிடக்கிருரு. அவளை நம்பி அருமை யான வேலையையும் தொலைத்துவிட்டாரே !

துள் : எத்தனை நாளைக்கு அண்ணே இந்த வாழ்வு ? அந்த மகராசி என்றைக்கு அடித்துத் துரத்தப்போகிருளோ அன்றைக்குத்தான் இந்த மனுசனுக்குப் புத்தி வரும்.

நண் : எப்படியாவது தொலைந்து போகட்டும். தம்பி ! முன்னமேயே உன்னிடத்தில் ஒன்று கேட்க நினைத் தேன். ஆனுல் நீ கோபித்துக்கொள்ளக் கூடாதே என்று அப்படியே போய்விடுவேன்.

துள் : இதுக்காக ஏன் கோபிக்கப்போகிறேன் ; இருந்தால் கொடுக்கிறேன்.

நண் : எதைத் தம்பி ?

துள் : பணம் தானே ?

நண் : சரியா'போச்சு. ஒரு சந்தேகம் தம்பி.

துள் : சந்தேகமா ? அது ஒரு வியாதியாச்சே, முதலில் அதைத் தீர்த்துக்கொள்ளுங்கள்.

நண் : உனக்கு வருத்தம் ஏற்படாதே ?

துள் : சும்மா சொல்லுங்க.

நண் : அந்த டாக்டர் அம்மா இங்கே இருந்தபோது, அவர் களையும் வாத்தியார் அய்யாவையும் பற்றி......

துள் : பலவிதமாகப் பேசிக்கொண்டார்களே என்று கேட்கிறீங்க. நீங்க என்ன நினைக்கிறீங்க ?

நண் : அது தவறு என்றுதான் நினைக்கிறேன்.

துள் : கடவுள் உங்களுக்கும் நல்ல புத்தியைக் கொடுத் திருக்கிருர். அண்ணே ! காந்தியார் சொல்லியிருக் கிருராம் : தன் மனைவியல்லாத வேருெரு பெண்ணைத் தொடும்பொழுது ஒருகாகிதத்தைத் தொடும் உணர்ச்சி தான் மனிதனுக்கு இருக்கவேண்டுமென்று ! அவர் சொல்படி நடக்கிறவர்கள் எங்கள் ஆசிரியர் அற

வாழியைப் போலே கோடிக்கு ஒருத்தர்தான் இருக்க முடியும். என்னவோ நான் செய்த புண்ணியம்தான் அவரிடத்தில் வேலைக்குப் போய்ச்சேர்ந்தேன்.

நண் : அப்போ என்ன பாவம் செய்து அந்த எஞ்சினிய ரிடத்தில் வேலை பார்த்தே ?

தூள் : துன்பப்படாமல் இன்பம் அடையமுடியுமா ? ஆமாம். எஞ்சினியர் எப்படியிருக்கிருரு ?

நண் : தினமும் காலையிலும் மாலையிலும் டாக்டர் வீட்டுக்கு நடையாக நடக்கிருரு.

தூள் : அந்த அம்மாவைப் படுத்தின பாட்டுக்கு இன்னும் என்னென்ன அனுபவிக்கப்போகிருரோ ? நேரமாச்சு அண்ணே ! நான் வரட்டுமா ?

நண் : சரி போய் வா. என்னடா அண்ணன் இப்படிப் பேசிவிட்டாரே என்று நினைக்காதே.

தூள் : நீங்க என்ன செய்வீங்க. உலகம் போகிற போக்கு அண்ணே ! (இருவரும் பிரிகிருர்கள்.)

## காட்சி : 29

**இடம் :** பெங்களூர் அல்லிவீடு.

**காலம் :** காலை.

**மாந்தர் :** அல்லி, இன்பவல்லி, அறவாழி, சிவக்கொழுந்து.

[சிவக்கொழுந்தும் அறவாழியும் வருகிறார்கள். அல்லி அறவாழியை வரவேற்கிறாள்]

அல் : வாருங்கள். வணக்கம்.

அற : நலம்தானே ?

அல் : ஆமாம், இன்று காலை ரயில்நிலையத்திலிருந்து நேராக இங்கேயே வருவீர்கள் என்று எதிர் பார்த்தோம்.

அற : நானும் இங்கே வருவதாகத்தான் எண்ணியிருந்தேன். ரயில் நிலையத்தில் வந்து அப்பாவும் அழைத்தார். ஆனால் கழகத்தார் விடவில்லை. மாலையில் பேச்சு முடிந்த பிறகுதான் வெளியே விட்டார்கள்.

(இன்பவல்லி வந்து ஆசிரியரை வணங்குகிறாள்.)

அல் : (அறிமுகப்படுத்துகிறாள்) இன்பவல்லி, என் தோழி.

அற : (இன்பவல்லியிடம்) இவர்கள் பெங்களூருக்கு வருவதற்கே நீதான் அம்மா காரணம். இல்லையானால் வேறு எங்காவது சென்றிருப்பார்கள்.

அல் : சென்ற வாரமே வருவதாக எழுதியிருந்தீர்களே ?

அற : உடல்நிலை சரியில்லை. ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சியை மறுக்கக்கூடாது என்பதற்காகத்தான் புறப்பட்டு வந்தேன்.

சிவக் : மிகவும் சோர்வாக இருக்கிறீர்களே !

அல் : வெந்நீர் போடச்சொல்கிறேன். குளித்துவிட்டுச் சாப்பிடுங்கள்.

அற : இல்லையம்மா, கொஞ்சம் காய்ச்சல் இருக்கும்போல் தெரிகிறது.

அல் : என்ன ? (அறவாழியின் கையைப் பிடித்துப்பார்த்து) நன்றாகக் கொதிக்கிறதே!

அற : சிறிதுஓய்வு எடுத்துக்கொண்டு நாளைக்காலை வண்டியில் திரும்பிவிடலாம் என்று நினைக்கிறேன்.

சிவ : காய்ச்சலோடு திரும்பவா ? கூடாது.

அல் : அங்கே சென்று தனியாக இருந்து நீங்கள் வருந்த வேண்டுமே. மேலும் விடுமுறைதானே. இன்பவல்லி! வேலைக்காரியைப் படுக்கை எடுத்துப்போடச்சொல்லு. அப்பா! அவர்களைக் கூட்டிக்கொண்டுபோங்கள். நான் போய் மருந்து எடுத்து வருகிறேன்.

## காட்சி : 30

**இடம் :** சியாமளா வீடு.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** சுப்புரத்தினம், சியாமளா, சுகுமாரன், வள்ளி.

[சுப்பு நோயால் வருந்திப் படுத்திருக்கிறான். சுகுமாரன் வந்து நின்று, சுப்புவைக் கவனிக்காதது போல் இருக்கிறான்.]

**சுகுமார் :** சியாமளா ! சியாமளா !

**சியா :** இதோ வந்துவிட்டேன். (வெளியே வருகிறாள்.)
(சுப்பு அவளைத் திகைப்புடன் பார்க்கிறான்.)

**சுகுமார் :** சினிமாவுக்கு நேரமாச்சு.

**சியா :** சரி, போவோம். வள்ளி! (வள்ளி வருகிறாள்.) வீட்டிலேயே இரு. வெளியே சுற்றப் போய்விடாதே. (இருவரும் புறப்படுகின்றனர்.)

**சுப்பு :** (தடுமாறி எழுந்து) சியாமளா !
(சியாமளா அலட்சியமாகத் திரும்பி சுப்புவைப் பார்க்கிறாள்.)

**சுப்பு :** எங்கே போகிறாய் ?

**சியா :** என்ன அது ?

**சுப்பு :** நீ எங்கே போகிறாய் என்று கேட்கிறேன்.

**சியா :** உன்னிடம் சொல்லிவிட்டுத்தான் போகவேண்டுமோ ?

**சுப்பு :** என்ன ? (கோபத்துடன் விழித்துப் பார்க்கிறான்.)

**சியா :** ஏன் விழிக்கிறாய் ? என்னைக் கேட்பதற்கு நீ யார் ? அதை முதலில் நினைத்துப்பார்.

**சுப்பு :** எனக்கு உரிமை இருப்பதால் கேட்கிறேன்.

**சியா :** ஓஓ ! கட்டின மனைவி என்ற எண்ணமோ ? அவளிடமே உன் உரிமை செல்லவில்லையே !

**சுப்பு :** வீண்பேச்சு வேண்டாம். பேசாமல் உள்ளே போ.

சியா : முடியாது.
சுப்பு : விபசாரி.
சியா : அதைத் தெரிந்துகொள்ள ஐந்து ஆண்டுகள் ஆச்சோ! அப்படியானால் ஆசிரியர் அறவாழியோடு இன்பமாகப் பொழுதுபோக்கும் அந்த அல்லி யார்?
சுப்பு : (கோபத்தோடு) சியாமளா!
சியா: கோடைவிடுமுறையில் கொஞ்சிக் குலாவப் போயிருக்கிறார் அந்த ஆசிரியர். அல்லி களங்கமற்றவள். நான் விபசாரி.
சுப்பு : மீண்டும் எச்சரிக்கை செய்கிறேன். அல்லியைப் பற்றி ஏதாவது வாய் திறந்தால் உன் எலும்பு நொறுங்கிவிடும்.
சியா : (ஏளனமாகச் சிரித்து) உடல் வலிமை குறைந்தாலும் பேச்சில் வலிமை இருக்கிறது மிஸ்டர் சுப்பு. (கோபத்துடன்) நீ இருக்கும் இடம் தெரியாமல் பேசாதே. கடைசிமுறையாகச் சொல்கிறேன். நீ இங்கு வா, இரு, பேசு, சாப்பிடு, போ. நம் நட்பு என்றும் அப்படியே இருக்கட்டும். ஆனால் இது மட்டும் என் தனிப்பட்ட விருப்பம். இதில் நீ தலையிடாதே.
சுகுமார் : அவனோடு என்ன பேச்சு. நீ வா சியாமளா.
(இருவரும் போகிறார்கள்.)
சுப்பு : (திகைத்து) 'அவனோடு என்ன பேச்சு. நீ வா சியாமளா.' சுகுமார்! நீ மட்டும் இவள்மனத்தில் நெடுங்காலம் வாழப்போகிறாயோ? 'உடல் வலிமை குறைந்தாலும் பேச்சில் வலிமை இருக்கிறது மிஸ்டர் சுப்பு.' என்நோய் தீரட்டும். என் உடம்பில் வலிமை இருக்கிறது என்று காட்டுகிறேன். (காலைச் சொறிந்து கொண்டே செல்கிறான்.)

## காட்சி : 31

**இடம் :** பெங்களூர் அல்லி வீடு.

**காலம் :** இரவு.

**மாந்தர் :** சிவக்கொழுந்து, அல்லி, அறவாழி, இன்பவல்லி.

[ஆசிரியர் நோயால் வருந்திப் படுத்திருக்கிறார் ; அல்லியும் இன்பவல்லியும் பக்கத்தில் நாற்காலியில் இருக்கிறார்கள் ; சிவக்கொழுந்து வெளியிலிருந்து வந்ததும் ஆசிரியர் பக்கத்தில் சென்று பார்க்கிறார்.]

சிவக் : ஆசிரியர் எப்படி இருக்கிறார் அம்மா ?

அல் : காய்ச்சல் அதிகமாகத்தான் இருக்கிறது.

சிவக் : ஐந்து ஆண்டுகளுக்குப் பின் சென்னையிலிருந்து வந்தவர் நாலைந்து நாள் தங்கி அளவளாவிப் பேசி விட்டுப் போவார் என்று எண்ணினேன். பாவம் ! இப்படி நோய் வந்து துன்புறுத்தும் என்று நினைக்கவில்லை.

அல் : அப்பா ! சாதாரணக் காய்ச்சல் என்று எண்ணி மருந்து கொடுத்தேன். ஆனால் அது டைபாய்டாக மாறிவிட்டது. கடுமையாக வளர்ந்துவிட்டது.

இன் : இந்த நிலைமையில் சென்னைக்குத் திரும்ப வேண்டும் என்கிறாரே.

அல் : சென்னைக்குச் சென்றால் தனியாக இருந்துதானே வருந்த வேண்டும் ?

சிவக் : குணமாகும்வரையில் நம் வீட்டிலேயே தங்கிச்செல்ல வேண்டினேன்'மா. ஒருவாறு இசைந்தார்.

அல் : இன்பவல்லி ! இந்த மருந்தைக் கொடுத்துவிட்டுப் பார்த்துக்கொள். அப்பாவுக்குச் சாப்பாடு எடுத்து வைத்துவிட்டு வருகிறேன். (சிவக்கொழுந்தும் அல்லியும்

உள்ளே போகிறார்கள் ; அறவாழி திணறிக்கொண்டும் ஊம் கூட்டிக்கொண்டும் கிடக்கிறார் ; இன்பவல்லி தொட்டுப் பார்க்கிறாள்.)

இன் : மருந்து தரட்டுமா ?

[அறவாழி கொடுக்கச் சொல்லிச் சைகை செய்கிறார். இன்பவல்லி அவரை எழுந்து உட்காரச் செய்து மருந்து கொடுக்கிறாள். மீண்டும் அவர் படுத்ததும் போர்வையைச் சீர்ப்படுத்திப் போர்த்துகிறாள். பக்கத்தில் இருக்கும் நாற்காலியில் உட்காருகிறாள். வேண்டாத எண்ணங்கள் உருவாகின்றன.]

தூரல் : கெட்டவர்களைக் கண்டால் தூசுக்கு நிகராக இகழ்கிறது என் மனம். ஆனால் நல்லவர்களைக் கண்டால் அவர்களுக்குத் தலை வணங்குகிறது ; அடிமையாய்த் தொண்டு செய்ய முற்படுகிறது. இதுதான் இப்போது நான் தடுமாறுவதற்கும், கலங்குவதற்கும் காரணம். மறுமணம் கூடாது என்னும் கொள்கை எனக்கு இல்லை. ஆனால் அன்பான கணவரின் நினைப்பு, மறுமணத்திற்கு இடம்தரப்போவதில்லை என்று உறுதியாக இருந்தேன். அவர்போல் நல்லவர்—அவரை விடவும் நல்லவர் – ஒருவர் கிடைத்தபோது இரண்டாம் முறையாக அவருக்கு வாழ்க்கைப்பட்டுத் தொண்டு செய்வதில் தவறு என்ன ?

இன் : அய்யோ இது என்ன தவறான எண்ணம் ! அல்லி என்னைப் போல் போராட்டத்திற்கு ஆளாகாமல் தூய நெஞ்சோடு ஆசிரியரிடம் பழகுகிறாளே ! அவளைப் போன்ற அதே வயது உள்ள பெண்ணாகிய நான் ஏன் ஆசிரியரோடு நட்புமுறையில் பழகக்கூடாது ? அல்லி! நான் ஒரு பைத்தியக்காரி ; உன்னைப் போல் அறிவுடையவளாக என்றும் ஒரே நிலையாய் நடந்து கொள்ள என்னால் முடியவில்லை. (குழப்பத்துடன் தலையில் கைவைத்தபடியே நாற்காலியில் சாய்கிறாள்.)

அல் : (நுழைவு) என்ன இன்பவல்லி !

இன் : ஒன்றுமில்லை.

அல் : ஏதோ மறைக்கிறாய்.

இன் : சிறிது தலைவலி ; வேறொன்றுமில்லை.

அல் : இரவு முழுவதும் நீயே கண்விழித்துக்கொண்டிருந்தால் உன் உடம்பு கெடும். சிறிது ஓய்வு எடுத்துக் கொள். ஆசிரியரும் உறங்குகிறார்.

(இன்பவல்லி உள்ளே செல்கிறாள்; பின் அல்லி அறவாழியின் பக்கத்தில் சென்று அவர் அமைதியாக உறங்குவதைப் பார்க்கிறாள். அவர்தலையைத் தொடப் போகிறாள்.)

குரல் : இவரை ஏன் துணையாகக் கொண்டு வாழக்கூடாது? இவரை ஏன்......

அல் : அய்யோ ! இது என்ன தவறான எண்ணம்! வந்தவர் இரண்டுநாள் தங்கியிருந்து போய்விட்டிருந்தால் எனக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காதே. நோயால் துடித்தபோது, இரக்கத்தோடு, தொண்டுமனத்தோடு தான் தொட்டேன். ஆனால் அந்த இரக்கத்தையும் தொண்டுமனத்தையுமே படிகளாகக் கொண்டு என் உடம்பு அவரை...அய்யோ! (தலையில் கைவைத்து வருந்துகிறாள்.) இன்பவல்லி என்னைப் போல் போராட்டத்திற்கு ஆளாகாமல் தூய நெஞ்சோடு ஆசிரியரிடம் பழகுகிறாளே! அவளைப் போன்ற அதே வயது உள்ள பெண்ணாகிய நான் ஏன் ஆசிரியரிடம் நட்புமுறையோடு பழகக்கூடாது ? ஏன் இந்தப் போராட்டம் ? இத்தனை ஆண்டுகளாய் இப்படிப்பட்ட போராட்டம் இல்லாமல் காலம் கழித்தேனே.

குரல் : மனம் எவ்வளவு உயர உயரப் பறந்தாலும் உடம்பு அதை மண்ணுக்கே இழுத்து வரும்.

அல் : உடம்புக்கும் உள்ளத்துக்கும் உள்ள போராட்டம் எல்லோருக்கும் உண்டா ?

தூல் : சான்ரோர்க்கும் உண்டு, கயவர்க்கும் உண்டு. கயவர் இயற்கைக்கு எளிதில் இரையாகிருர்கள். சான்ருேர் அறிவின் வன்மையால், அறத்தின் நம்பிக்கையால் இயற்கையோடு போராடுகிருர்கள், வெல்கிருர்கள்.

அல் : திருநாவுக்கரசர் திலகவதியார் போன்றவர்களும் இந்தப் போராட்டத்தைக் கண்டிருப்பார்களா ?

தூல் : ஆம். அவர்களைப் போன்ற பெரியவர்களும் இந்தப் போராட்டத்தைக் கண்டிருப்பார்கள் ; முதலில் போராடியிருப்பார்கள் ; நாளடைவில் உடம்பின் உணர்ச்சிகளை வென்றுவிட்டிருப்பார்கள்.

அல் : எனக்கு இதுதான் முதல்முறை. இதுவரையில் இந்தப் போராட்டத்திற்கு ஆளாகாமல் இருந்தேன். இப்போது போர் செய்யக் கற்றுக்கொண்டேன். எதிர்த்துப் போரிட்டு வெல்லும் ஆற்றலும் பெறு வேன். (உள்ளே செல்கிருள்.)

## காட்சி ; 32

**இடம் :** சியாமளா வீடு.

**காலம் :** மாலே.

**மாந்தர் :** சுகுமார், சியாமளா, வள்ளி, சுப்புரத்தினம்.

[சியாமளாவும் சுகுமாரனும் வெளியே புறப்படுகிருர்கள். வேலேக்காரியைக் கூப்பிட்டு வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுப் போகிருர்கள்.)

சியா : வள்ளி ! வீட்டைப் பார்த்துக்கொள். சினிமாவுக்குப் போகிருேம். வர நேரமாகும்.

வள்ளி : சரி'மா.

(இருவரும் சென்றபின், சுப்பு வருகிருன்.)

சுப்பு : வள்ளி ! சியாமளா எங்கே ?

வள்ளி : சினிமாவுக்குப் போயிருக்கிருர்கள்.

சுப்பு : தனியாகவா ?

வள்ளி : இல்லே. அந்தச் சுகுமார் அய்யாவோடு.

சுப்பு : (கோபம் வருகிறது, பல்லே நெறுநெறுவெனக் கடிக்கிருன். பின் தணித்துக்கொண்டு) எப்படியும் போகட்டும். அது சரி ; வள்ளி நான் சொன்னது—.

வள்ளி : ஆமாம். நீங்கள் என்ன வியாபாரம் செய்யப் போகிறீர்கள் ?

சுப்பு : ஏஜன்சி வியாபாரம் !

வள்ளி : ஏஜன்சி வியாபாரமா ?

சுப்பு : ஆமாம். பெரிய வியாபாரிகள் எப்படிப் பணம் சேர்க்கிருர்கள் என்ற வித்தையைக் கண்டுபிடித்துக் கொண்டேன். கமிஷன் ஏஜன்சி. இருந்த இடத்தில் கணக்கும், கையேடும், கைநிறைந்த முதலுமாக உட்கார்ந்தால் போதும் ; சரக்குக்ளேக் கண்ணுலும்

பார்க்கவேண்டாம் ; ஒரு நாளில் விற்ருல் ஐயாயிரம் வந்தாலும் வரும் ; ஐம்பதிஞுயிரம் வந்தாலும் வரும் ; கொஞ்சம் போஞுலும் போகும். எதுவும் கணக்கின் பேரில்தான். பேரேட்டில் சில சைபர்கள் வளரும், அல்லது குறையும். அவ்வளவுதான்.

வள்ளி : அதைத்தான் லாபம் நஷ்டம் என்று சொல்கிறீர்கள். ஆனல் நீங்கள் அப்படியே இருப்பீர்கள் அல்லவா ?

சுப்பு : அதுவும் உண்மைதான், எல்லாம் கணக்கின்பேரில் தான்.

வள்ளி : எஞ்சினியர் வேலையில் ஏராளமாகப் பணம் வருமே, அதையும் விட்டுவிட்டு......

சுப்பு : வருகிற சம்பளம் போதவில்லை. வியாபாரமாவது செய்தால் பணம் பஞ்சம் இல்லாமல் இருக்குமே என்றுதான். அதற்காகவே அந்த வேலைக்கு முழுக்குப் போட்டுவிட்டேன். வள்ளி ! இன்னெரு வழியும் சொல்கிறேன், கேட்கிருயா ?

வள்ளி : என்ன ?

சுப்பு : பம்பாய்க்கு வியாபார வேலையாய்ப் போகிறேன். நீயும் என்னோடு வந்தால் அங்கேயே தங்கிவிடலாம். (வள்ளி தயங்குகிருள்.) ஏன் தயங்குகிருய் ? சரி என்று சொல். (வற்புறுத்தவே சரி என்று சொல்கிருள்).

வள்ளி : சரிங்க.

சுப்பு : பலே, வள்ளி! வள்ளி! நீ இவ்வளவு காலமாக இந்த வீட்டில் வேலை பார்க்கிருயே, இந்தச் சியாமளாவுக்குக் கொஞ்சமாவது நன்றி இருக்கிறதா ? நன்றி கெட்டவள் ! (மெதுவாக) ஏதாவது நகை நட்டுக் கிடைத்தாலும் விடவேண்டாம். எடுத்துக்கொள்.

வள்ளி : என்ன ? திருடவா ?

சுப்பு : நாளைக்கு உனக்குப் பயன்படும். எனக்காக வேண்டியதில்லை.

வள்ளி : நகைகளை எல்லாம் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி யிருப்பார்களே, எப்படி எடுப்பது ?

சுப்பு : இரும்புப் பெட்டியிலா? கணக்கில்லாமல் இருக்குமே. அவ்வளவு நமக்கு எதற்கு? அலமாரியிலே, பெட்டியிலே ஏதாவது ஒன்றிரண்டு இருந்தால் எடுத்துக்கொள்.

வள்ளி : அலமாரியும் பூட்டியிருக்குதே !

சுப்பு : (ஒரு கொத்துச்சாவியைக் கொடுத்து) இதில் ஏதாவது உதவுமா என்று பார். சீக்கிரம்.

(வள்ளி ஒருபக்கமாகவும், சுப்பு மற்றொரு பக்கமாகவும் செல்கிறார்கள். சுப்பு ஒரு செக்புத்தகத்தோடு வருகிறான்.)

சுப்பு : (தனக்குள்) செக் புத்தகம்! இருபதினாயிரம் ரூபாய்க்குச் செக் எழுதி இந்தக் கையாலே (இடதுகை) சியாமளா என்று கையெழுத்திட்டுப் பாங்கியில் பணத்தைப் பெற்றுக்கொண்டு பம்பாய்க்குப் பறக்கப் போகிறேன். (வள்ளியைப் பார்த்து) வள்ளி ! சீக்கிரம் புறப்படு. (உள்ளே போகிறான்.)

## காட்சி : 33

**இடம் :** பெங்களூர், இன்பவல்லி வீடு.

**காலம் :** மாலை.

**மாந்தர்:** அல்லி, இன்பவல்லி, அறவாழி.

[அறவாழி ஒரு குவளைத் தண்ணீரைக் குடித்துவிட்டு அல்லியிடம் கொடுக்கிறார்.]

அறவாழி : உன் "எது குற்றம்" விற்பனை எப்படி இருக்கிறது அம்மா. எத்தனை பதிப்பு ஆகிறது ?

அல்லி : புத்தகம் ஏழு பதிப்புக்கள் ஆகிவிட்டன. மொத்தம் முப்பதினாயிரம் படிகள் விற்பனையாகியிருக்கின்றன.

அற : ஒவ்வொரு பதிப்பிலும் ஏதாவது சில புதிய குறிப்புகள் சேர்த்துவந்தால் நலமாக இருக்குமே.

அல்லி : சேர்த்துவருகிறேன். முன்பெல்லாம் புத்தகத்தைப் படித்துவிட்டு அடிக்கடி கடிதம் வரும், கடிதங்களைப் பறம்பு நிலையத்தார் எனக்கு அனுப்பிவைப்பார்கள். ஆனால் இப்பொழுது கடிதங்கள் வருவது குறைந்து விட்டது.

அற : புதுப் புத்தகத்திற்குத்தான் அப்படிக் கடிதங்கள் வரும். இப்போது உன் புத்தகம் நாடறிந்த புத்தகமாக, எல்லோரும் போற்றி உடன்பட்ட புத்தகமாக ஆகிவிட்டது. திருவள்ளுவரின் திருக்குறளுக்கு இப்போது யாராவது கடிதம் எழுதுவார்களா ?

அல்லி : உண்மைதான். இன்பவல்லி ! அந்தக் கடிதங்கள் போட்டிருக்கும் கடைசிக் கட்டு எடுத்துவா. அங்கங்கே நடக்கும் திருமணங்களில் இந்த நூலைப் பரிசாக வழங்குவதைப் பலமுறை என் கண்ணாலே பார்த்திருக்கிறேன். சிலர் அதை என்னிடமே காட்டி

'இது ஒரு நல்ல புத்தகம், டாக்டர். படித்திருக்கிறீர்களா ?' என்று கேட்பார்கள்.

(இன்பவல்லி கடிதங்கள் அடங்கிய கட்டினை அல்லியிடம் கொடுக்க அல்லி அறவாழியிடம் கொடுக்கிறாள்.)

அற : (கட்டினை வாங்கித் திருப்பியபடியே) சிலர் வாயாரப் புகழ்ந்தும், சிலர் திட்டியும் எழுதுவார்கள்.

அல்லி : ஆமாம்.

அற : (படிக்கிறார்.) "படுகுழியில் விழுவதற்கு இருந்தேன். எது குற்றம் என்னைக் காப்பாற்றியது. அதன் ஆசிரியரை நினைத்து நான் வணங்காமல் நாள் கழிவதில்லை." (அடுத்த கடிதம்) "அந்த ஒரு டாக்டர் ஆணு பெண்ணு என்பதையும் உங்கள் நூலில் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆணுக இருந்தால் அறிவு இல்லை என்றும், பெண்ணுக இருந்தால் தலைகொழுத்தவள் என்றும் டாக்டரே அல்ல என்றும் கருதுகிறேன்." நன்ருகத் திட்டி எழுதியுள்ளார். (கட்டினைக் கொடுத்துவிட்டு) அம்மா அல்லி ! நாளைச் சென்னைக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்.

அல்லி : இன்னும் விடுமுறை இருக்குமே !

அற : இன்னும் மூன்று வாரம் இருக்கிறது.

அல்லி : உடம்பு தேறும்வரையில் இங்கேயே இருந்து செல்லலாமே. நீங்கள் இருப்பதால் எங்களுக்கு ஒரு துன்பமும் இல்லையே.

தூரல் : இல்லை. அவர் போவதே சரி ; உன் போராட்டம் குறைவதற்கு அதுதான் வழி.

அற : இல்லை அம்மா, நான்போவதுதான் நல்லது. வந்தேன், பார்த்தேன், போகிறேன். இடையில் காய்ச்சல் வராமலிருந்தால், இவ்வளவு நாள் தங்கியிருக்கமாட்டேன். நான் சொல்வது பற்றி வருந்தக் கூடாது. இனிமேல் எனக்கு இங்கே என்ன வேலை ?

அல்லி : சரி ; அப்படியே செய்யுங்கள்.

(அல்லி ஆசிரியருக்கு எளிதாக விடை அளிப்பது கண்டு இன்பவல்லி வருத்தத்துடன் உள்ளே செல்கிறாள்.)

அற : அப்பா பூங்காவுக்குத்தானே சென்றிருக்கிறார்? (புறப்படுகிறார்.)

அல்லி : இன்பவல்லியைத் துணையாக வரச்சொல்லட்டுமா?

அற : வேண்டாம், இன்பவல்லிக்கு வேலையிருக்கும். நானே தனியே போய்வருவேன்; என் உடம்பு நன்றாகத் தேறி விட்டதே. (போகிறார்.)

அல்லி : (தனக்குள்) பாவம்! இன்பவல்லி தூய்மையான அன்புடன் பழகியவள். நண்பரின் பிரிவுபோல் வருந்துகிறாளோ, என்னவோ! எனக்குப் போராட்டம் இருப்பதால் அஞ்சி அனுப்பிவிடுகிறேன்.

## காட்சி : 34

**இடம் :** பம்பாய்த்தெரு.

**காலம் :** பகல்.

**மாந்தர் :** சுப்பு, சி.ஐ.டி. போலீஸ்.

[சுப்பு கையில் ஒருபெட்டியுடன் செல்கிறான். பின்னே வந்த சி.ஐ.டி. ஒரு புகைப்படத்தையும் சுப்புவையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்.]

சி.ஐ.டி. : சந்தேகம் இல்லை. அந்த ஆசாமிதான். நீங்கள் கொஞ்சம் தள்ளி நில்லுங்கள். நான் கூப்பிடும்போது வாங்கள். (போலீஸ் உள்ளே செல்கிறார்.)

சி.ஐ.டி. : (சுப்புவைப் பார்த்து) சார் !

சுப்பு : (திரும்பிவந்து) என்னையா ?

சி.ஐ.டி. : ஆமாம் உங்களைத்தான். (சுப்புவின் அருகில்சென்று) என்னைத் தெரியவில்லையா ? நான் சென்னை.

சுப்பு : உங்களைப் பார்த்ததே இல்லையே !

சி.ஐ.டி : நீங்கள் சென்னை தானே !

சுப்பு : ஆமாம் !

சி.ஐ.டி. : உங்கள் பெயர் சுப்புரத்தினம் தானே ?

சுப்பு : ஆமாம்.

சி.ஐ.டி. : நீங்கள் எஞ்சினியர்தானே ?

சுப்பு : ஆமாம். இதெல்லாம் உங்களுக்கு எப்படி அய்யா தெரியும் ?

சி.ஐ.டி. : நான் நுங்கம்பாக்கத்திலே குடியிருந்தேன். உங்களை அடிக்கடி அங்கே பார்த்திருக்கிறேன்.

சுப்பு : (திகைப்புடன்) இப்போது அங்கே இல்லையா ?

சி.ஐ.டி. : இல்லை. இங்கே பம்பாய்க்கு வந்து மூன்றுமாதம் ஆகி விட்டது. ஆமாம், நீங்கள் என்ன வேலையாகவந்தீர்கள்?

சுப்பு : வியாபார வேலையாக வந்தேன்.

சி.ஐ.டி. : என்ன வியாபாரமோ ?

சுப்பு : கமிஷன் ஏஜன்சி.

சி.ஐ.டி. : இங்கே எங்கே சார் தங்கியிருக்கிறீர்கள் ?

சுப்பு : (அவனுடைய பேச்சில் சந்தேகம் கொண்டவராய்) நிலையாக ஒரு இடமும் இல்லை. எங்காவது ஓட்டல்களில் தங்குவேன்.

சி.ஐ.டி. : வேண்டுமானால் என்னோடு தங்கலாம். நான் தனியாகத்தான் சார் இருக்கிறேன்.

சுப்பு : மிக்க நன்றி சார். உங்களுக்குத்துன்பம்வேண்டாம். நான் வருகிறேன். வணக்கம். (சுப்பு மெதுவாக நழுவப் பார்க்கிறான்.)

சி.ஐ.டி. : சார் ! எங்கே போகப்போகிறீர்கள் !

சுப்பு : (திரும்பியபடியே) ஏன் சார் ?

சி. ஐ. டி. : ஒன்றுமில்லை. பம்பாயிலே திருட்டுப் பயம் அதிகம். கையிலே பணம் நிறைய வைத்திருக்கிறீர்கள். கொஞ்சம் பாதுகாப்பான இடத்தில் இருந்தால் நல்லது அல்லவா ?

சுப்பு : நீ என்ன, கொள்ளையடிக்க வந்தாயா ?

சி. ஐ. டி. : இல்லை. கொள்ளையடிக்கப்பட்டதைப் பிடிக்க வந்தேன். (கை தட்டுகிறார். போலீஸ் வருகிறார்.)

சி. ஐ. டி. : நான் சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர். நீங்கள் இப்போது கைது.

போலீஸ் : (அரஸ்ட் வாரண்டைச் சுப்புவின் கையில் கொடுத்து) வாரண்டில் கையெழுத்துப்போடுங்கள் சார். (சுப்பு கைநடுக்கத்துடன் வாங்கிப் பார்க்கிறார்.)

சுப்பு : சியாமளா !

போலீஸ் : முதலில் கையெழுத்துப் போடுங்கள் சார். (சுப்பு பேனாவுக்காகச் சட்டைப் பையைத் தடவுகிறார்.) இந்தாங்க சார் பேனா !

(சுப்பு கையெழுத்துப்போட்டு வாரண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டு கையெழுத்திட்டதைப் போலீஸிடம் கொடுக்கிறார். போலீஸ்காரருடைய பேனாவைத் தன் சட்டைப் பையில் செருகுகிறார்.)

பேனாவை இப்படிக் கொடுங்கள் சார்.

சுப்பு : பார்த்தீர்களா சார்? மறந்துபோனேன். மன்னிக்க'ணும்.

போலீஸ் : ஏன் சார் மறக்கமாட்டீர்கள்! கட்டின பெண்ணை மறந்துவிட்டு அலைகிறவர்கள் இந்தப் 'பென்னை' மறப்பதில் ஆச்சரியம் இல்லை.

சி. ஐ. டி : சரி, புறப்படுங்கள்.

## காட்சி : 35

**இடம் :** சியாமளா வீடு.

**காலம் :** காலை.

**மாந்தர் :** சியாமளா, பரமேசுவரி, சுகுமார்.

[சியாமளா அடிவயிற்றைப் பிடித்தபடியேசோர்வுடன் சாய்வு நாற்காலியில் கிடக்கிறாள். பரமேசுவரி நுழைகிறாள்.]

**சியா :** வாங்கள் டாக்டர்.

**பா :** எப்படி இருக்கிறது, அம்மா !

**சியா :** அடிவயிற்றில் காந்தலும் எரிச்சலும் அதிகமாகத் தான் இருக்கிறது.

**பா :** சரி உள்ளே வாங்கள். பார்க்கணும்.
(இருவரும் உள்ளே சென்று வருகிறார்கள்.)

**சியா :** உயர்ந்த மருந்தாக வாங்கி ஊசி போடுங்கள் டாக்டர். செலவைப் பற்றிக் கவலை இல்லை டாக்டர்.

**பா :** நான் எவ்வளவுதான் மருந்து கொடுத்தாலும் நீங் களும் கொஞ்சம் பத்தியமான முறையில் நடந்து கொண்டால்தான் நல்லது.

**சியா :** அது இனிமேல் என்னால் முடியாது, டாக்டர். உண்மையாய்ச் சொல்கிறேன். அதையும் கவனித்து அதற்காகவும் மருந்து கொடுங்கள்.

**சுகு :** (நுழைவு) ஆமாம் டாக்டர். அதற்காகவும் மருந்து கொடுங்கள்.

**பா :** இப்போது உங்களுக்கு வீட்டுக்கவலையும் இருப் பதாகத் தெரிகிறது.

**சியா :** என்ன செய்வது'மா ? வீட்டில் அடிக்கடி திருட்டு வேறு நடக்கிறது. சமையல்காரி சில நகைகளைத் திருடிக்கொண்டு போய்விட்டாள். தெரிந்தவன்

ஒருவன் என் செக் புத்தகத்தைத் திருடி என் கையெழுத்திட்டு இருபதினுயிரம் ரூபாய் பாங்கியில் வாங்கிக்கொண்டு ஓடிவிட்டான்.

சுத : உங்கள் கையெழுத்து அவ்வளவு மலிவாகப் போச்சு!

சியா : நல்ல காலமாக அவன் பிடிபட்டான். ரூபாயும் கைக்கு வந்தது.

சுத : ஐயாயிரம் செலவழித்துவிட்டான். அதைப் பற்றிக் கவலை இல்லை.

பா : அவனைச் சும்மா விட்டுவிட்டீர்களா ?

சியா : இல்லை. மூன்று மாதம் தண்டித்துவிட்டார்கள்.

சுத : தான் செய்த தவற்றை எல்லாம் உணர்ந்து கோர்ட்டில் கண்ணீர் விட்டுக் கதறிவிட்டான். அதனுல் தான் இவ்வளவு குறைந்த தண்டனை.

பா : அந்தச் சமையல்காரி என்ன ஆனுள் ?

சியா : அவளைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை.

பா : சரி, நான் வருகிறேன். ஆள் அனுப்புங்கள். மருந்து கொடுத்து அனுப்புவேன். (விடைபெற்றுச் செல்கிருள்.)

## காட்சி : 36

**இடம் :** பெங்களூர் அல்லி வீடு.

**காலம் :** பகல்.

**மாந்தர் :** அல்லி, வள்ளி, சிவக்கொழுந்து.

[வள்ளி வீட்டினுள் வந்திருக்கிருள். அல்லி வெளியிலிருந்து வருகிருள். வள்ளி எழுந்து வணங்குகிருள்.]

**அல் :** யார் நீ ?

**வள்ளி :** அம்மா ! நான் திக்கற்றவள். என் அடிவயிற்றில் எந்த நேரமும் தீராத வலியும் எரிச்சலும் இருந்து கொண்டு என்னைப் பிடுங்கித் தின்கின்றன ; கையில் காசு ஒன்றும் இல்லே. சும்மா மருந்து கொடுத்து நோயைத் தீர்த்துவிட்டால் புண்ணியம். உங்கள் புண்ணியத்தால் எங்காவது வேலே செய்து பிழைத்துக் கொள்வேன்.

**அல் :** மருந்து கொடுப்பேன். அதைப் பற்றிக் கவலே வேண்டாம். ஆனல் இந்த நோய்க்குப் பெரிய ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருந்து எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து மருந்து சாப்பிட்டால் நல்லது.

**வள்ளி :** சர்க்கார் ஆஸ்பத்திரி, மிஷன் ஆஸ்பத்திரி இரண்டு இருப்பதாகச் சொன்னர்கள். எல்லாம் பெயருக்குத் தரும ஆஸ்பத்திரி என்றுதான் சொல்கிருர்கள். இருந்தாலும் கையில் காசு இல்லாதவர்களுக்கு யாரும் தக்கபடி மருந்து கொடுப்பதில்லேயே அம்மா.

**அல் :** உள்ளே வா. பார்க்கலாம். (உள்ளே சென்று திரும்புகின்றனர்.) இந்த நோய் எவ்வளவு காலமாக இருக்கிறது ?

**வள்ளி :** இப்போது மூன்று நான்கு வாரமாக.

அல் : இது வயிற்று வலி அல்ல, எரிச்சல் அல்ல. கெட்ட நோய். தப்பான நடக்கைதான் காரணம். (வள்ளி பேசாமல் நிற்கிருள்.) உன் கணவன் எங்கே ?

வள்ளி : அவன் என்னை விட்டு வேருெருத்தியுடன் வாழ்கிருன்.

அல் : (குரல் தணிகிறது.) எவ்வளவு காலமாக ?

வள்ளி : நான்கு ஆண்டுகளாக.

அல் : இந்த நோய் அப்போதே ஏற்பட்டதா ?

வள்ளி : இல்லை'மா. இப்போதுதான்.

அல் : (கோபத்துடன்) அதன் பிறகு நீ ஏன் கெட்ட வழியில் போனுய் ?

வள்ளி : நான் என்ன செய்வேன் அம்மா ! ஒரு வீட்டில் வேலைக்காரியாக இருந்து பிழைத்துவந்தேன். அந்த வீட்டுக்கு அயோக்கியன் மோசக்காரன் ஒருவன் வந்து சேர்ந்தான். அவனை நம்பி—.

அல் : (ஏளனமாகச் சிரித்து) ஏமாந்துவிட்டாய். அப்படித் தானே ? யார் அந்த அயோக்கியன் ?

வள்ளி : (தயக்கத்துடன்) அந்த வீட்டுக்கார அம்மாவுக்குப் பழக்கமானவன்.

அல் : என்ன ! அவள் நல்லவள்தானு ?

வள்ளி : அய்யோ ! அதை ஏன்'மா கேட்கிறீர்கள் ? கணவர் இருந்தபோதே அவர்க்குத் துரோகம் செய்து வாழ்க்கை நடத்திளுள். அவர் இறந்த பிறகு கேட்கவேண்டுமா ?

அல்: அப்படிப்பட்ட இடத்தில் நீ ஏன் போய்ச் சேர்ந்தாய்?

வள்ளி : எல்லாரும் அதைத்தான் கேட்கிருர்கள். எனக்கு அல்லவா பிழைப்பின் தொல்லை தெரியும் ? கடைசியில் அங்கேயும் இருக்க முடியாமல் போய்விட்டது.

அல் : ஏன் ?

வள்ளி : ஏன் என்ருல் என்ன சொல்வேன் அம்மா ? இப்படிப்பட்ட இடத்தில் எத்தனை நாள் வாழ்வது என்ற வெறுப்பு வந்தது. அப்போது முன் சொன்ன மோசக்

காரன் வீட்டுக்காரம்மாவிடத்தில் முதல் ஆளாக இருந்த காலம் மாறி இரண்டாவது மூன்ருவது ஆளாக மாறிவிட்டான். இந்த நிலைமையிலும் அவன் அங்கே சும்மா வந்து போய்க்கொண்டிருந்தான். ஒரு நாள் அவள் இல்லாத நேரத்தில் அந்த மோசக்காரப் பாவி என்னிடம் வந்து, தான் பம்பாய்க்கு வியாபார வேலையாகப் போவதாகவும் தன்னுடன் வந்தால் அங்கே தங்கிவிடுவதாகவும் சொல்லி ஆசை காட்டினுன். ஏதாவது நகை நட்டு வீட்டில் கிடைத்தாலும் விட வேண்டாம், எடுத்துக்கொள், நாளைக்கு உனக்குப் பயன்படும் என்று அரிச்சந்திரன் போல் பேசினுன். நம்பி ஏமாந்தேன்.

அல் : பம்பாய்க்குப் போனீர்களா ?

வள்ளி : போயிருந்தோம். அங்கே இருந்தது முதல்தான் இந்த நோய் என்னைப் பிடித்தது.

அல் : அவனை நீ ஏன் விட்டுவிட்டாய் ?

வள்ளி : நாஞ விட்டுவிட்டேன் ? நாங்கள் இருந்த அறைக்குப் பக்கத்தில் யாரோ ஒரு சேட் மனைவியோடு வந்து தங்கியிருந்தான். அவர்களோடு அவனுக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவர்களை ரயிலில் விட்டுவிட்டு வருவதாகச் சொல்லிப் புறப்பட்டவன் திரும்பி வரவே இல்லை. ஓட்டலில் உணவு உண்பதற்கும் வாடகை கொடுப்பதற்கும் கையில் காசு இல்லாமல் எத்தனை நாள் இருப்பேன் ? பெட்டியைத் திறந்து, கொண்டுவந்த நகைகளைத் தேடினேன். என் வயிறு பகீரென்றது. அந்த மோசக்காரப் பாவி நகைகளையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். (கலங்குகிருள்.)

அல் : எவ்வளவு நகைகள் இருக்கும் ?

வள்ளி : ஒரு சங்கிலியும், வைரத்தோடும் அம்மா. சென்னைக்குச் சென்ருல் போலீஸில் அகப்பட்டுக் கொள்வேன் என்று இங்கே வந்துவிட்டேன்.

அல் : என்ன ! நீ சென்னையா ?

வள்ளி : ஆமாம் அம்மா.

அல் : உன் வீட்டுக்கார அம்மா இருப்பது ?

வள்ளி : பட்டணத்தில் நுங்கம்பாக்கத்தில்.

அல் : நுங்கம்பாக்கத்திலா ? எந்தத் தெருவில் ?

வள்ளி : டர்லிங் ரோட்டில்.

அல் : அவள் பெயர் ?

வள்ளி : சியாமளா !

அல் : சியாமளா !

வள்ளி : உங்களுக்குத் தெரியும் போலிருக்குதே !

அல் : தெரியாது. எங்கோ கேள்விப்பட்டிருக்கிறேன். உன்னை மோசம் செய்த அவன் பெரிய பணக்காரனா !

வள்ளி : அப்படி ஒன்றும் பணக்காரன் அல்ல. இருந்தால், என்னைத் திருடச் சொல்லி, அதைத் தானே எடுத்துக் கொண்டு ஓடிப்போவானா ?

அல் : என்ன வயது இருக்கும் ? எப்படி இருப்பான் ?

வள்ளி : வயசு முப்பது இருக்கலாம். ஆள் ஒல்லியாக, அழகாகத்தான் இருந்தான். எந்நேரமும் சிகரெட்டை ஊதித்தள்ளி உடம்பைச் சொத்தை ஆக்கிக் கொண்டவன். அவனை நினைத்தாலே என் வயிறு பற்றி எரிகிறது.

அல் : என்ன வியாபாரம் ?

வள்ளி : புதிதாக வியாபாரம் செய்வதாகச் சொல்லி, என்னை ஏமாற்றினான். பட்டணத்தில் எஞ்சினியர் வேலையில் இருந்தானாம்.

அல் : ஆ....

வள்ளி : என்ன அம்மா ! உங்களுக்குத் தெரியுமா ?

அல் : அவர் எனக்குத் தெரியாது என் நெஞ்சில் என்னவோ முள்ளால் குத்தியதுபோல் திடீரென்று நொந்தது. கொஞ்சம் இரு. இதோ வந்துவிட்டேன்.

(அல்லி உள்ளே செல்கிறாள். வேலைக்காரி கண்களைத் துடைத்தபடியே நிற்கிறாள். அல்லி திரும்பி வந்து ஒரு மருந்தைக் கொடுக்கிறாள்.)

அல் : இந்தா அம்மா, இந்த மருந்தை வாயில் போட்டுக் கொள். (ஒரு சீட்டை எழுதிக்கொடுத்து) இந்தச் சீட்டைப் பெண்கள் ஆஸ்பத்திரியில் டாக்டர் மல்லியம்மா என்று ஒருவர் இருக்கிறார், அவர்களிடம் கொண்டு போய்க் கொடு. (ரூபாய் ஐந்து கொடுத்து) இந்த ஐந்து ரூபாயைச் செலவுக்கு வைத்துக்கொள். சரி, நீ போய்வா.

வள்ளி : வணக்கம் அம்மா. (வணங்கிச் சென்றபின் அல்லி எதையோ எண்ணிக் கலங்குகிறாள்.)

தூரல் : பம்பாய்க்கு அவர் சென்றது உண்மையா? உண்மையானால் அப்புறம் என்ன ஆனார்? சென்னையில் யாருக்காவது எழுதினால் தெரிந்துகொள்ளலாம்; அல்லது நானே நேரில் சென்று—.

அல் : தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறேன்? அய்யோ! பெங்களூருக்கு வந்தும் பழைய குறையே கண்முன் வந்து நிற்கவேண்டுமா? (கலங்கிய கண்களோடு மேசையின்மீது சாய்கிறாள்.)

சிவக் : (நுழைவு) என்ன'மா?

அல் : (துயரத்தை மறைத்தபடியே) அப்பா!

சிவக் : உடம்புக்கு என்ன'மா?

அல் : ஒன்றுமில்லை அப்பா. தலைவலி.

சிவக் : உடம்பைப் பார்த்துக்கொள் அம்மா. அடிக்கடி ஓய்வு எடுத்துக்கொள். அல்லி! அடுத்த மாதம் சென்னைக்குச் செல்லவேண்டும் அம்மா.

அல்லி : ஏன்'பா?

(சிவக்கொழுந்து ஒரு திருமண அழைப்பை அல்லியிடம் கொடுக்க, அல்லி படிக்கிறாள்.)

அல்லி : நம் கடையில் வேலை பார்த்தாரே அவர்மகளுக்கா அப்பா, திருமணம் ?

சிவக் : ஆமாம் அம்மா ! உன்னையும் உடன் அழைத்து வரும்படி தனிக்கடிதம் எழுதியிருக்கிறார்.

அல்லி : எனக்கு நிரம்ப வேலை இருக்குதே அப்பா !

சிவக் : எந்நேரமும் வேலைதான். கட்டாயம் போக வேண்டிய திருமணம் அம்மா. பரமேசுவரியும் உன்னை வரச்சொல்லி அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறாள். அவளையும் ஆசிரியரையும் பார்த்து விட்டு வரலாம். ஒரு வாரம் ஓய்வு எடுத்தாற்போல் இருக்கும்.

அல்லி : சரி, அப்பா.

## காட்சி : 37

**இடம் :** பூங்கா.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** *சுப்புரத்தினம் 'எது குற்றம்' என்ற புத்தகத்துடன் பாடிக்கொண்டு வருகிறான்.*

சுப்பு: மனம்போல் வாழ்வுசாரும் நிலம்சாரும்
நீரினைப் போலவே மாறும்
மதியை இழந்தேன் எனையே மறந்தேன்

தாறுமாறாகவே நெறிகூறும் நூலே மனமும் நாடும்
தக்க துணையதே தனியனைத் தீயனாக்கிய தந்தோ
மாறிலாத நன்னூல்கள் அன்றேகண்டறிந்தேனிலையே
மதியை இழந்தேன் எனையே மறந்தேன்—(மனம்)

உடல் வனப்பையும் உடை வனப்பையும்
நினைந்தேன் மகிழ்ந்தேனே
உளம் சிறந்தாள் உயிர் உயர்ந்தாள்
அழகறியாமல் இகழ்ந்தேனே
அவளது பெருமை அறியேனே
அவள் நலமே பெற ஆண்டவன்
அருளையானே வேண்டுவனே
மதியை இழந்தேன் எனையே மறந்தேன்—(மனம்)

சுப்பு : போலிப் புத்தகங்களைப் படித்துவிட்டுத்தவறான எண்ணங்களை வளர்த்துக்கொண்டேன். முன்னமேயே கெட்ட போக்கில் உள்ள என்னை ஊக்கம் ஊட்டிக் கெட்டவழியில் அஞ்சாமல் வாழத் துணைசெய்தது எது குற்றம்! எது குற்றம்! ஐந்து ஆண்டுகளுக்கு முன்னே இந்தப் புத்தகம் கிடைத்திருந்தால் என்

வாழ்க்கை கெட்டிருக்காது. இந்த நூலின் ஆசிரியரான டாக்டரைப் போல் ஒவ்வோர் ஊரிலும் டாக்டர்கள் தோன்றுவார்களானால் இந்த உலகமே சீர்ப்படுமே. (புத்தகத்தைத் திருப்பிப் படிக்கிறான்.)

நூல் : "திருமணமான பின், கணவனும் மனைவியும் மேற்கொள்ளும் உடலுறவு மோர் குடிப்பதைப்போன்றது. ஆனால் ஒருவன் திருட்டுவழியில் இன்னொருத்தியுடன் கொள்ளும் உறவு, கள் குடிப்பதைப் போன்றது. திருட்டு இன்பத்திற்கு வருகிறவள் உன் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாதவள். ஆனால் மனைவி எப்போதும் உன் எதிர்காலத்தைப் பற்றியே கவலைப்படுவாள். ஆகையால் உன் உடம்பு கெடாமல் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றுவாள்."

சுப்பு : அய்யோ! அல்லி! அவள் என் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட்டாள்; அதனால் நல்ல புத்தகங்கள் வாங்கிப் படித்து அவற்றைப் பற்றிக் கலந்து பேச வேண்டும் என்றாள். சியாமளா என் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட்டிருந்தால் அத்தகைய தீய புத்தகத்தைக் கொடுத்து என்னைப் படிக்கத் தூண்டியிருப்பாளா? அவள் சிலநாள் உறவுக்காக என்னை நாடினாள். அதனால் அளவுக்குமேல் அன்பும் உபசாரமும் காட்டி நடிக்க அவளால் முடிந்தது. என் மனைவியால் அப்படி நடிக்க முடியவில்லை. எப்படி முடியும்? வீட்டிற்குப் புதிதாக வந்து ஒருநாள் தங்கிச் செல்லும் விருந்தினரிடம் அளவுக்குமேல் அன்பு காட்டமுடியும். ஆனால் வீட்டிலேயே எந்நாளும் தங்கி இருக்கிற சுற்றத்தாரிடம் அப்படிப்பட்ட வரவேற்பும் உபசாரமும் காட்டி நடிக்க முடியுமா? அதனால் உள்ளன்பு குறைவு என்று ஏற்படுமா? தாசிக்கு அது தொழில். மனைவிக்கு இது வாழ்வு!

சியா—தூரல் : (ஏளனமாகச் சிரித்து) கோடை விடுமுறையில் கொஞ்சிக் குலாவப் போயிருக்கிருர் ஆசிரியர். அல்லி களங்கமற்றவள் ; நான் விபசாரி ! அப்படித்தானே ?

சுப்பு : அய்யோ என்ருல் பொறுக்க முடியவில்லையே ! நினைத்தாலே என்நெஞ்சம் கொதிக்கிறதே ! எரிமலை போல் குமுறுகிறது. இருக்காது ; இருக்காது ; இருக் கவே இருக்காது. என் மனைவி அப்படிப்பட்டவள் அல்ல. உண்மையானவள் ; களங்கமற்றவள். அவள் ஒருநாளும் தவறமாட்டாள். ஆசிரியர் அறவாழியும் அப்படிப்பட்டவர் அல்ல.

தூரல் : மனிதனின் மனம் வானளாவ உயர்ந்து உயர்ந்து பறக்கலாம். ஆயினும் அவர்களின் உடம்பு மண்ணின் மேல்தான் நிற்கின்றது.

சுப்பு : உண்மைதான். ஆனுல் பிறருக்காகத் தியாகம் செய்து வாழும் நல்லவர்களின் உடம்பு நிற்பது இந்த மண்ணின்மேல் அல்ல,வானளாவிய ஒழுக்கம் என்னும் உயர்ந்த மலைச் சிகரத்தின் மீதுதான். இயற்கையின் ஆணை அவளைப் போராட்டத்திற்குத் தூண்டி யிருக்க லாம். ஆனுல் அவளுடைய தியாக உணர்வு அவளைக் காப்பாற்றியே தீரும்.

தூரல் : விந்தையாக இருக்கிறது உன் நினைப்பு. அவளை உனக்கே உரிய மனைவியாக இருக்கவேண்டும் என்று விரும்புகிருய். ஆனுல் நீமட்டும் அவளுக்கே உரிய கணவராக வாழவில்லையே. என்ன அறியாமை !

சுப்பு : ஆம். அறியாமைதான். என் மனம் புண்படக் கூடாது என்று அஞ்சி வாழ்ந்தாள். ஆனுல் நான் அவள் மனத்தைப் பற்றி ஒருநாளும் கவலைப்பட்ட தில்லை. என் மனைவி கற்போடு வாழவேண்டும் என்று நினைக்கிறேன். கதறுகிறேன். கற்பிழந்தவள் எனக் கேட்டாலே துடியாய்த் துடிக்கிறேன். ஆனுல் நான்

மட்டும் கற்போடு வாழ வேண்டும் என்று பாடுபட வில்லை. ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியா?

தூரல் : இவ்வளவாவது உணர்ந்தாயே. போ, இப்போதே அல்லியிடம் செல். நீ திருந்திவிட்டாய் எனக் கேட்டால் உள்ளம் பூரிப்பாள். மகிழ்ந்து வரவேற்பாள். நீ செய்த கொடுமை எல்லாம் மறப்பாள்.

சுப்பு : மீண்டும் அவளுடைய முகத்தில் எப்படி விழிப்பேன்! மானக் குறைவு. ஆம் மானக் குறைவுதான். இந்த நன்றிகெட்ட மனிதனை மீண்டும் அவள் பார்க்க வேண்டாம். அந்தக் கிளி அப்படியே பறக்கட்டும். இனியும் அதைக் கூட்டில் அடைப்பது பாவம்! நான் எப்படியும் தொலைந்து ஒழிவேன். அல்லி! நீ எப்படியாவது நல்லபடி வாழும்மா.

## காட்சி : 38

**இடம் :** பரமேசுவரி வீடு.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** பரமேசுவரி, அல்லி, வேலையாள், தபால்காரன் (குரல்), குள்ளன்.

[அல்லி கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறாள். பரமேசுவரி நுழைகிறாள்].

பரமேசுவரி : என்ன கடிதம் ?

அல்லி : பெங்களூருக்கு இன்பவல்லிக்கு எழுதுகிறேன்.

(வேலைக்காரன் ஒருவன் வருகிறான்.)

வேலையாள் : அம்மா வரச் சொன்னார்கள்.

பரமேசு : ஒன்றும் அவசரம் இல்லையே.

வேலை : இப்பொழுதே வரச்சொல்லி அனுப்பினார்கள்.

பரமேசு : சரி, நீ போ. நான் வருகிறேன். (உள்ளே சென்று மருந்துப் பெட்டியை எடுத்து வருகிறாள். ஊசி மருந்துகளை எடுத்துவைக்கிறாள்.)

அல்லி : ஏழெட்டுப் பேருக்கு ஊசி போடுவதற்கு வேண்டிய மருந்து எடுத்துக்கொள்கிறாயே.

பரமேசு : ஏழெட்டுப் பேருடைய நோய்கள் எல்லாம் அவளுடைய உடம்பில் ஊறி இருப்பதாகத் தெரிகிறது. அதனால் அவ்வளவு மருந்து வேண்டாமா ?

அல்லி : என்ன நோய் ?

பரமேசு : எல்லாம் நோய்தான். புதுவகையாக இருக்கிறது. எந்நேரமும் அடிவயிற்றில் எரிச்சல். ஒரு வேளை மறந்து ஊசி போடவில்லையானால் துடியாய்த் துடிக்கிறாள். பணக்காரக் கழுதை ! விதவையாக இருந்தும் கண்டபடி ஆடி இப்போது தொல்லைப்படுகிறாள்.

அல்லி : யார் அது ?

பரமேசு : நீயும் வந்து பாரேன். காரில் ஏறு. புறப் படுவோம்.

அல்லி : எங்கே ? இடம் சொல்லு.

பரமேசு : நுங்கம்பாக்கம், ஸ்டர்லிங் ரோடு.

அல்லி : பெயர் ?

பரமேசு : சியாமளா. உனக்கும் தெரியும் போல் இருக் கிறதே.

அல்லி : தெரியாது. ஆனால் பெயரை எங்கோ கேட்ட நினைவு வந்தது.

தூரல் : தபால். டாக்டர் அல்லி !

அல்லி : (போய் வாங்கி வந்து பார்த்து) இன்பவல்லியின் கடிதம். நீ போய் வா. பிறகு பேசிக்கொள்ளலாம். நான் கொஞ்சம் ஓய்வாக இருக்கப்போகிறேன்.

(பரமேசுவரி சென்றபின் கடிதத்தை உடைத்துப் பார்க் கிறாள்.)

இன்பவல்லி—தூரல் : அன்புள்ள தோழி ! இக்கடிதத்தைப் படித்ததும் நீ என்னைப் பற்றித் தவறாக எண்ணு வாயோ என்று வருந்துகிறேன். ஆசிரியர் அறவாழி பெங்களூருக்கு வந்து நோயாய்ப் படுத்தபோது நீயும் தொண்டு செய்தாய் ; நானும் தொண்டு செய்தேன். ஆனால் நீ நெகிழவில்லை, கலங்கவில்லை ; நானோ தன் னந் தனியாக அவர்பக்கத்தில் இருந்து தொண்டு செய்த சில நாட்களில் என் உள்ளத்தைப் பறி கொடுத்துவிட்டேன். நான் அவருக்கு ஒரு கடிதமும் எழுதினேன். அவர் பதில் எழுதவில்லை. நான் எழுதி யது காதல் கடிதமும் அல்ல. அதற்கே அவர் பதில் எழுத அஞ்சுகிறார். இந்த உலகத்தில் கெட்டவர்கள் எதிலும் துணிந்து இறங்குகிறார்கள். நல்லவர்கள் நல்லது செய்வதற்கும் தயங்கித் தயங்கிச் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். அதனால்தான் உலகத்தில் தீமை

தழைக்கிறது; நன்மை நலிகிறது. நான் கடிதத்தின் வாயிலாக அவருக்குத் தெரிவிப்பதைவிட உன் வாயிலாக எவ்வளவோ தெரிவிக்க முடியும். நீ உன் அப்பாவிடம் பழகுவது போல் அவரிடம் பழகுகிறாய். அவருக்குத் தொண்டு செய்து வாழ்நாளைக் கழிக்கவே இப்போது என் உள்ளம் விரும்புகிறது என்று அவரிடம் சொல். என்னைப் பற்றித் தவறாக எண்ணாதே.

உன் அன்புள்ள,
இன்பவல்லி

அல்லி : குருடன் குருடனோடு மோதிக் கொண்டு, " கண் தெரியவில்லை அப்பா, மன்னித்துக் கொள் " என்று சொன்னதுபோல் இருக்கிறது. அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை. அவளே உண்மையானவள். அவள் எனக்குத் தெரிவித்தாள். நானோ என் நெஞ்சம் புலப்படாதபடி நன்றாக நடித்தேன். இப்படிப்பட்டவளுக்கு உதவி செய்வதே கடமை. ஆசிரியர் அறவாழி இன்பவல்லிக்கு உரியவராவது நல்லது.

(கடிதத்தை மடித்து உறையினுள் வைக்கிறாள். பரமேசுவரி வருகிறாள்.) எப்படி இருக்கிறாள் ?

பரமேசு : நான் மருந்தை மேலும் மேலும் கொடுக்கிறேன். அவள் பத்தியமான நடக்கையில் இருந்தால்தானே!

அல்லி : என்ன பணம் தருகிறாள் ?

பரமேசு : மாதம் ஐந்நூறு.

அல்லி : அப்படியானால் கவலை இல்லாமல் போய்விட்டுவா.

பரமேசு : எனக்குக் கவலை இல்லை. அவளுக்கு நாளுக்கு நாள் கவலை மிகுந்துவிட்டது. வீட்டில் அடிக்கடி திருட்டு வேறு நடக்கிறதாம். சமையல்காரி நகைகளைத் திருடிக்கொண்டு போய்விட்டாளாம். எவனோ ஒருவன் செக் புத்தகத்தையே எடுத்துக்கொண்டு போய்விட்டானும்.

(அல்லி தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை மறைத்துக்கொள்கிருள்.)

குள்ளன் : (நுழைவு) வணக்கம் அம்மா.

அல்லி : என்னப்பா குள்ளா, நலமா ?

பரமேசு : யார் இந்த ஆள் ?

அல்லி : என் பழைய வேலைக்காரன். ஆசிரியர் அறவாழி வீட்டில் இப்போது வேலை பார்க்கிருன். ஆசிரியர் நலம்தானு ?

குள் : நலம்தான் அம்மா. இப்போதுதான் அப்பா ஆசிரியர் வீட்டுக்கு வந்தாங்க. நீங்களும் வந்திருப்பதாகச் சொன்னுங்க. பார்க்கணும் என்று ஓட்டமா வந்தேன்.

அல் : பரமேசுவரி ! நாமும் ஆசிரியர் வீட்டுக்குப் போய் வரலாமா ?

குள் : இப்போ ஆசிரியரும் அப்பாவும் கடற்கரைக்குப் போயிருப்பாங்க.

அல் : நாமும் கடற்கரைக்குப் போகலாமே !

பரமேசு : நானே காரில் உன்னைக் கொண்டுவந்து விட்டு வருவேன். இடையில் கொஞ்சம் வேலை இருக்கிறது. அதை முடித்துவிட்டு மறுபடியும் கடற்கரைக்கு வந்து உங்களை அழைத்துவருவேன்.

அல் : சரி, பரமேசுவரி. குள்ளா ! நீயும் காரில் ஏறு.

(மூவரும் புறப்படுகின்றனர்.)

## காட்சி : 39

இடம் : பூங்கா.

காலம் : மாலை.

மாந்தர் : சிவக்கொழுந்து, அறவாழி, அல்லி, பரமேசுவரி, குள்ளன், புத்தகம் விற்பவன்.

[சிவக்கொழுந்தும் அறவாழியும் பூங்காவில் இருக்கிறார்கள். அல்லி பரமேசுவரி குள்ளன் மூவரும் வருகின்றனர்.]

அல் : வணக்கம்.

அற : வணக்கம் அம்மா. கடற்கரையிலிருந்து திரும்பும் வழியில் உன்னைப் பார்த்துவிட்டுச் செல்லலாமென்றிருந்தேன்.

அல் : குழந்தைகள் இருவரும் நல்லபடி இருக்கிறார்களா ?

அற : நல்லபடி இருக்கிறார்கள்.

பரமேசு : அல்லி ! இங்கேயே இரு. சிறிது நேரத்தில் வந்து விடுவேன்.

(விடை பெற்றுச் செல்கிறாள்.)

சிவக் : அம்மா, நீ ஆசிரியரோடு பேசிக்கொண்டிரு. தெரிந்தவர்கள் யாராவது வந்திருந்தால் பார்த்துவிட்டு வருகிறேன்.

(சிவக்கொழுந்தும் குள்ளனும் செல்கின்றனர்.)

அல் : அவர் எங்கே இருக்கிறார் என்பது தெரியுமா ?

அற : அவரைப்பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லை. (அல்லி, பையிலிருந்து இன்பவல்லியின் கடிதத்தை எடுத்துக் கொடுக்கிறாள். அறவாழி படிக்கிறார்) நாள் செய்வது நல்லோர் செய்யார். நாள் ஆக ஆக இந்தக் கவலை மறைந்துபோகும் என்று சொல் அம்மா.

அல் : உங்களுக்கு முன் ஒரு கடிதம்......

அற : வந்து சேர்ந்தது. மனம் பொல்லாதது. அப்படியே வளரவிடக் கூடாது அல்லவா? வேண்டுமென்றே நான் பதில் எழுதவில்லை. பெங்களூரிலிருந்து அவசரமாகப் புறப்பட்டு வந்ததற்கே அதுதான் காரணம். எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் உடம்பின் உணர்ச்சி உள்ள வரையில் கணவன் மனைவி அல்லாத ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகாமலே இருப்பது நல்லது.

அல்லி : இன்பவல்லியிடம் ஏதாவது குறை கண்டீர்களா?

அற : உண்மையாகச் சொல்கிறேன். நான் ஒரு குறையும் காணவில்லை. நகையும் விரும்பாமல் தூய எளிய உடை உடுத்து வாழும் வாழ்வைக் கண்ட எனக்கு மணிமேகலையின் நினைவு வந்தது. இன்று உலகம் உள்ள நிலையில், பலர் மணிமேகலைகளாய் வாழ்க்கை நடத்தினால் பெண் உலகம் திருந்தும், ஆணுலகும் அறிவு பெறும். திருமணமாகி இல்வாழ்க்கையில் ஓரளவு பெற்ற அனுபவம் அந்த அம்மாவுக்குப் போதும்; எனக்கும் என் அனுபவம் போதும். அந்த அனுபவத்தைப் பயன்படுத்தி மற்றவர்களுக்கு வழிகாட்டுவதற்காக எஞ்சிய வாழ்க்கையை இப்படியே வாழவேண்டும்.

அல்லி : ஆமாம். மற்றவர்களுக்கு என்ன வழி காட்டப் போகிறீர்கள்?

அறவாழி : முதலாவது என் இல்வாழ்க்கையே ஒருதோல்வி தான். அதிலிருந்து நான் எவ்வளவோ கற்றுக் கொண்டேன். பலருடைய இல்வாழ்க்கை தோற்றுப் போவதற்குக் காரணம், நம்பத்தகாதவர்களை நம்பிச் செல்வதுதான். இன்பத்திற்குத் துணையாக வருவோரைப் பலர் நம்புகிறார்கள். அவர்கள் துன்பம் வரும்போது விட்டுப் பிரிந்துபோகிறார்கள். என் இல்வாழ்க்கை அப்படிக் கெட்டது அல்ல. மனைவி நல்லவள்தான். ஆனால் போதிய அறிவு வளர்வதற்கு முன்னே தாய் ஆகிவிட்டாள். நான் கொள்கைகளைப்

போற்றிக் கொள்கைகளுக்காக வாழத் தொடங்கி விட்டேன். அப்போது அவளுக்குக் கொள்கை என்ருல் என்ன என்றே தெரியாது.

அல்லி : பாவம் ! அப்படிப்பட்டவர்களைக் கெட்டவர்கள் என்று சொல்லக் கூடாது. ஒன்றும் தெரியாதவர்கள் !

அற : ஆமாம். அப்படிப்பட்ட குழந்தைகளை எங்காவது பள்ளிக்கூடங்களில் வளர்க்க வேண்டும். வாழ்க்கைத் துணையாகக் கொள்வது தவறு அல்லவா ! (சிறிது பொறுத்து) படித்து அறிவு வளர்ந்த பெண்களும் பலர் அப்படி நல்ல கொள்கைகளை வெறுப்பவர்களாக இருக்கிருர்களே.

அல்லி : உண்மைதான், ஆண்களிலும் பலர் அப்படி இருக்கிருர்களே.

அற : பெண்களைமட்டும் குறை சொல்வதாக எண்ண வேண்டாம். ஆண்களிலும் பலர் அப்படி இருக்கிருர் கள். உண்மைதான். எப்படியாவது வாழவேண்டும், ஆடம்பரமாக வாழவேண்டும் என்ற ஒரே ஆசைதான் அவர்களுக்கு உண்டு. கொள்கைகளைப் பற்றிக் கவலை இல்லாத இவர்களெல்லாம் ஒரு சாதி. உயர்ந்த குறிக்கோளுக்காக எளிய வாழ்க்கை – அளவான வாழ்க்கை – நடத்த வேண்டும் என்று நினைக்கிறவர் கள் முற்றிலும் வேருன சாதி. இந்த இருசாதியாருக் குள்ளும் கலப்பு மணம் கூடாது என்றுதான் இளைஞர்களிடம் வற்புறுத்திச் சொல்வேன்.

அல்லி : (துயரத்துடன்) உண்மைதான் ; கூடாதுதான். முதலில் என் வாழ்க்கையே அதற்கு நல்ல எடுத்துக் காட்டு.

அற : அம்மா ! உன் மனம் வருந்தும்படி ஏதேதோ பேசி விட்டேன். இப்படித்தான் ஏதாவது பேச ஆரம் பித்தால் எதிரில் இருப்பவரின் நிலையையும் மறந்து விட்டுப் பேசிவிடுகிறேன்.

பரமே : (நுழைவு) போகலாமா ?
அல்லி : அதோ அப்பாவும் வந்துவிட்டார்கள்.
சிவக் : (நுழைவு) அம்மா ! நான் ஆசிரியருடன் போய் விட்டுத் திரும்புகிறேன். நீங்கள் இருவரும் முன்னே காரில் போங்கள்.

(சிவக்கொழுந்தும் அறவாழியும் விடைபெற்றுச் செல்கிறார்கள். சென்றபின், பழைய புத்தகம் விற்பவன் ஒருவன் பாடிக்கொண்டே வருகிறான். அல்லி, பரமேசுவரி, குள்ளன் மூவரும் நிற்கிறார்கள்.)

புத்தகம் விற்பவன் :

எது குற்றம் ஒருரூபாய் வேணுமா... இந்த
எது குற்றம் ஒருரூபாய் வேணுமா
இந்த வகையில் இருக்கிறது ஒண்ணே ஒண்ணுதான்
இருப்பது ஒண்ணே ஒண்ணுதான்
குறைந்த விலைக்குக் கொடுக்கமாட்டேன் வேணும்என்று
காசு வேணும்என்றுதான். [தான்

குள் : பார்த்தீர்களா அம்மா! நம் புத்தகம். எதுகுற்றம் !
விற் : எதுகுற்றம் ஒரு ரூபாய், சிரித்துப்பார் எட்டணு !
குள் : ஏ ! எதுகுற்றம் எட்டணுவுக்குக் கொடுப்பாயா ?
விற் : இருப்பது ஒரு புத்தகம், தேவையானல் வாங்கிக் கொண்டுபோகலாம். அப்புறம் கிடைக்காது. போனல் வராது. பொழுதுபட்டால் கிடைக்காது.
குள் : புதுப் புத்தகம் எங்கேயும் கிடைக்கும்.
விற் : போய் வாங்கிக்கொள் அய்யா.
குள் : பத்தணு தருகிறேன்.
விற் : பன்னிரண்டணு.
அல்லி : இப்படிக் கொடு அப்பா. (புத்தகத்தை வாங்கிப் பார்க்கிறாள். முதல் பக்கத்தில் என்னவோ எழுதியிருக்கிறது. உற்றுப் பார்க்கிறாள். முதலில் மகிழ்ச்சியும் பிறகு கலக்கமும் ஏற்படுகின்றன.)

விற் : என்ன'மா, அது ? எங்காவது எதையாவது விட்டு விட்டீர்களா ?

அல்லி : பரமேசுவரி ! இதைப் பார்.

பரமேசு : (வாங்கிப் படிக்கிறாள்.) "ஐந்து ஆண்டுகளுக்கு முன்னே இந்தப் புத்தகம் கிடைத்திருந்தால் என் வாழ்க்கை கெட்டிருக்காது. ச. சுப்புரத்தினம்.—" இதை ஒரு மதிப்புரை என்று வைத்துக் கொள்ளேன். இதற்காக என்ன ?

அல்லி : ஓ ! பெயரை மறந்திருப்பாய். (சிறிது அமைதி.) அது என் கணவர் பெயர்.

துள்ளன் : (புத்தகத்தை வாங்கிப் பார்த்து) ஆமாம் அம்மா. அய்யாவே எழுதியிருக்கிறாரு.

விற்பவன் : என்ன'மா இது ? ஒரு புத்தகம் வாங்க இவ்வளவு நேரமா ?

துள்ளன் : கொஞ்சம் பொறு அப்பா.

அல்லி : (பன்னிரண்டரை கொடுக்கிறாள்.) உனக்கு இந்தப் புத்தகம் எப்படி வந்தது ?

விற்பவன் : எப்படி அம்மா அதெல்லாம் நினைவிருக்கும் ? எத்தனையோ புத்தகம் வரும், போகும். அப்படிப் பட்ட இடம் இது.

அல்லி : எப்படியாவது எண்ணிப் பார்த்துச் சொன்னால் நிறையப் பணம் தருவேன்.

விற்பவன் : இதை எல்லாம் தெரிந்துகொள்வது எப்படி முடியும் ? (எண்ணிப்பார்த்து) நான் வாங்கியது ஒருத்தரிடத்தில். எதற்கும் நாளை இதே இடத்திற்கு வந்தால் கேட்டுவந்து சொல்வேன். (போகிறான்.)

## காட்சி : 40

இடம் : சென்னையில் ஒரு தெரு.

காலம் : மாலை.

மாந்தர் : அல்லி, பரமேசுவரி, டிரைவர், புத்தகம் விற்பவன்.

விற்பவன் : அதோ இருக்கிறாரே அந்த ஆள்தான் அம்மா.

பரமேசு : கொஞ்சம் பேச வேண்டும் என்று நாங்கள் கூப்பிட்டதாகச் சொல். (விற்பவன் உள்ளே செல்கிறான்.)

அல்லி : எங்கே இருந்தால் என்ன? தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறேன்? ஏன் இந்த வீண் முயற்சி? அந்த வியாபாரிக்கு வீண்வேலை வைத்தோம். சென்னைக்கு ஓய்வாக வந்துபோக எண்ணினேன். இந்தக் கவலையை வளர்த்துக்கொண்டேன்.

பரமேசு : அவர் நூலைப் படித்து அவ்வாறு எழுதியிருக்கிறார். அதனால் மனம் திருந்தியிருக்கிறார் என்றே தெரிகிறது.

அல்லி : உண்மையாகவே அவர் மனம் மாறியிருப்பாரானால் புத்தகத்தைப் படித்த பிறகு அதை வைத்துக் காப்பாற்ற வேண்டும். அதைக் கடைத் தெருவுக்கு அனுப்பக் காரணம்—?

டிரைவர் : (நுழைவு) என்னங்க ?

பரமேசு : இவரிடம் 'எதுகுற்றம்' என்ற பழைய புத்தகம் வாங்கினோம். அதில் சுப்புரத்தினம் என்ற பெயர் இருந்தது. அந்தப் பெயருள்ள ஓர் ஆள் இந்த அம்மாவுக்குச் சொந்தக்காரர். உங்களுக்கு அவரைப் பற்றித் தெரியுமா ?

விற் : நான் போகிறேன்'மா.

(அல்லி அவன்கையில் இரண்டு ரூபாய் கொடுக்கிறாள். அவன் போகிறான்)

டிரைவர் : அம்மா அந்த ஆள் எனக்கு மூன்று மாதமாகத் தான் பழக்கம். இந்தக் கம்பெனியில் மோட்டார் ரிப்பேர் தெரியும் என்று வந்து சேர்ந்தார். அவருக்கும் எனக்கும் எப்படியோ பிடித்திருந்தது. பழக்கம் வளர்ந்துவிட்டது. ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு, இங்கே வேலை செய்துவிட்டு, இங்கேயே படுத்துக் கொள்வார். அடிக்கடி ஏதாவது நோய் வந்து துன்பப் படுவார். கடைசியில் ஓட்டலுக்கும் போக முடியாத படி ஆள் படுத்துவிட்டார். அப்போது நானே என் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனேன். நோய் தீர்ந்த பாடில்லை. கடைசியில் பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்தேன். நல்ல ஆள். எந்நேரமும் முருகன்மேல் பாட்டுப் பாடிக்கொண் டிருப்பார். நல்ல மனம், நல்ல பேச்சு, நல்ல குணம். ஆனால் நல்லகாலம் இல்லை, பாவம்.

பரமேசு : எந்த ஊர்? எங்கே இருந்தார்? ஏதாவது சொல்லியிருக்கிறாரா?

டிரைவர் : இந்தப் பக்கம்தான் ஏதோ ஊர் சொன்னார். யாருடைய செக்கிலோ கையெழுத்துப் போட்டுப் பணம் வாங்கியதாகவும், கண்டுபிடித்துச் சிறையில் போட்டுவிட்டதாகவும், சொன்னார். பொல்லாத கிரகம் இருந்தால் எல்லாம் செய்யச் சொல்லும். விதி யாரை விட்டது? பாவம்! அவர் நல்லவர்தான்! அவர் என்ன செய்ய முடியும்? முன்னுக்கு வர முடியாமல் போனதாகவும் சொன்னார்.

பர : குடும்பத்தைப் பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறாரா?

டிரை : மனைவி உண்டு என்றும், நல்லவள் என்றும், ஆனால் எப்படியோ பொருத்தம் இல்லாமல் போய்விட்டது என்றும், அதன் பின் அவள் பெங்களூர்க்குப் போய் விட்டாள் என்றும் சொன்னார்.

பர : அவருடைய சாமான்கள் பெட்டி முதலியவை ஒன்றும் இல்லையா?

டிரை : சில புத்தகங்கள் இருந்தன. நீங்கள் வாங்கிய புத்தகம்கூட அந்தப் பெட்டியிலிருந்ததுதான். நான் தான் ஆஸ்பத்திரிச் செலவுக்காவது பயன்படுமே என்று விற்றுவிட்டேன். (அல்லி கண்கலங்குகிறாள்.) ஏனம்மா வருத்தப்படுகிறீர்கள்? மிகவும் வேண்டியவர்கள் போலிருக்குதே அம்மா. இந்த நிலையிலாவது அவரைப் பார்க்க வந்தீர்களே! பெரிய ஆஸ்பத்திரியில் ஏழாவது வார்டில் இருக்கிறார். போய்ப் பாருங்கள்.

பா : ஆமாம் அல்லி. அப்பாவையும் அழைத்துக்கொண்டு போய்ப் பார்க்கலாம் வா. (போகிறார்கள்.)

## காட்சி : 41

**இடம் :** ஆஸ்பத்திரி.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** சுப்பு, டாக்டர், அல்லி, பரமேசுவரி, சிவக் கொழுந்து,

[சுப்புரத்தினம் முருகனை நினைந்து பாடிக்கொண்டிருக்கிறார்.]

சுப்பு : ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே......(பேராசை)

சுப்பு : ஆசைக்கு ஓர் அளவில்லை ; ஆசை தீர்வது ஒரு நாளும் இல்லை. (வருத்தமுடன்) இப்போது திருந்தினால் என்ன? திருந்தாவிட்டால் என்ன? கண் கெட்ட பிறகு கதிரவன் வழிபாடா ? கையொடிந்தபின் திருடமாட்டேன் என்பது போல்தான்.

டாக்டர் : (நுழைவு) இப்படி எந்நேரமும் நீ அழுது புலம்பிக் கொண்டிருந்தால் புண் ஆறாது. நாங்கள் என்ன ஊசிபோட்டும் மருந்து கொடுத்தும் பயன் இருக்காது.

சுப்பு : வாழ்ந்த நாள் எல்லாம் நடைப் பிணமாய் வாழ்ந்தேன். இனி நான் பிழைத்து என்ன செய்யப்போகிறேன். நான் பிழைக்கமாட்டேன் என்பது எனக்குத் தெரியும், டாக்டர்.

டாக்டர் : *அதற்காக இப்படி அழுது புலம்புவதா ?*

சுப்பு : *என் நிலைமையை எண்ணிப் பார்த்தேன் ; அழுது புலம்புகிறேன். பிறர் கண்டால் வெறுக்கும் நோய் அல்லவா இது ? இந்நோய்க்கு ஆளாகியிருக்கும் நான் ஒரு எஞ்சினியர் டாக்டர். (கதறுகிறான்.)*

டாக்டர் : *என்ன ? எஞ்சினியரா ?*

சுப்பு : *ஆம் டாக்டர். பி. இ. படித்த எஞ்சினியர். உயர்ந்த படிப்பு, தாழ்ந்த வாழ்க்கை. நான் நல்லபடி வாழ்ந்திருக்க முடியும் டாக்டர். ஆனால் என்னைக் கெடுப்பதற்கு நானே வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொண்டேன். வழிகள் வகுத்துக்கொண்டேன். தேநீர் விருந்துகள், அவற்றில் மற்றவரின் மனைவியரோடு கலந்து பழகும் நாகரிகம், குதிரைப் பந்தயம், அங்கே நாகரிகத்தின் பெயரால் நாணமின்றிப் பார்க்கும் பார்வைகள், கடற்கரைப்பொழுதுபோக்கு,அங்கே எவளோடாவது கைகோத்துத் திரியும் களியாட்டம் ! வழியில் கிடக்கும் முள்ளுக்கே அஞ்சி நடக்க வேண்டியதுபோய், முட்புதரோடு உறவு வைத்துப் புரண்டேன் டாக்டர். நான் புரண்டது போதாது என்று என் மனைவியையும் விழுந்து புரளத் தூண்டினேன். நாணத்தால் மற்ற ஆண்களோடு அவள் கலந்து பழகத் தயங்குவதைக் கண்டு, அவளை நாகரிகம் இல்லாதவள் எனக் கடிந்தேன். எம். பி. பி. எஸ். படித்தும் பயனில்லை என்று அவளை இகழ்ந்தேன்.*

டாக்டர் : *என்ன ! உங்கள் மனைவி ஒரு டாக்டரா ?*

சுப்பு : *ஆம் ! டாக்டர், அவளும் உங்களைப் போல் ஒரு டாக்டர். ஆனால் அவள் என்னோடு வாழவில்லை. வாழ முடியவில்லை. நான் வாழ விடவில்லை. வாழ வேண்டும் என்ற ஆசையோடு எவ்வளவோ விட்டுக் கொடுத்துப் பொறுமையோடு நடந்தாள். உடலின் வளத்தையும் உடையின் வளத்தையும் பார்த்து*

மகிழ்ந்து பெண்ணைத் தேடித் திரிந்த எனக்கு அவளுடைய உள்ளத்தின் வளம் எங்கே தெரியப் போகிறது? பேசாமல் திரும்பிப்போ என்று வாயாலும் சொல்லிவிட்டேன். (அழுகிறான்.) தன் ஒரே மகளை, எலும்புருக்கி நோய்க்கு இரையாக்கிவிட்டுத் துடித்துக் கொண்டிருந்த அந்தப் பெரியவரின் மனம் எவ்வளவு துன்பப்பட்டிருக்கும்! தன் மகளாவது கணவனோடு நல்லபடி வாழவேண்டுமே என எண்ணியிருந்த அந்த அன்புமனம் எவ்வளவு அல்லல்பட்டிருக்கும்!

டாக்டர்: டாக்டர் அல்லி!

சுப்பு: ஆம் டாக்டர்! அவள்தான் என் மனைவி. அவள் உங்களுக்குத் தெரியுமா?

டாக்டர்: தாம்பரம் ஆஸ்பத்திரியில் உங்கள் மைத்துனரைச் சேர்த்திருந்தபொழுது நான் அங்கே இருந்தேன்.

சுப்பு: (கெஞ்சுதலோடு) எனக்கு ஒரு சின்ன உதவி செய்ய மாட்டீர்களா டாக்டர்?

டாக்டர்: என்ன வேண்டும்? சொல்லுங்கள்.

சுப்பு: டாக்டர்! நானாக, என் மனைவியைப் போய்ப் பார்ப்பது மானக் குறைவு என்று எண்ணினேன். நீங்கள் எப்பொழுதாவது அல்லியைப் பார்த்தால் சொல்லுங்கள் டாக்டர். நான் திருந்திவிட்டேன் என்று சொல்லுங்கள். மனம் மாறிவிட்டேன் என்று சொல்லுங்கள். அதன் பிறகே இறந்தேன் என்று சொல்லுங்கள், டாக்டர்.

(அல்லி, பரமேசுவரி, சிவக்கொழுந்து நுழைவு. சுப்பு அல்லியைப் பதற்றத்துடன் பார்க்கிறார்.)

சுப்பு: (எழுந்து) அல்லி! அல்லி! அல்லி! (அல்லியின் அருகில் சென்று கீழே விழுகிறார்.)

அல்லி: அய்யோ! (கதறுகிறாள்.)

(டாக்டர் சுப்புவின் கையைத் தூக்கி நாடி பார்க்கிறார்.)

டாக்டர் : டாக்டர் அல்லி ! உங்கள் நிலைமைக்கு மிகவும் வருந்துகிறேன்.

அல்லி : (கண் புதைத்து) அப்பா !

சிவக் : (வருந்தி) அம்மா ! நடக்காமல் குறையாக இருந்த இதுவும் நடந்துவிட்டதே அம்மா.

| காட்சி எண் :— | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 | 41 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டாக்டர் அல்லி ... | 1 | | 3 | | 5 | | 7 | | 9 | | 11 | | 13 | | 15 | | 17 | | 19 | 20 | | 22 | | 24 | 25 | | 27 | | 29 | | 31 | | 33 | | | 36 | | 38 | 39 | 40 | 41 |
| சுப்புரத்தினம் ... | | 2 | 3 | | 5 | | 7 | | 9 | | 11 | | | 14 | | 16 | 17 | 18 | | 20 | | | | | | | | | | 30 | | 32 | | 34 | | | 37 | | | | 41 |
| சிவக்கொழுந்து ... | 1 | 2 | 3 | | 5 | | | | | 10 | 11 | | 13 | | | | | | 19 | | | 22 | | 24 | 25 | 26 | 27 | | 29 | | 31 | | | | | 36 | | | 39 | | 41 |
| அரவாழி ... | | | | 4 | | 6 | | 8 | | 10 | | | | | | | | | 19 | | | 22 | 23 | 24 | | 26 | | | 29 | | 31 | | 33 | | | | | | 39 | | |
| சோமசுந்தரம் ... | 1 | | 3 | 4 | 5 | 6 | | 8 | | 10 | | | 13 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| பரமேசுவரி ... | 1 | | 3 | | | | | | | | | | | | | | | | 19 | | | | | | | | | | | | | | | | 35 | | | 38 | 39 | 40 | 41 |
| சியாமளா ... | | 2 | | | | | | | | | | | | 14 | | 16 | | 18 | | 20 | | | | | | | | | | 30 | | 32 | | | 35 | | | | | | |
| குன்னன் ... | | | | | | | 7 | | 9 | | | 12 | | | 15 | | 17 | | | 20 | 21 | | | | | | | 28 | | | | | | | | | | 38 | 39 | | |
| கருமாரன் ... | | | | | | | | | 9 | | | | | | | 16 | | | | | | | | | | | | | | 30 | | 32 | | | 35 | | | | | | |
| ஜெகமல்லி ... | | | | | | | | | | | | | 13 | | 15 | | | | | | | | | | | | 27 | | 29 | | 31 | | 33 | | | | | | | | |
| வள்ளி ... | | | | | | | | | | | | | | | | | | 18 | | | | | | | | | | | | 30 | | 32 | | | | 36 | | | | | |
| ஆயா ... | 1 | | 3 | | 5 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| ஐயர் ... | | 2 | 3 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| அத்தை ... | | | 3 | | | | | | 9 | | 11 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| குழந்தைகள் 2 ... | | | | | | | | | 9 | | 11 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| வியாபாரி—1 ... | | | | | 5 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| வியாபாரி—2 ... | | | | | 5 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கீழே விழுந்தவன் ... | | | | | | | 7 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கருமாரன் மனைவி ... | | | | | | | | | 9 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| வயிற்றுவலிக்காரன் | | | | | | | | | | | 11 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| குன்னன் நண்பன் ... | | | | | | | | | | | | 12 | | | | | | | | | 21 | | | | | | | 28 | | | | | | | | | | | | | |
| [illegible] ... | | | | | | | | | | | | | 13 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 41 |
| பள்ளி வேலையாள் ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | 23 | | | | | | | | | | | | | | | | | | |
| [illegible] ஆசிரியர் ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | 23 | | | | | | | | | | | | | | | | | | |
| விஞ்ஞான ஆசிரியர் ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | 23 | | | | | | | | | | | | | | | | | | |
| மாணவர் ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | 23 | | | | | | | | | | | | | | | | | | |
| வந்தவன் ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 25 | | | | | | | | | | | | | | | | |
| ஸி. ஐ. டி. ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 34 | | | | | | | |
| போலீஸ் ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 34 | | | | | | | |
| வேலையாள் ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 38 | | | |
| புத்தகம் விற்பவன் ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 39 | 40 | |
| டிரைவர் ... | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 40 | |
| குமரன் ... | | | | | | | | | | 10 | | | | | 15 | 16 | 17 | | | | | | | | 25 | | | | | | 31 | | 33 | | | 36 | 37 | 38 | | | |

**குறிப்பு :—** இந்த அட்டவணையில் நாடகப் பாத்திரங்களின் எதிரே தோன்றும் காட்சி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு காட்சியிலும் தோன்றும் பாத்திரங்களைப் பார்த்து எளிதில் தெரிந்துகொள்ளலாம். நடிக்கும் காலத்து இதனைப் பெரிதாக எழுதி அரங்கத்திலும் [illegible] இடங்களில் தொங்கவிட்டுக்கொள்வது நன்று. நாடகத் தொடக்கம் முதல் இறுதிவரை தோன்றும் முக்கிய பாத்திரங்களைத் தவிர்த்து, மற்றப் பாத்திரங்களை ஒருவரே பல வேடங்கள் புனைந்தும் நடிக்கலாம். இருபத்தொரும் [illegible] நடிகர்களைக் கொண்டு செம்மையாக நடிக்கலாம்.

## ஒவ்வொரு காட்சியிலும் தேவைப்படும் பொருள்களும் கையாளும் பாத்திரங்களும்

காட்சி எண் தேவை

1. சிவக்கொழுந்து வீடு: (நாற்காலி–1); குடை - சிவக்கொழுந்து; நாடிக்குழாய், புத்தகங்கள் - அல்லி, பரமேசுவரி.
2. சென்னைப் பெருந்தெரு: குடை - சிவக்கொழுந்து; விசிறி - தரகர்; சிகரெட் - சுப்பு.
3. சிவக்கொழுந்து வீடு: (நாற்காலி–5, மேசை–1) கடிதத்தாள் - கவர், பேனா - அல்லி; நாடிக் குழாய், புத்தகம் - பரமேசுவரி; காப்பி, வெற்றிலை - சோமு.
4. பூங்கா: (பெஞ்சு) திருமண அழைப்பு - சோமு; கட்டுரை - அறவாழி.
5. நிழற்காட்சி: மாலை 2.
   சிவக்கொழுந்து வீடு: நாற்காலி–3) சந்தனம், பன்னீர், வெற்றிலை - சிவக்கொழுந்து.
6. பூங்கா: (சிறிய பெஞ்சு) செய்தித்தாள் - அறவாழி.
7. சுப்புரத்தினம் வீடு: (மேசை–1, நாற்காலி–2) ஐந்து ரூபாய், சிகரெட், மோசமான அட்டைப் படமுள்ள புத்தகம் - சுப்பு; காபி, நூல் சேலை - அல்லி.
8. பூங்கா: (சிறிய பெஞ்சு)
9. சுப்புரத்தினம் வீடு: (மேசை–1, நாற்காலி–4) காப்பி 4 - அல்லி; இதழ்வண்ணம், சிகரெட் - சுப்பு; பெட்டி - சுப்புவின் அத்தை.
10. சிவக்கொழுந்து வீடு: (மேசை–1) புத்தகங்கள், நாட்குறிப்பு - சிவக்கொழுந்து.

காட்சி எண் தேவை

11. சுப்புரத்தினம் வீடு : (நாற்காலி—2) செய்தித் தாள் - சுப்பு; மருந்து - நோயாளி.
12. சென்னை நெடுந்தெரு.
13. ஆஸ்பத்திரி : (மேசை—1, நாற்காலி—3) நாடிக் குழாய், தர்மாமீட்டர், எக்ஸ்ரே-டாக்டர்; மருந்துப்புட்டி - இன்பவல்லி.
14. பூங்கா : 'எவர் குற்றம்' புத்தகம் - சியாமளா; பேனா - சுப்பு.
15. சுப்புரத்தினம் வீடு : (நாற்காலி—2) டெலிபோன் - அல்லி; 'எவர் குற்றம்' - குள்ளன்.
16. நிழற்காட்சி : குதிரைகள் ஓட்டம்.
பூங்கா : குதிரைப் பந்தயக் குறிப்பு, பேனா - சுப்பு.
17. சுப்புரத்தினம் வீடு : கோட்டு, சுலோசனா கடிதம் - சுப்பு; டெலிபோன் - அல்லி.
18. சியாமளா வீடு : (நாற்காலி—2)
19. சிவக்கொழுந்து வீடு : (நாற்காலி—3)
20. சுப்புரத்தினம் வீடு : (மேசை—1, நாற்காலி—1) பெட்டி சேலைகள் - அல்லி; சாவி - சுப்பு; சிறிய நகைப்பெட்டி - அல்லி; இதழ்வண்ணம், கண்ணாடி - சியாமளா.
21. வீதி
22. சிவக்கொழுந்து வீடு : (நாற்காலி—2)
23. பள்ளிக்கூடத்தில் ஓர் அறை : (மேசை—1, நாற்காலி—4) பொடி, டீ - வேலையாள்; செத்த எலி - விஞ்ஞான ஆசிரியர்.
24. சிவக்கொழுந்து வீடு : (நாற்காலி—3)
25. சிவக்கொழுந்து வீடு : (மேசை—1, நாற்காலி—1, சாய்வு நாற்காலி—1) 'எது குற்றம்' குறிப்பு - அல்லி.
26. வீதி : 'எது குற்றம்' குறிப்பு - சிவக்கொழுந்து.
நிழல் காட்சி - ரயில் போதல்.

| காட்சி எண் | தேவை |
|---|---|
| 27. | பெங்களூர் இன்பவல்லி வீடு: பெட்டிகளும், சாமான்களும் - சிவக்கொழுந்து. ஐந்து ஆண்டுகளுக்குப்பின்—ஒளி அல்லது குரல். |
| 28. | சென்னை வீதி |
| 29. | பெங்களூர் அல்லி வீடு: (நாற்காலி–3, மேசை–1) கைப் பை - அறவாழி. |
| 30. | சியாமளா வீடு: (சாய்வு நாற்காலி) |
| 31. | பெங்களூர் அல்லி வீடு: (கட்டில்–1, நாற்காலி–2) மருந்து - இன்பவல்லி. |
| 32. | சியாமளா வீடு: சாவிக் கொத்து, செக் புத்தகம், பேனா - சுப்பு. |
| 33. | பெங்களூர் அல்லி வீடு: தண்ணீர் - அல்லி; கடிதங்கள் அடங்கிய 'பைல்' - இன்பவல்லி. |
| 34. | பம்பாய் வீதி: கைப் பை - சுப்பு; புகைப்படம் - சி. ஐ. டி.; விலங்கு, 'அரஸ்ட் வாரண்ட்', பேனா - போலீஸ். |
| 35. | சியாமளா வீடு: (நாற்காலி–2) நாடிக்குழாய், மருந்துப்பெட்டி - பரமேசுவரி. |
| 36. | பெங்களூர் அல்லி வீடு: (நாற்காலி–2, மேசை–1) கடிதத் தாள், பேனா, நாடிக்குழாய், மருந்து, ஐந்து ரூபாய் - அல்லி; திருமண அழைப்பு - சிவக்கொழுந்து. |
| 37. | பூங்கா: 'எது குற்றம்' புத்தகம் - சுப்பு. |
| 38. | பரமேசுவரி வீடு: (மேசை–1, நாற்காலி–2) கடிதத் தாள், பேனா-அல்லி; தபால், மருந்துப் பெட்டி, நாடிக்குழாய், ஊசி மருந்து - பரமேசுவரி. |
| 39. | பூங்கா: இன்பவல்லி கடிதம், பன்னிரண்டு அணா - அல்லி; புத்தகங்கள், 'எது குற்றம்' - புத்தக வியாபாரி. |
| 40. | சென்னை வீதி: இரண்டு ரூபாய் - அல்லி. |
| 41. | ஆஸ்பத்திரி: (படுக்கை–1, பெஞ்சு–1) மருந்துகள் - டாக்டர். |